கரமன் கூத்து

இலங்கை மலையகத் தமிழர் பண்பாட்டு வகைப்பட்ட
அரசியல் பொருண்மிய ஆய்வு

பொன். பிரபாகரன்

புதிய பண்பாட்டு அமைப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காமன் கூத்து

இலங்கை மலையகத் தமிழர் பண்பாட்டு வகைப்பட்ட அரசியல், பொருண்மிய ஆய்வு

பொன். பிரபாகரன்

வெளியீடு
புதிய பண்பாட்டு அமைப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல் தலைப்பு	: **காமன் கூத்து** (இலங்கை மலையக தமிழர் பண்பாட்டு வகைப்பட்ட அரசியல், பொருண்மிய ஆய்வு)
ஆசிரியர்	: பொன். பிரபாகரன் ©
வெளியீடு	: புதிய பண்பாட்டு அமைப்பு
வெளியீட்டு திகதி	: 15-03-2015
நூல் வடிவமைப்பு	: பிரியதர்சினி போல்ராஜ்
பிரதிகள் எண்ணிக்கை	: 300
விலை	: 400/=

Title	: Kaman Koothoo (Elankai Malayaha Thamilar Panpattu Vakaippattu Arasiyal, Porunmiya Aayvu)
Author	: Pon Prabakaran ©
Publication by	: Pudiya Panpattu Amaippu
Designed by	: Priyadharshini Polraj
Date	: 15.03.2015
No of Copies	: 300
Size	: 1/8
Paper	: 70gsm
Price	: 400/=

ISBN 978-955-42176-0-7

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமர்ப்பணம்

எமது பண்பாட்டின் செழுமைமிக்க கூறுகளான
நீதிக் கதைகள், நல்வழி, மகாபாரதம், இராமாயணம்,
நல்லதங்காள் கதையென பழந்தமிழ் கதைகளைக் கூறி
எனது பால்ய பருவத்தே பண்பாட்டு கூர்மதியை, கட்டுக்கடங்காத
ஆர்வத்தை எனக்கேற்படுத்திவிட்டுச் சென்ற,
தம்குடங்கைகளில் ஒரு பல்கலைக்கழகத்தையே எனக்கு
நடத்தித்தந்த, மாமேதைகளான எனது தாய்வழி தாத்தா

அமரர் ம.மோ. நடேசப்பிள்ளை

அவர்களுக்கும்
எனது தாய் வழி அம்மாயி

ந. பச்சையம்மாள்

அவர்களுக்கும்
இந்நூலை சமர்ப்பணம் செய்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளடக்கம்

முன்னுரை

ஆதிக்க நீக்கத்திற்கான கலைப் பண்பாட்டுக்.....

என்னுரை

1. காமன் கூத்து ஒரு வரலாற்று அறிமுகம் 1

1.1. இந்தியப் பண்பாட்டில் காமன்கூத்து. 2

1.2. மலையக தமிழர் பண்பாட்டில் காமன் கூத்து வரலாறு 2

1.3. காமன் கூத்தும் அதன் அரசியல் உட்பொருளும் 4

1.4. மலையக தமிழர் பண்பாட்டில் காமன் வழிபாடும், அதன் அரசியலும், தனித்துவமும். 5

1.4.1.(அ) உளவியல். 5

1.4.2.(ஆ) பண்முகத்தன்மை 8

1.4.3.(இ) சாதிய சமத்துவமும் சமூக நீதியும் 9

1.4.4. (ஈ) பல்லினத்தன்மை 10

1.4.5. (உ) வர்க்கத்தன்மை 10

1.4.6. (ஊ) தேசியத்தன்மை 11

1.4.7. (எ) காமன் கூத்து - நிகழ்களம் - வெளி 13

1.4.8. (ஏ) நிகழ்த்தப்படும் காலம். 14

1.4.9 (ஐ) காமன் கம்பம் கட்டுதல். 14

2.0. மலையக சமூக பொருளாதாரத்தில் காமன் கூத்து 15

2.1. காமன் கூத்தின் சமூக செலவு 16

2.2. காமன் வழிபாட்டின் தோற்றம் பற்றிய வரலாற்று இலக்கிய பதிவுகள் 17

3.0.0 பண்டைத் தமிழரின் பண்பாட்டில் காமன், மன்மதன் வழிபாடும் கருத்தியல் வளர்ச்சியும் இலக்கிய சாட்சியங்கள். 19

4.0.0 காமன் கூத்து மலையக தமிழரின் மரபுரிமை அறிவியலும் தொழில்நுட்பமும் 49

4.1. கிரீடம் 49

4.2. உடை, அணிகலன்கள் 50

4.3. மாலை 51

4.4. கைபுயம் 51

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4.5. இடைப்பட்டி. 51
4.6. நிகழ்வெளி, களம் 52
4.7. பங்குபற்றும் சமூக சக்திகள் 52
4.8. காமன் கூத்தின் பாலினப் பாகுபாடும் தொழிற்பிரிப்பும் 53
4.9. பார்வையாளர்கள் 54
4.10. நேர்த்திக்கடன் வைத்தல்.்காணிக்கை கட்டுதல் 55
4.11. காணிக்கை கட்டுதல் 55
4.12. மருள் கொண்டாடுதல் 56
4.13. மருளடக்குதல். 57
4.14. இசைக்கருவிகள். 57
4.15. தப்பு தயாரித்தல் 58
4.16. மொழிவளம் 58
4.17. பிடி மண்ணெடுத்தல். 59
4.18. கதையமைப்பு காமன் பாலித்தல் 60
4.19. பந்தலிடல். 60
4.20. காமன் எரிப்பு விழா 60
4.21. தேவர் சபை. 60
4.22. மதன் இரதி தர்க்கம் 61
4.23. மலையகத்தில் காமன் கூத்தின் நிகழ்வொழுங்கு 61
5.0. மலைய கூத்தின் தனித்துவமும் மண்வாசனையும் 63
5.1. மலையகத்தில் நிகழ்த்தப்படும் காமன் கூத்து - விசேட பண்புகள். 65
5.2. மாத்து கட்டுதல்/மாற்று கட்டுதல் 66
5.3. ஒப்பனைக் கலை. 67
5.4. ஒப்பனைப் பொருட்கள் 67
5.5. உயிர்த்தெழுதலின் உட்பொருள் 68
5.6. பெண் வேடங்களை பெண்களுக்கு விட்டுக்கொடுத்தல் சில அபாயங்களும் உபாயங்களும். 69
6.0. அரசியல் அதிகாரமற்ற மக்களின் போராயுதமாக பண்பாடு 71
7.0. பாரம்பரிய கூத்துக்களின் நிகழ்வெளியை பெயர்த்தல் பண்பாட்டுக் கருவறுப்பின் தொடக்கம். 73
8.0. திறந்தவெளி சமூக பாடசாலையாக காமன்கூத்து 75

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9.0. **பின்னிணைப்பு 1** 76
காமன் கூத்து பாடல்கள்
பின்னிணைப்பு 2 100
மதன ரதி ஒப்பாரி பாடல் ஆசிரியர்களும் கதை கட்டமைப்புக்களும்
பின்னிணைப்பு 3 106
காமன் கூத்து பாடல் வகைகள்
பின்னிணைப்பு 4 109
இலக்கிய சான்றுகளின் படி மன்மதன் தரித்துள்ள ஆயுதங்கள் சின்னங்கள் படையணிகள்
பின்னிணைப்பு 5 110
இலக்கிய சான்றுகளைப் பெறுவதற்காக பயன்படுத்தப்பட்ட நூற்பட்டியல்
பின்னிணைப்பு 6 111
ஆய்வுக்குரிய தகவல்கள், நூல்கள், தந்துதவியோர்
பின்னிணைப்பு 7 112
பாடல் ஒழுங்கமைப்பு பல்வகை
பின்னிணைப்பு 8 113
உசாத்துணை நூல்கள்
பின்னிணைப்பு 9 115
இலங்கை மலையகத்தில் காமன்கூத்து நிகழ்த்தப்படும் தோட்டங்களில் சில
பின்னிணைப்பு 10 122
சொல்லகராதி
பின்னிணைப்பு 11 126
பண்பாடு குறித்த ஆபிரிக்க எழுத்தாளர்கள்
பின்னிணைப்பு 12 127
ஆட்ட முறைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னுரை

காமன் கூத்து மலையகத் தமிழரின் பண்பாட்டு அடையாளமாக மாத்திரமின்றி சமூக அரங்காகவும் செயற்பட்டுவந்துள்ளது.

சமூகக் கட்டமைப்பில் பண்பாடு மிக முக்கிய அம்சமாகச் செயல்படுகிறது. அதைக் கட்டுடைத்துப் பார்த்தால் அது எந்த வர்க்கத்தின் நலனைப் பிரதிபலிக்கிறது என்பதனைப் புரிந்து கொள்ளலாம்.

பண்பாடு பற்றிய வியாக்கியானங்களும் பலவாயுள்ளன.

பண்பாட்டை உருவாக்கும் காரணிகளுள் அச்சமூகத்தின் புவியியல், சூழல், சமூக அமைப்பு, வரலாறு என்பன பெரும் பங்கு வகிக்கின்றன. மேற்குறிப்பிட்ட காரணிகள் யாவும் நாட்டுக்கு நாடு, பிரதேசத்துக்கு பிரதேசம் வேறுபடுகின்றன. இதனால் அவற்றின் அடியாக எழும் பண்பாடுகளும் வேறுபடுகின்றன. இதனால் பண்பாடு ஒன்றல்ல பல என்றாகின்றது.

ஒரு நாட்டுக்குள்ளேயே, ஒரு பிரதேசத்திற்குள்ளேயே, ஒரு இனத்திற்குள்ளேயே பல பண்பாடுகள் உருவாகவும் இவை வழிகோலுகின்றன. இவ்வாறு பார்க்கையில் பண்பாட்டின் தன்மையே அதன் பன்முகத்தன்மைதான் என்பது தெளிவாகின்றது.

பண்பாடு என்பது ஒரு மக்கள் கூட்டம் தனது வரலாற்று வளர்ச்சியூடாகவும் புவியியல் பின்னணியிலும் தோற்றுவித்துக் கொண்ட ஆத்மார்த்த கருத்துக்கள், பௌதீக நுகர் பொருட்கள், வாழ்க்கை முறைகள், மத நடைமுறைகள், சமூகப் பெறுமானங்கள், கலைகள் என்பனவற்றின் தொகுதி எனலாம். இவை நிரந்தரமானவை அல்ல. சமூகத்தின் அடிக்கட்டுமானம் மாற தாமும் மாறும் தன்மையுடையவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்பாடு என்பது மாறாச் சொத்தாக நமக்கு கொடுக்கப்பட்டதன்று. அது ஒவ்வொரு தலைமுறையைச் சேர்ந்தவர்களால் காலம்தோறும் ஆண்டுதோறும் ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு நிமிடமும் ஒவ்வொரு நொடியும் புதுப்பித்துக் கொண்டே மாறுகிறது.

இது இயல்பாகவும் மாறும், திட்டமிட்ட செயல் மூலமும் மாறும்.

ஒரு நாட்டில் அல்லது ஒரு இனத்துள் அல்லது ஒரு பிரதேசத்துள் பல்வேறு பண்பாடுகள் நிலவும். எனினும் சமனற்ற பொருளாதார வளர்ச்சி காரணமாக அப்பண்பாடுகளுள் பொருளாதார அதிகாரம் அறிவு அதிகாரம் கொண்ட மேனிலைப்பட்டோரின் பண்பாடே முழுச் சமூகத்தின் பண்பாடாகக் கட்டமைக்கப்படும். இவ்வகையில் சமூகத்தில் சமனற்ற வளர்ச்சியின் பின்னிலையில் நிற்கும் மலையகப் பண்பாடு பெரிதாக இதுவரை பேசப்படவில்லை. எனினும் புதிய சிந்தனைகளும் சமூக மாற்றங்களும் அரசியல் இயக்கங்களும் தோன்றத் தொடங்கின. படித்த இளைஞர்கள் மலையகத்தில் பெருவாரியாக 1970 களிலிருந்து உருவாக ஆரம்பித்துவிட்டனர்.

ஏனைய பிரதேசங்கள் தமது பண்பாட்டு அடையாளமாக தத் தமக்குரிய கலைவடிவங்களை முன்வைத்த போது மலையகமும் தனது பண்பாட்டின் கலையடையாளங்களைத் தேடலாயிற்று. முன்வைக்கலாயிற்று.

இதன் பல வெளிப்பாடுகளுள் ஒன்றே காமன் கூத்தில் அக்கறையும், அதனை வெளிப்படுத்தலும் ஆகும்.

1960களில் பேராசிரியர் வித்தியானந்தன் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இலங்கைத் தமிழரின் கலையடையாளங்களாக மட்டக்களப்புப் பறைமேளக் கூத்தையும், வடமோடி, தென்மோடி கூத்துக்களையும் யாழ்ப்பாண இசை நாடகத்தையும் அறிமுகப்படுத்தினார். பேராதனைப் பல்கலைக்கழக திறந்த வெளி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரங்கில் பல்லாயிரக் கணக்கான மாணவர் முன் இவை மேடையேறின.

மலையகத்தில் ஆடப்பட்ட காமன் கூத்து, பொன்னர் சங்கர், அருச்சுனன் தவசு ஆகியவை அன்று வெளியுலகுக்குத் தெரியா மையால் அவை அருகிலிருந்தும் அவரால் அறிமுகப்படுத்தப்படாமல் போயிருக்கலாம். எனினும் 1970களில் திருச்செந்தூரன் மலையகக் கலை அடையாளமாக காமன் கூத்தை கொழும்பில் வெளிப் படுத்துகிறார்.

மலையகம் தன் கலையடையாளத்தைப் பேசத் தொடங்கிய காலங்கள் இவை.

அதைத் தொடர்ந்து மலையகக் கூத்துக்கள் பற்றிய நூல்கள், கட்டுரைகள் வர ஆரம்பிக்கின்றன. மாத்தளை வடிவேலன், அன்ரனிஜீவா, சோதிமலர் ரவீந்திரன், சந்தனம், சச்சிதானந்தம், காரைசுந்தரம் பிள்ளை, லெனின் மதிவாணன், பேரா.கா.சிவத்தம்பி, சு. முரளிதரன் ஹரிஸ் போன்றோரை இது சம்பந்தமாக இங்கு குறிப்பிடலாம்.

காரைசுந்தரம் பிள்ளையின் ஈழத்து மலையகக் கூத்துக்கள் தொடக்கம் (2005) கூத்தில் மலையக தேசிய அரங்கு தொடர் பான உரையாடல் (2013) வரை ஏராளமான நூல்களும், கட்டுரைகளும் காமன் கூத்து பற்றி வந்துவிட்டன. இவற்றை 3 வகைக்குள் அடக்கிவிடலாம்,

ஒன்று காமன் கூத்து நடைபெறும் முறையை விபரணமாக தரல்.

இரண்டு அதன் சமூக பின்னணியை விளக்கல்.

மூன்று அதனைச் சமூக அரங்காகக் காணல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை நான் முன் சொன்ன அடையாளம் சமூக அரங்கு என்ப வற்றுள் அடங்கும்.

பொன். பிரபாகரனின் இந்நூல் 8 இயல்களைக் கொண்டுள்ளது.

1. காமன்கூத்து பற்றிய வரலாற்று அறிமுகம்
2. மலையகப் பொருளாதார சமூகத்தில் காமன் கூத்து
3. பண்டைத் தமிழர் பண்பாட்டில் காமன், மன்மதன் வழிபாடும் கருத்தியல் வளர்ச்சியும்
4. காமன் கூத்து மலையகத் தமிழரின் மரபுரிமை
5. மலையகக் கூத்தில் தனித்துவமும் மண்வாசனையும்
6. அரசியல் அதிகாரமற்ற மக்களின் போராயுதமாகக் காமன் கூத்து
7. பாரம்பரியக் கூத்துக்களின் நிகழ்வெளியைப் பெயர்த்தல் பண்பாட்டுச் கருவறுப்பின் தொடக்கம்
8. திறந்தவெளிப் பாடசாலையாகக் காமன் கூத்து

இத்தலைப்புக்கள் நூலில் என்ன உள்ளன என்பதை தெளிவாகக் காட்டுகின்றன. பின்னிணைப்புகள் நூலுக்கு மேலும் வலு வூட்டுகின்றன.

தமிழர் பண்பாட்டோடும் மலையக தமிழர் பண்பாட்டோடும் காமன் கூத்தை இணைத்துப் பார்க்கும் பிரபாகரன் அதனை மலையகத் தமிழரின் மரபுரிமையாகவும் தனித்துவமான ஒரு சமூகஅரங்காகவும் அரசியல் அதிகாரமற்ற மக்களின் போராயுதமாகவும் காண்பதுடன் அது அச்சூழலிலேயே நிகழ்த்தப்பட வேண்டும் என்ற, பிறசூழலில் நடத்துவது அழிவைத் தரும் என்ற வாதங்களை மூன்றாம் உலக நாடுகளில் அறிஞர்களின் ஆதாரங்களுடன் வெளிப்படுத்துகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காமன் கூத்து பற்றி இதுவரை வந்த ஏனைய நூல்களிலிருந்து இவர் வேறுபடும் இடம் இதுவேயாகும்.

மலையகத்தின் திறந்தவெளிப் பாடசாலையாக காமன் கூத்து அமைந்துள்ளமையை விவாதித்துள்ளார்.

பின்னிணைப்பில் மலையகத்தில் 210 இடங்களில் காமன் கூத்து நிகழ்த்தப்படுகின்றது என்று அவர் தரும் செய்தி நமக்கு வியப்பைத் தருகிறது. சற்று யோசிக்கவும் வைக்கிறது.

கல்வியில் பெரிதும் முன்னேறாத, சமூக மாற்றத்தை பெரிய அளவில் இன்னும் பெறாத மலையகத்தில் காமன் கூத்து திறந்தவெளி பாடசாலையாக இருப்பதும் அம்மக்களின் சிந்தனை களை வடிவமைப்பதில் பெரும் பங்கெடுப்பதும் அந்நிகழ்த்துகை மூலம் அவர்கள் உள, உடல், நலன் பெறுவதும் அதன் மூலம் அடங்கி வைக்கப்பட்ட தம் மன உணர்வுகளை வெளிப்படுத்தி ஆறுதல் பெறுவதும் புரிந்து கொள்ளக் கூடியதே.

காமன் - சிவன் முரண் இன்னும் நமது ஆய்வாளர்களால் பெரிதாக ஆராயப்படவில்லை. அதற்குள் ஒரு பெரிய வரலாறே அடங்கி யுள்ளது.

சிவனைக் காமன் எதிர்ப்பதும் காமனைச் சிவன் எரிப்பதும் பின்னர் அவனை உயிர்ப்பித்து ஒரு சமரசத்திற்கு வருவதும். மேலாதிக்கப் பண்பாட்டுக்கும் இருந்த பண்பாட்டுக்குமான மோதலாகவும் இறு தியில் ஏற்பட்ட சமரசமாகவும் கூடப் பார்க்கலாம்.

எனினும் அக்கூத்தில் மேலாதிக்க எதிர்ப்பு அம்சங்கள் நிறைய உள்ளன. வெளிப்படுத்த முடியாத தமது எதிர்ப்பு உணர்வுகளை இத்தகைய கலை வடிவங்கள் மூலம் வெளிப்படுத்தி உளநலம் பெற்றனர் உழைக்கும் மக்கள். அவர்களை அறியாமலேயே அந்த ஆயுதத்தைப் பிரயோசித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போது காலம் மாறுகிறது. கல்விக்கூடங்கள் பெருகுகின்றன. சமூக அமைப்பு மாறுகிறது. வாழ்க்கை மாறுகிறது. பன்னாட்டு முதலாளித்துவத்தினதும், உலகமயமாக்கத்தினதும் பேரலைகள் எகிறிப்பாய்கின்றன. எல்லாம் தலைகீழ்.

இந்நிலையில் நாம் செய்ய வேண்டியவை யாவை? என்பது பற்றிச் சிந்திப்பதற்குக் கிடைக்கும் தெப்பங்களில் ஒன்றாக இந்நூலும் அமைகிறது.

பொன் பிரபாகரன் ஒரு அரங்கவியலாளரானமையினால் காமன் கூத்தின் அரங்கத் தன்மைகளை அவர் வெளிக் கொணர்கிறார். அரங்கு, நிகழ்வெளி, பார்வையாளர், ஆற்றுகை முறைமை, வாத்தியங்கள், ஒப்பனை, உடை அமைப்பு என்பன பற்றி அவர் விஸ்தாரமாகக் கூறுவது இதற்குக் சான்றாகும். ஓர் அரங்க வியலாளனை இங்கு காணுகிறோம்.

இலக்கிய ஆய்வாகவும் இது அமைகிறது. அத்தியாயப் பகுப்பிலும், பின்னிணைப்பிலும் அவர் தரும் காமன் கூத்துப் பாடல்களிலும், நூற்பட்டியல்களிலும், பாடல் வகைகளிலும், உசாத்துணை நூல்களிலும், சொல்லகராதி, அரும்பதங்கள் ஆகியவற்றிலும் ஒரு ஆய்வாளனைக் காணுகிறோம்.

அமில் கப்பிரால், சினுவா அச்சிப்பே நூகிவாங்தியங்கோ ஆகியோரை மேற்கோள் காட்டுமிடத்தும், சமூகம் பற்றி பேசுமிடத்தும் ஓர் அரசியலாளனைக் காணுகிறோம்.

அரங்கவியலாளன், ஆராய்ச்சியாளன், அரசியலாளன் என்ற அவரது கலவை நூலில் தெரிகிறது.

பிரபாகரன் ஒரு கருத்தியலாளர் (IDIOLOGIST) மாத்திரமன்று ஒரு செயற்பாட்டாளனும் (ACTIVIST) ஆவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் கிழக்குப் பல்கலைகழகத்தில் நுண்கலைத் துறைத் தலை வராகப் பணிபுரிந்த போது உலக நாடகதின் விழாவை 1996 இலிருந்து நடத்தி வந்தோம்.

அதில் நாம் மக்கள் கலைகளான பறைமேளக்கூத்து, வசந்தன் கூத்து, மகுடிக் கூத்து, தென்மோடி, வடமோடி கூத்துக்களை கிழக்குப் பல்கலைக் கழக வெட்டவெளியிலும், வட்டக் களரி யிலும் நடத்தி மாணாக்கருக்கு அறிமுகம் செய்தோம். (அதனை இன்று பலர் அறிவார். அறிந்த இதில் ஈடுபட்ட அங்குள்ள பெரி யோரும் அச் செயல்கள் பற்றி மாணாக்கருக்கு எடுத்துரைப்பதில்லை)

அச்சமயம் 2002இல் தமது குழுவினருடன் பிரபாகரன் எமக்கு அறிமுகமானார். அவ்வாண்டு நாடக விழாவில் அவர்கள் காமன் கூத்து, அருச்சுனன் தபசு, பொன்னர் சங்கர், மலையக நாட்டார் பாடல், நவீன நாடகம் என 5 நிகழ்வுகள் அளித்தனர். காமன் கூத்து திறந்த வெளியில் நிகழ்த்தப்பட்டது.

அப் பெரும் குழுவைத் தலைமை தாங்கி அழைத்து வந்ததுடன் அவர்களை முன் நின்றியக்கியவரும் அவரே. அருகிலிருந்த பேராதனைப் பல்கலைகழகம் அவர்களை அழைக்காத வேளை தூர இருந்த கிழக்குப் பல்கலைக்கழகம் அவர்களை அழைத்தது.

அதன் பின் காமன் கூத்தை சமூக அரங்காகப் பிரச்சாரம் பண்ணும் பணியில் அவர் ஈடுபடுவதை நான் அவதானித்துள்ளேன்

நடைமுறை என்ற உரை கல்லில் நமது கருத்துகளை உரசித்தான் அதன் உண்மை, பொய்ம்மைகளை அறிந்து கொள்ள முடியும்.

நடைமுறைக்கு ஏற்ப தந்துரோபாயங்களை அப்போது தான் அமைத்துக் கொள்ளமுடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைமுறை என்ற உரை கல்லில் கருத்துகளை உரசும்போது நமது கருத்துகள் சரிபட்டுவராதவிடத்து அவற்றை மாற்றிச் செல்லும் பக்குவமும் செயற்பாட்டாளர்கட்கு மிக அவசியம்.

கடந்த ஒரு தசாப்த காலத்துக்கு மேல் இச் செயலில் ஈடுபட்டு உழைத்து வரும் பிரபாகரன், தன் பயணத்தில் பல வெற்றிகளையும் பல தோல்விகளையும் சந்தித்திருப்பார். பல நூதன மனிதர்களை யும் கண்டிருப்பார்.

அனுபவம் அவருக்கு பல பாடங்களை புகட்டியிருக்கும்
அனுபவமே சிறந்த ஆசான்.
அது அவர்க்கு எப்போதும் நல்லறிவூட்டி வழிநடத்தும்

பிரபாகரனுக்கு என் வாழ்த்துக்கள்.

10.3.2015 சி. மௌனகுரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆதிக்க நீக்கத்திற்கான கலைப் பண்பாட்டுக் களங்களாக மீளுருவாக்கம் பெறும் காமன் பொட்டல்கள்"

மலையக மக்களின் தேசியப் பண்பாட்டு அடையாளமாக காமன் கூத்தும் விளங்கி வருகின்றது.

மீளவும் மீளவும் பெயர்க்கப்பட்டு சிதறடிக்கப்படும் சமூகமாக மலையக சமூகம் இருந்து வருகின்றது. நிலவுரிமையற்ற இந்த மக்கள் சமூகத்தின் இணைப்பு சக்தியாக விளங்கி வருபவற்றுள் காமன் கூத்திற்கு முக்கிய இடம் உண்டு.

தமிழகத்திலிருந்து இலங்கையின் மத்திய மலைநாட்டுக்கும், மத்திய மலைநாட்டிலிருந்து மீண்டும் இந்தியாவின் பல பகுதிகளுக்கும் பிரித்தனுப்பப்பட்ட மக்கள் கூட்டம் மீளவும் சமூகமாக இணைந்தெழுவதில் காமன் கூத்து பெரும்பங்கு வகித்திருப்பதை தெளிவாக காணமுடியும்.

இந்தவகையில் இந்தியாவின் நீலகிரி மலைத்தொடர்ப் பகுதிகளில் மிகவும் கடினமான சூழ்நிலைகளில் குடியமர்த்தப்பட்ட மக்கள் கூட்டம் மாண்புடன் மீண்டெழுந்து நிலை கொண்டிருக்கும் பயணத்தில் காமன் கூத்து ஆற்றிவரும் பங்கு அளப்பரியது.

இவ்வாறே இனரீதியான தாக்குதலுக்கு உட்பட்டு இலங்கையின் வடபகுதிகளில் குடியேறிய மக்கள் கூட்டம் விளிம்புநிலை மனிதர்களாக புறக்கணிப்புகளுக்கு ஆளான சூழ்நிலைகளிலும் அவர்களை ஒன்றிணைக்கும் சக்தியாக காமன் கூத்து விளங்கி வருவது அவதானத்திற்குரியது.

எந்தெந்த வகைகளில் எல்லாம் மக்கள் கூட்டம் சிதறடிக்கப்படும் சூழ்நிலைகளில் எல்லாம் ஒன்றிணைக்கும் காந்தப்புலமாக காமன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூத்து தொழிற்பட்டு வருவதை மலையக சமூகப் பண்பாட்டு வரலாற்றில் காணமுடிகிறது.

ஆயினும் நவீன அறிவும் நகரமயமாக்கமும் மக்களை ஒன்றிணைக்கும் வலுவான பண்பாட்டு அம்சங்களை அற்றுப்போகச் செய்து காலனித்துவ தளைகளுள் வீழ்த்தி விடுவதில் கணிசமான வெற்றியைக் கண்டிருக்கிறது என்றே கூறவும் வேண்டும்.

காலாதிகால பல தலைமுறைகளின் வாழ்வியலோடு நிரூபிக்கப் பட்ட அறிவுத் திறன் என்பவை விஞ்ஞான ரீதியான நிரூபிக்கப்படாத மூடநம்பிக்கைகள் என காலனித்துவ அறிவு கட்டமைத்த நம்பிக்கை ஆதிக்கம் செலுத்துவதாகவும் அதிகார பூர்வமானதாகவும் நிலைநிறுத்தப்பட்டிருக்கின்றது.

விஞ்ஞான ரீதியானதும் அறிவு பூர்வமானதுமான மதிப்பீடுகள் இன்றியே பாரம்பரியமானதும் உள்ளூர் சார்ந்ததுமான அறிவுத் திறன் என்பன அழித்தொழிப்பிற்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறது. காலனித்துவ கல்வியும் அதனை முன்னெடுத்துவரும் பாடசாலை கள், பல்கலைக்கழகங்கள் என்பவை இன்றுவரை இந்தவகை யிலேயே இயங்கி வருகின்றன.

காலனித்துவத்திற்கு முன்னானவையெல்லாம் மூடநம்பிக்கைகள், பாமரத்தனமானவை, நாகரீகமற்றவை என்ற கருத்தாக்கப் புள்ளியி லிருந்தே நவீனயுகம் வரலாற்றை ஆரம்பிக்கிறது. அந்த ஆதிக்க வரலாற்றை முன்னெடுப்பவர்களாக அதற்கு உட்படுத்தப்பட்டிருப்பவர் களையே ஆக்கியும் வைத்திருக்கிறது. காலனித்துவத்தின் பலம் என்பதே ஆதிக்கத்தை விரும்பி ஏற்று முற்போக்கு முகத்துடன் முன்னெடுக்க வைத்திருப்பது தான்.

இந்தவகையில் காலனித்துவம் நாகரீகமற்றது, விஞ்ஞான பூர்வமற்றதென கட்டமைத்த பாரம்பரிய மற்றும் உள்ளூர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பாடுகளில் பங்கெடுப்பதும், அதனை முன்னெடுப்பதும் நாகரீகமற்றதும் பிற்போக்கானதும், பாமரத் தன்மையானதும் என்ற பதிவுகள் புத்தியில் ஏற்றப்பட்டு இயங்கு நிலையில் வைத்திருக்கப்படுகிறது.

இந்த பின்னணியில் பாரம்பரியங்கள் உள்:ர் அறிவுமுறைகள் பற்றிய தேடல் என்பது பெருமிதம் பேணலுக்குரியவை அல்ல. மாறாக கேள்விக்கு உட்படுத்தல்களுக்கு ஊடான மீள்கண்டு பிடித்தல்களுக்கும் மீள் பயன்படுத்தலுக்குமான செயற்பாடுகளாக அமைகின்றன.

இந்த வகையிலேயே கூத்து மீளுருவாக்கம் என்பது ஈழத்து அரங்கச் சூழலில் பதினைந்து ஆண்டுகளுக்கும் மேலாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. உள்:ர் அறிவுத் திறன்களின் மீள்கண்டுபிடிப்புகளுக்கும் புத்தாக்கங்களுக்குமான நடைமுறைப் பயணமும் பதினைந்து ஆண்டுகளுக்கும் மேலாக செயல் முனைப்பு பெற்று வருகின்றது.

இது தற்சார்பான சமூகப் பொருளாதாரப் பண்பாட்டு வளர்ச்சிக்கானது. மக்கள் கூட்டுறவுகளுக்கூடான உலகந்தழுவிய வலைப்பின்னல்களின் கண்ணியாக அமைகின்றது.

இந்தப் பின்னணியிலேயே காமன் கூத்து பற்றிய பொன். பிரபாகரனின் நூல் முக்கியத்துவம் உடையதாகிறது. மரபு ரீதியாக நவீன அறிவுப்பரப்பில் நிகழ்த்தப்பட்டு வரும் பாரம்பரியங்களில் ஆவணப்படுத்தல் அல்ல இந்த நூல். இது இயங்கு நிலையில் காமன் கூத்தின் சமகாலத் தேவையையும் அதன் சவால்களையும் கருத்திற்கு கொண்டு வருகிறது.

புராம்பரிய அரங்குகளின் முழுமையான பரிமாணங்களை அறியாது யானை பார்த்த கதையாக அணுகப்படும் நவீன அரங்கச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூழலில் காமன் கூத்தின் முழுமையான பரிமாணங்களை வெளிக்கொண்டு வருவதில் முனைப்புக் கொண்டிருப்பதில் இந்நூல் வித்தியாசமானதாக அமைகின்றது.

பொன். பிரபாகரன் ஆய்வு செய்வதற்காக தகவல்களை சேகரிக்க காமன் கூத்தில் ஈடுபடுபவர் அல்ல. மாறாக காமன் கூத்தின் இயங்கு நிலையின் முக்கியத்துவத்தினை உணர்ந்து அதனை முன்னெடுப்பதில் பாரம்பரியக் கலைஞர்கள் சமூகங்களுக்கு சமாந்தரமாக இயக்கம் கொண்டிருக்கும் சமூகப் பண்பாட்டு செயற்பாட்டாளர்களில் முன்னோடிகளில் ஒருவராக இருப்பவர்.

மக்களை சமூகமயப்படுத்துவதில் காமன் கூத்தின் முக்கியத்துவத்தையும் அதன்போது கேள்விற்குட்படுத்தப்பட வேண்டியவற்றின் தேவையையும் உணர்ந்து கலை பண்பாட்டு செயல்வாதமாக முன்னெடுக்கப்பட்டுவரும் சமூக பண்பாட்டு செயல்மைய உரையாடல்களின் வலுவான கண்ணியாக இருப்பவர். மக்களின் உழைப்பிலும் உருவாக்கத்திலும் இயங்கிவரும் காமன் கூத்துப் போன்ற சமூக மையப்பட்ட பண்பாட்டு நடவடிக்கைகளில் இருந்து மக்களை அந்நியப்படுத்தி அவர்களை நுகர்வோராக கீழ்நிலைப்படுத்தும் 'நவீனமயமாக்கம்' என்ற கலைப் பண்பாட்டு மோசடிகளுக்கு எதிரான குரலாகவும், பாரம்பரியக் கலைகள் அருகிவிட்டன என்ற பொய்யுரைப்புகளை தகர்க்கும் ஆவண-மாகவும், காமன் கூத்தின் சமகால முக்கியத்துவத்தை உணர்த்தும் கையேடாக இந்நூல் அமைகின்றது.

நவீன அறிவியல் ஆய்வுகள் என்ற பெயரிலான புனைவுகளுக்கும் யதார்த்தத்திற்குமாக நிகழ்ந்து வரும் உரையாடல்களை மேலும் வலுப்படுத்தும் ஊக்கியாகவும் இந்நூல் அமைந்திருப்பது அதன் சிறப்பாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனியன்களாக்கப்பட்டு, அந்நியப்படுத்தப்பட்டு காலனித்துவ, நவ காலனித்துவ பிடிகளில் சிக்கியிருக்கின்ற நிலைமைகளில் இருந்தும், சாதி, பால் போன்ற உள்ளக ஆதிக்கங்களில் இருந்தும் விடுவிக்கும் கலைப் பண்பாட்டுக் களங்களாக காமன் பொட்டல்கள் மீளுருவாக்கம் வருகின்றன.

இந்தச் செயல்மைய உரையாடல்கள் தொடரும், வளரும், வலுக்கொள்ளும்.

கலாநிதி சி. ஜெயசங்கர்
முதுநிலை விரிவுரையாளர்
நுண்கலைத்துறை
கிழக்குப்பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னுரை

கடந்த 500 ஆண்டுகளாக தொலைந்துவிட்ட சுயத்தைத் தேடி மூன்றாமுலக மக்களின் நவீன அரசியல், பொருண்மிய சூழலில் அடையாளப்படுத்தப்படும் மக்கள் முடிவற்ற நெடும்பயணம் மேற்கொண்டுள்ளார்கள்.

மன்னர்களின், மாமன்னர்களின் இடங்களையெல்லாம் நவீன அரச அதிகாரத்துவ சக்திகளும், பெரும்முதலாளிய நிறுவனங்களும், நவகாலணிய சக்திகளும் பிடித்துக்கொண்டார்கள்.

அறிவும், புலமையும் ஆற்றலும் ஆளும் குழுமங்களை அசையாத பீடங்களில் குடியிருக்கச் செய்வதற்கான கருவிகளாக மாறிப்போயிருக்கின்றன.

தொடர்பூடகங்கள் மக்களுடையவையல்ல. அவை, கண்ணுக்குப் புரியாத எஜமானருக்காக மக்களை தகவமைக்கின்றன, வழிநடத்துகின்றன.

உழைத்துக்களைத்த கோடானுகோடி மக்கள் வறுமை, பிணி, பசி, பட்டினிக் கொடுமை, கல்வியறிவின்மை, சுக நலவசதியின்மை, வீடின்மை, வருமானமின்மை, நோய்களென நொய்ந்துகொண்டுள்ளனர்.

மனித முகமேயறியாத உலகவங்கியே கூட வருமான இடைவெளி அதிகரிக்கிறது. வறுமை அதிகரிக்கிறது என கூச்சலிடுகின்றது.

எங்கெங்கும் மனிதர்கள் இருக்கிறார்கள், மனிதத்தைக் காணவில்லை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றாம் உலகின் அரசியல் சமூகங்களில் பலவற்றுக்கு அரசுகளில்லை, தேசிய அரசுகளில்லாவிட்டால் என்ன நாங்கள் ஒரு தேசமென கோசமிடும் பலநூறு தேசிய இனங்களுக்கு வல்லாதிக்க வல்லரக்கர்களை எதிர்கொண்டு போராடும் வலிமையில்லை. எழுந்தால் வீழ்த்தப்படுகிறார்கள், எழாவிட்டால் மிதிக்கப்படுகிறார்கள்.

அல்ஜீரிய விடுதலை இயக்கத்தைப் பற்றி எழுதும் பெனான் எழுதுகிறார், பிரான்சிய காலனிகளுக்கெதிராக அல்ஜீரியர் பயமுறுத்தும் சூனிய காரர்களைக் கொண்டு வருகிறார்கள் என்று மேலும், "நாங்கள் காற்றை விதைத்தோம் அவர்கள் சூறாவளியாக வருகின்றார்கள்" என்று எழுதுகின்றார். உலகெங்கும் ஒடுக்கப்பட்டுள்ள மக்களை விடுவிப்பதற்கான உளவியல் கருவிகள், நூட்பங்கள், பண்பாட்டு ஆயுதங்கள் செயலாக்க நடைமுறைகள், செயற்தளங்கள், சுயத்துக்கான தேடுகருவிகள் விரவிக்கிடக்கின்றன.

மலையக மக்கள் பண்பாட்டின் மலையக தமிழரின், பாட்டாளிவர்க்கத்தின் பண்பாட்டு கருவூலங்கள் ஆக்கத்திறன்மிக்கவை. அடிமை வாழ்வில் இருந்து விடுதலை செய்வதற்கான ஆற்றல்கள் பொதிந்தவை.

அவ்வகையில் இலங்கை மலையகத்தமிழரின் பண்பாட்டின் மணிமகுடமாக திகழும் காமன்கூத்து சக்திமிக்க கலைபண்பாட்டு கருவியாகும்.

இறுதியாக இவ்வாய்வை மேற்கொள்வதற்கு ஏதுவாக நடைபெற்ற யாழ்ப்பாணம் திருமறை கலாமன்றத்தின் கூத்து விழாவும், அதனையொட்டி நடந்த கருத்தரங்கமும் முக்கியமானவை. இக்கருத்தரங்கில் ஒரு ஆய்வுக் கட்டுரையை சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொண்ட திரு.ஜோன்சன் ராஜ்குமார், திரு.சி.ஜெய்சங்கர்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகியோருக்கும், இதற்கான தகவல்களை திரட்டவும் குறிப்பாக இலக்கிய சான்றுகளை ஆராய்வதற்கு உதவிய நூல்களை தந்துதவிய பொகவந்தலாவ சென்மேரிஸ் மத்திய கல்லூரி யின் அப்போதைய நூலக பொறுப்பாளராகவிருந்த திரு.சோ. சிறிதரன் அவர்களுக்கும், பத்து ஆண்டுகளுக்குப் பிறகு இறுதியாக தற்போதைய நூலாக்க முயற்சியின்போது மூலநூல்களை ஒப்பிட்டு ஆராய்வதற்கு மீண்டும் வாய்ப்பளித்த நூலகப்பொறுப்பாசிரியரான திரு. எஸ். சிவகுமார் அவர்களுக்கும் கடமைப்பட்டுள்ளேன்.

மேலும் இந்நூலினை முதன் முதலில் கணணிப் பதிவேற்றிய செல்வி லூர்ட்ஸ் அவர்களுக்கும், 2009ம் ஆண்டு மீள் கணிணிப்பதிவேற்றிய திரு. ப.விஜயகாந்தன், பீ. ஜெகதீஸ்வரன் ஆகியோருக்கும் கடமைப்பட்டுள்ளேன்.

இறுதியாக இவ்வாய்வு, நூலாக்கம் பெறுவதற்கு கடுமையான அழுத்தங்களை தந்து ஒரு வேள்வியாக இதனை முன்னெடுத்த திரு. முத்து கணகதாசன் (புதிய பண்பாட்டு அமைப்பு) அவர்களுக்கும், இதனை நேர்த்தியாக மீள் வடிவமைப்பு செய்த திருமதி. பிரிய தர்சினி போல்ராஜ் அவர்களுக்கும் செவ்வை பார்க்க உதவிய எனது மனைவி பெ.சசிகலாவுக்கும் எனது இதய பூர்வமான நன்றிகள் உரித்தாகும்.

பொன். பிரபாகரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. காமன் கூத்து
ஒரு வரலாற்று அறிமுகம்

காமனை ஒரு காதல் தெய்வமாக வழிபடும் பாரம்பரியத்திற்கு 2500 ஆண்டுகளுக்கு மேற்பட்ட வரலாறு இருக்கலாம். ஏனெனில் கௌதம புத்தரின் பௌத்த போதனைக் கதைகளில் இடம்பெறும் காம வெறுப்பு கதைகளுக்கு 2500 ஆண்டுகால வரலாறு இருக்கின்றது. இருக்கு வேதத்தில் காமனை போற்றியும், பௌத்த, சைன்ய கதைகளில் காமத்தை வெறுத்தும் பற்பல செய்திகள் விரவிக்கிடக்க காணப்படுகின்றன.

1. தமிழர் பண்பாட்டில் காமக்கடவுளான "மன்மதனை" கிரேக்கப் பண்பாட்டின் "ஈரோஸ்" தெய்வத்திற்கும் உரோமப் பண்பாட்டில் "கூப்பிட்" கடவுளுக்கும் ஒப்பிட்டுக் கூறமுடியும்.
2. தமிழ் பெருங்காப்பியமான சிலப்பதிகாரத்திலோ, கண்ணகி "காமவேள் கோட்டம்" சென்று வழிபடுவதான செய்திகள் காணக்கிடக்கின்றன. அதே போல சீவக சிந்தாமணியில் சீவகனை மணமகனாகப் பெறவேண்டி "சுரமஞ்சரி" காமவழிபாட்டில் ஈடுபட்டதான செய்திகள் காணப்படுகின்றன.
3. நாச்சியார் திருமொழியில் காமன் பண்டிகை கொண்டாடப்படும் மாதம், நாள் என்பன குறிப்பிடப்பட்டுள்ளன.
4. கண்ணகியோ "கணவனை விடுத்து காமனை வணங்குவது பீடன்று" என்று சிலப்பதிகாரத்திலே கூறுகின்றாள். ஆண்டாளின் சரிதையில் திருமாலை கணவனாகப் பெறவேண்டி ஆண்டாள் காமவழிபாடு செய்ததாகக் கூறப்படுகின்றது. சங்கமருவிய காலத்தில் பெண்கள் காமவேல் கோட்டம் புகுவதற்கு முன்னர் சோமகுண்டம், சூரியகுண்டம் ஆகிய துறைகளில் வழிபாடு செய்ததான செய்திகள் காணப்படுகின்றன. ரிக்வேதம், வாமன புராணம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தப்புராணம் என்பவற்றிலும் காமன் வழிபாடுபற்றிய செய்திகளும் தகவல்களும் காணப்படுகின்றன.

5. புராணங்களின்படி காமன் "திருமாலின் மகன்" எனவும், "உண்மையின் மகன்" எனவும், "தர்மத்தின் மகன்" எனவும், கிருஸ்ணனுக்கு "பிரத்தியுமான்" என்ற பெயரில் தோன்றிய மகன் எனவும், "பிரம்மனின் மகன்" எனவும் கூறப்பட்டுள்ளன. எனினும் காமனின் மனைவியாக இரதியே அனைத்திலும் குறிப்பிடப்படுகின்றாள்.

காமனுக்கு "அநிருத்தன்" என்ற மகனும், "சாமன்" என்ற தம்பியும் இருப்பதாகக் கூறப்படுகின்றது.

1.1. இந்தியப் பண்பாட்டில் காமன்கூத்து

இந்தியப் பண்பாட்டில் காமனுக்கு பல்வேறு வகையான கோவில்களும் விழாக்களும் கொண்டாடப்படுகின்றன. வட இந்தியாவில் ஹோலிப் பண்டிகையும், மதன் மகாவிழாவும், மதன சதுர்த்தியும், மதனதிருயேதசியும் கொண்டாடப்படுகின்றன. காமக்கோட்டம் என்ற கோவில்களும் உண்டு.

தென் தமிழகத்திலோ கம்பம் நாட்டி காமன் எரிந்து விட்டான் எனவும், எரிக்கப்படவில்லை எனவும் காமன் கூத்து நிகழ்த்தப்படுகின்றது.

1.2. மலையக தமிழர் பண்பாட்டில் காமன் கூத்து வரலாறு

மலையக தமிழர்கள் பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் 1824ம் ஆண்டு தொடக்கம் பெருந்தோட்டச் செய்கைக்காக கொண்டுவரப்பட்டவர்கள் 1824 - 1867ம் ஆண்டுவரை சிங்கோரா, கொக்கோ, கோப்பி ஆகிய பணப்பயிர்கள் மத்திய மலைநாட்டில் செய்கைப் பண்ணப்பட்டன. எனினும் இவை ஒன்றன் பின் ஒன்றாக தோழ்வியுற்றன. 1867ம் ஆண்டு கோப்பியை கொடிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூஞ்சன நோய் தாக்கி முற்றிலுமாக அழிக்கும் வரை 40 - 50 ஆண்டுகளாக தென்னிந்தியக் கிராமங்களிலிருந்து மலையகத்துக்கு வருவதும் மீண்டும் திரும்பி கிராமங்களுக்கு செல்வதுமான வாழ் நிலையிலும் தமது பாரம்பரியங்களை சிறிது சிறிதாக விதைத்திட முயன்றுள்ளனர். பல்லாயிரக்கணக்கான சிறு தெய்வங்களையும், குலதெய்வங்களையும் மரத்தடிகளில் நாட்டி வழிபட்ட மலையக மக்கள் தமது நாட்டார் பாடல்களுடாக தம் துயரங்களையும், வேதனைகளையும், மகிழ்ச்சிகளையும், சாதனைகளையும், கனவுகளையும் வெளிப்படுத்த தவறவில்லை. இவை தமிழகப் பண்பாட்டு பாரம்பரியத்தின் தொடர்ச்சிகளையும் அதேவேளை மலையக பெருந்தோட்ட உற்பத்தி உறவுகள், அவற்றின் நிலைமாற்றங்கள், அசைவியக்கங்கள் சார்ந்தும் புதிய பொருளையும், அடையாளங்களையும் வெளிப்படுத்துகின்றன. முழுமையாக பொருந்தோட்ட உற்பத்தி உறவோடு கட்டுண்டப்படாத சூழலில் இருந்தும் அறுபது சதவீத இந்திய தமிழர்கள் மலையகத்தை தம் வாழிடமாக ஏற்றுக்கொண்டுள்ளனர். கடுமையான வறுமை, பஞ்சம், நோய்க்கொடுமை, தோட்ட உரிமையாளர்களின் காட்டுத் தர்பாருக்கு மத்தியிலும் மலையகத்தில் நிலை கொள்ளத் தொடங்குகின்றனர். 1867ஆம் ஆண்டின் பின்னர் தேயிலை செய்கை அறிமுகப்படுத்தப்பட்டதோடு பெரும் தொகையான தமிழ் தொழிலாளர்கள் மலையகத்தில் நிரந்தரமாக குடியேறியுள்ளனர். தேயிலை செய்கைக்கு தொடர்ச்சியான பராமரிப்பு தேவைப்பட்டமை, ஓரளவு அடிப்படை வசதிகள் ஏற்படுத்தப்பட்டமை போன்ற காரணங்களாலும் தமிழக கிராமங்களில் விவசாயம் பொய்த்துப்போய் பஞ்சம், பட்டினிகளும் தலைவிரித்தாடியமையும் மலையகத்தில் தமிழரை நிரந்தரமாக நிலைக்கொள்ளச் செய்கின்றன.

மலையகத்தை தம் வாழிடமாக ஏற்றுக்கொண்ட மலையக தமிழ் தொழிலாளிகள் தமது பாரம்பரியத்தின் தொடர்ச்சியான அறிவியல், தொழில்நுட்பம், வழக்காறுகள், நம்பிக்கைகள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழி, பழக்கவழக்கங்கள், கலைகள், கூத்துக்கள், கடவுள்கள், வழிபாட்டுமுறைகள் என்பவற்றையும் சுமந்து வந்தனர். இதன் தொடர்ச்சியாக காமன்கூத்து, அர்ச்சுணன் தபசு, பொன்னர் சங்கர், லவகுசா, ஏழுகன்னிமார் கதை, நல்லதங்காள் கதை, குறவஞ்சி, மாரியம்மன் தாலாட்டு, நொண்டிமேளம், பொய்க்கால் ஆட்டம், காவடியாட்டம், தோகையாட்டம், கும்மியாட்டம், கரகாட்டம், தாலாட்டு, ஒப்பாரி, தெம்மாங்கு, கெங்கையம்மன் கூத்து, தப்பாட்டம், காத்தவராயன் கதை, கோடங்கி, உருமி, அளிக்கி போன்ற எண்ணற்ற கலைச் செல்வங்களையும் கொண்டு வந்தனர். இந்த நீண்ட நெடிய மரபுத் தொடர்ச்சியின் வரலாற்று வழித்தடத்தின் ஒரு உன்னதமான கூறாக "காமன் கூத்து" மலையகத் தமிழர்களின் மணிமகுடமாகி நிற்கிறது என்றால் மிகையில்லை.

1.3. காமன் கூத்தும் அதன் அரசியல் உட்பொருளும்

கடந்த 2500 ஆண்டுகால பண்பாட்டு வரலாற்றில் பற்பல பண்பாட்டு மோதல்கள் சந்தித்துள்ள இந்திய மதங்களும், இந்திய தமிழக பண்பாட்டு மோதல்களும் காமன் கூத்திலும் பிரதிபலிக்கின்றன. சைவ - பௌத்த முரண்பாட்டிலும், சைவ - வைணவ முரண்பாட்டிலும் காமனை வெறுத்துப் பேசுவது என்பது மனித மறு உற்பத்தி தொழிற்பாட்டை எதிர்த்து துரத்துவதை வலியுறுத்திய மதங்களின் பிடியில் காமன் சிக்குண்டு கிடக்கின்றான். சைவ - வைணவ முரண்பாட்டில் வைணத்தின் கடவுளாக கருதப்படும் காமனை சிவன் எரிப்பதன் மூலம் சிவனது வெற்றி சைவத்தின் வெற்றியாகவும் சிவன் காமனுக்கு உயிர்ப்பிச்சையளித்தல் சைவ - வைணவ சமரசமாகவும் கூட நோக்கப்படல் வேண்டும்.

உலகாயதத்தை, ஆதிப் பொருள்முதல் வாதத்தை போதித்த பண்டையத் தமிழர் பண்பாட்டின், இந்திய பண்பாட்டின் மரபில் மனித மறு உற்பத்திக்கான மூலமாக காமத்தை, காமனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிபடும், போற்றிப்புகழும் பண்பாட்டின் தொடர்ச்சியாக காமன் காணப்படுகின்றான். உடலையே பௌதீக பொருளாக பூவுலகின் சொர்க்கமாக கருதிய ஆதிப் பொதுவுடமை சமூகத்தின் முதலியத்தின் வெளிப்பாடாக காமன் வழிபாடு காணப்படுகின்றது. சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி, நாச்சியார் திருமொழி, ஆண்டாள்சரிதை, ரிக்வேதம், இருக்கு வேதம், கந்தப்புராணம் என்பனவற்றிலும் கடவுளாக, குறியீடாக, உயிர்ப்பொருளாக காமன் விளங்குகின்றான்.

1.4. மலையக தமிழர் பண்பாட்டில் காமன் வழிபாடும், அதன் அரசியலும், தனித்துவமும்.

மலையகத்தில் நூறுவருடங்களுக்கும் மேலாக ஆடப்பட்டும், பாடப்பட்டும் வருவதும் தற்போதும் 500க்கும் மேற்பட்ட இடங்களில் ஆடப்படுவதுமான காமன்கூத்து பல தனித்துவமான அரசியற் பண்புகளைக் கொண்டிருக்கின்றது. அவையாவன :

(அ) உளவியல் ஆயுதமாகக் காணப்படல்
(ஆ) பன்முகத் தன்மை காணப்படல்
(இ) சாதிய சமத்துவம் காணப்படல்
(ஈ) பல்லினத் தன்மை காணப்படல்
(உ) வர்க்கத் தன்மை காணப்படல்
(ஊ) தேசியத்தன்மை காணப்படல் என்பனவாகும்

1.4.1. (அ) உளவியல்

மலையக தமிழர் பண்பாட்டில் காமன் கூத்து நிகழ்த்தப்படுகின்ற கால சூழலில் தொழிலாளர்களும், இளைஞர்களும் பல்வகைப்பட்ட உளவியற் கிளர்ச்சிகளை அடைகின்றனர். தமது உள்ளக்கிடக்கைகளை தெள்ளத் தெளிவாக பகிரங்கமாக வெளியிடும் உளவியல் பலம் பெறும் இளைஞர்கள் பாடல்கள், பாடல்கள், ஆடல்கள் மூலம் தம் உள்மன கிளர்ச்சிகளை நலினமாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிப்படுத்துகின்றனர். தமது காதல் தோல்வி, ஏக்கம், பிரிவு, தவிப்பு, காத்திருப்பு என்பவற்றையும் தமது திருமணம் நிறைவேற வேண்டும், தமது காதல் கைகூடவேண்டும் என்ற உணர்ச்சிகள், எண்ணங்கள், வேண்டுதல்களை காமன் கூத்தாடப்படும் காலத்தில் வெளிப்படுத்துகின்றனர். மேலும் இளம் பெண்களை விரக தாபமும் காதல் உணர்ச்சியும் ஊட்டி கலவிக்கு அழைக்கவும் கூட காமன் கூத்து ஒரு களமாக, ஊடகமாக அமைகிறது.

உதாரணமாக

இரதி புலம்புகிறாள்

"இங்கிதமில்லை சகி
இன்புறக்கூடி இவ்வேளை ~ சகி
இதழரலின் சுவையே தெரிந்திருந்த யாருமுலையாரவும்
எத்தனை சேர்ந்தொரு சோடி முத்தம்
தந்திடுவானோ போராடி' (8)

என்றும்

மதன்
'தித்திக்கும் தேன்மொழியே
பத்தினிப் பெண்ணே ரதியே
செஞ்சொற் பசுங்கிளியே
ரஞ்சித வஞ்சிக்கொடியே' (9)

(மங்களதாஸ் ~ பக்.10 ~ 1947)

மலையகத்தின் தனித்துவமானதும் மண் வாசனை பொதிந்ததுமாக B.A . முக்கையா எழுதுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரதி சொல் ஒப்பாரி

'சண்டமணி மார்பழகா முத்துமணி பல்லழகா
சடலவுறு வடிவழகா என் சிந்தைகுடி
கொண்டரேசா' (10)

B.A . மூக்கையா பக்.19

மதன் சொல் ஒப்பாரி

'மானே மாடமயிலே
தேனே இளங்கொடியே
மதுரமணி பல்லழகி, முத்து நவமார்பழகி' (11)
எனவும் காதலனும் காதலியும் ஒருவரை ஒருவர் வர்ணிக்கின்றனர்.

இவை இளம் வயதினரிடையே காதலையும் காமத்தையும் கிளரச்செய்து உலகியல் இன்பத்தில் திளைக்கச் செய்யும் உளவியல் ஆயுதமாக பயன்படுத்தப்படுகிறது.

தூதுவன், வீரப்புத்திரன், இயமன் முதலிய பாத்திரங்கள் அச்சமூட்டும் வகையில் பக்தியும், திறனும், எதிர்ப்புணர்ச்சியும் கொண்டதாக ஆவேசம் கொண்டு ஆடிவரும் போது தம்மீதான மனவழுத்தங்களில் உளவியற் கோலமாகவே அதனை காணமுடிகின்றது.

'சண்டை பிரசண்டனாகி சமர்த்துடனே தூதுவனார்
சர்வலோகமும் அதிர கர்வமாய் ஒலி துலங்க
சதீரங்கள் பின்னே வர சுடரொளி வீசிவர
சம்பராரி கொடி பறக்க கண்டாரே தூதுவனார்
சடுதியாய் விரைந்தார் அர்ம்பன் மனைவாசல்'
B.A . மூக்கையா பக்.19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆரப்பா தூதுவரே அன்புள்ளவர்களே
யார் கொடுத்த ஓலையிது அன்பாக கொண்டுவந்தீர்
எவர் கொடுத்த ஓலையிது எடுத்துக் கொண்டு வந்தீர்
(லெட்சுமி தோட்டம் மத்திய பிரிவில் பாடப்படும் பாடல்)

இப்பாடல்கள் வீரபத்திரர் உளவியலை வெளிப்படுத்துகின்றன.

இரதி மதன் ஒப்பாரிகள் ஒருவரை ஒருவர் புகழ்வதும், இகழ்வதும், திட்டுவதும், விரகதாபம் கொண்டு புலம்புவதும் இன்றுமட்டும் மனித வாழ்வில் உளவியலையும் பிதியளிக்கின்றது.

1.4.2. (ஆ) பண்முகத்தன்மை

மலையக தமிழ் பண்பாட்டில் காமன் கூத்து நிகழ்த்தும் போது அது காதல், காமம், வீரம், பக்தி போன்ற பண்புகளையும் வயது, பால் கடந்து பக்தி நிலையையும் கொண்டிருக்கின்றது. சிறியோர் முதல் பெரியோர் வரை வேடமிட்டு ஆடமுடியும். எனினும் பெண்களாக ஆண்களே வேடமிடுகின்ற முறை இன்றுமட்டும் தொடர்கின்றது. தேவர்சபை அமைக்கும் போது சிறு வேடங்களில் மாரியம்மன், காளி, சரஸ்வதி, இலக்குமி வேடங்களில் பெண்கள், சிறுமிகள் தற்போது அனுமதிக்கப்படுகின்றனர். மாவிளக்கு பூசையிலும், ஊர்வலத்திலும் பெண்கள், சிறுமிகள் தற்போதும் அனுமதிக்கப்படுகின்றனர். மேலும் காளி போன்ற வேடங்கள் வருகையில் பல டசின் கணக்கான பெண்கள் மருள் கொண்டாடுவதன் மூலம் இக்கூத்தாடல் திடலையும் பார்வையாளர்களையும் ஒன்றினைப்பதோடு பார்வையாரையும் பங்கு கொள்பவராக இயல்பாகவே மாற்றிவிடுகின்றனர். இது கூத்தின் பண்முகப் பரவல் தன்மைக்கோர் எடுத்துக்காட்டாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1.4.3. (இ) சாதிய சமத்துவமும் சமூக நீதியும்

மலையக தமிழரிடையே காணப்படும் பல்வேறு சாதிப் பிரிவினரிடையேயும் சமரசத்தையும், சமத்துவத்தையும் உள்ளடக்கியதொரு நிகழ்வாக மலையக தோட்ட பகுதியில் காமன் கூத்து காணப்படுகின்றது.

நுணுக்கமான வேலைப்பிரச்சினைகளையும் காமன் கூத்தில் பல்வகை சாதியினரிடையேயும், உயர், இடைநிலை, தலித் சாதிகளின் கூட்டு உழைப்பும், கூட்டுறவான செயற்பாடும் இல்லாமல் இந்நிகழ்வை வெற்றிகரமாக நிகழ்த்த முடியாத நிலைமை காணப்படுகின்றது.

இரதி ஒரு சாதியாகவும் மதன் வேறொரு சாதிக்கும் விட்டுக் கொடுப்பதன் மூலம் சமூக நீதியும், சமரசமும் பேணப்படுகிறன.

பூசையிடுவது சிவன், வீரபுத்திரன், யமன், தூதன் வேசமிடுவது, வாத்தியார்மார், தப்பிசைப்போர் ஆகியோர் சகல சாதிப்பிரிவிலிருந்தும் முன்வரக் காண்கிறோம். சில வேளை பூசகராக ஒரு சாதியை சேர்ந்தவர் இருப்பின் உதவியாளர்கள் வேறொரு சாதியினராய் காண்ப்படுகின்றனர். வாத்தியார்மார், பாடகர்கள் ஆரம்பத்தில் மேல்சாதியினர் காணப்பட்டுகள்ளனர். தற்போது காமன் கூத்து வாத்தியார்கள் (காமன் மாஸ்டர்) சகல சாதிப்பிரிவுகளினரிலும் காணப்படுகின்றனர். எனவே காமன் கூத்து மலையக தமிழரிடையே நிலவுகின்ற ஆழமான சாதிய பிரிவுகளிடையே ஒரு சமரசத்தை பேணுவதில் முக்கிய பங்கு வகிக்கின்றது.

பெருந்தோட்ட உற்பத்தி முறை வேண்டி நிற்கும் கட்டாயமான கூட்டு வாழ்வோடு இணைந்தும் சமூகத்தின் கூட்டுறவை பலப்படுத்தும் ஒரு சமூக நிகழ்வாக காமன் கூத்து காணப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1.4.4 (ஈ) பல்லினத்தன்மை

மலையக பெருந்தோட்டங்களில் "காமன் கூத்து" ஒரு பல்லினப் பரிமாணத்தையும் கூட கொண்ட நிகழ்வில் நிலைமாற்றம் பெருகின்றது. கொட்டகல பத்தனைப் பகுதியில் முஸ்லிம் இளைஞரான "றியாஸ்" என்பவர் காமன் கூத்தில் வேடமிட்டு ஆடி வருகின்றமையும் தமிழர் செறிந்து வாழும் பெருந்தோட்டங்களுக்கும், சிங்களவர்களின் கிராமங்களுக்கும் அண்மிய தோட்டங்களிலும், தென்னிலங்கை தோட்டங்களிலும் சிங்கள தொழிலாளர்களும் கூட பக்திப்பரவசத்தோடு காமன் கூத்தை நடத்தவும் அதில் வேடமிட்டு நடிக்கவும் முன்வருகின்றனர். மலையக தமிழர்களின் பண்பாட்டின் முதுசமாக அமையும் காமன் கூத்து மலையத்தில் பல்லினத்தன்மை வாய்ந்ததாகவும் பல்லின பங்குபற்றலுடனானதாகவும் மாறிவரும் சூழலிலும் அது மென்மேலும் செழுமையும் வளமும் பெற்றதொரு தனித்துவமிக்க கூத்து வடிவமாக மலையக தமிழரிடையே நிலவி வருகின்றது.

நகர்ப்புற சூழலில் எங்குமே மலையகத்தில் காமன் கூத்து நிகழ்த்தப்படுவதில்லை. மாறாக முற்றுமுழுதாக தோட்டங்களில் அதுவும் தொழிலாளர் குடியிருப்புகளிடையே அனைத்து மக்களையும் பங்காளராகவும், பார்வையாளராகவும் கொண்டு இக்கூத்து நிகழ்த்தப்படுகின்றது. எனவே பல்லினத்தவரும் பங்குபற்றும் வாய்ப்பு இக்கூத்தின் ஊடாக கிடைக்கின்றது.

1.4.5. (உ) வர்க்கத்தன்மை

மலையக தமிழரிடையே "காமன் கூத்து" வரலாற்றுக் காலங்களில் அதன் மதத்துவ, சாதிய, இனத்துவ பரிமாணங்களின் முன்னேறிய கூறுகளை உள்வாங்கிக் கொண்டுள்ளதோடு பிற்போக்கான கூறுகளை களைத்த நிலையில் முதலாளித்துவ உற்பத்தி உறவுமுறையினை தவிர்க்க எண்ணாத பிரசவிப்பான வர்க்க முரண்பாட்டை வெளிப்படுத்தும் ஒரு ஆற்றல்மிக்க கலைக்கூத்தாக திகழ்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்டாளி வர்க்கத்தின் வர்க்க உணர்ச்சிகளின் வெளிப்பாட்டு முறைகள், போர்க்குணாம்சம், காதல் வெற்றி தோல்விகள் நம்பிக்கைகளின் பால் அதன் போர்முனைப்பான உட்பொருள் விரிந்து செல்கிறது.

பாட்டாளி வர்க்கத்தின் போர்க்குணாம்சத்தை வெளிப்படுத்தும் வடிவமாக

'நான் அரலி மலர் கணை தொடுப்பனடி ~ அடி
ரதிமானே ரதியே தேனே
பரமசிவன் தபசழிப்பானடி' என்றும்

'மண்டலமெல்லாம் முழங்க அண்டமது கிடுகிடுங்க
மன்மதனார் புறப்பட்டாரே
பூமியெல்லாம் நடுங்க'
என்றும் பாடுவதில் இருந்த இந்தப்பாடலுக்கான முரசும் ஆவேச ஆட்டமும் இதன் வர்க்க மற்றும் போரியல் குணாம்சத்தை வெளிப்படுத்துவனவாக காணப்படுகின்றன.

உழைக்கும் வர்க்கத்துக்கே உரிய காதலியின் - இரதியின் - குரல் ஒலிக்கின்றது. உரிமையோடு மதனை வினாவுகின்றாள்

"போர்முனைக்கு போறேனென்று போவதும் சரியா? - இந்த
பூங்கொடியை விட்டு நீயும் போவது முறையா?"

1.4.6. (ஊ) தேசியத்தன்மை

மலையக தமிழர்கள் தம் இனத்துவம், பண்பாடு, வரலாறு, வாழ்நிலை, உளவியல், உற்பத்தி, உறவுமுறை சார்ந்து தம்மையொரு தனித்துவமான இனக்கூறாகவும், அரசியல் பிரிவாகவும் உணர்வும் ஒரு தனித்துவமான தேசமாக நிலை நிறுத்திக் கொள்வதோடு தமது தனித்து இருத்தலுக்கும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்திற்கும் அடிப்படையானதென்ற கருத்து வீச்சுப்பெற்று கலை, இலக்கிய, பண்பாட்டு, அரசியல் வெளிப்பாடுகளாக அவை வேறூன்றி வருகின்ற தருவாயில் காமன் கூத்து அத்தேசியத்தின் வீச்சுடைய கலை முனைப்பாக நோக்கப்படவேண்டிய வரலாற்றியல், பண்பாட்டியல் தேவை எழுந்திருக்கின்றது. இரு நூற்றாண்டுகளில் தேசம் பற்றிய இனத்துவம் பற்றிய பண்பாடு, பாரம்பரியம், மரபுரிமை, அறிவியல் சார்ந்ததும் ஆற்றல்களை வெளிப்படுத்தும் வாய்ப்பிறுந்த நிலையிலும் சொந்த நிலமோ, வீடோ, மயானமோ கூட இழக்கப்பட்டுவிட்ட நிலையிலும் மீண்டும் மீண்டும் வஞ்சகங்களும், சூழ்ச்சிகளும், சிறுமைகளும், சிதறியடித்து அழித்தொழிக்கும் சட்டங்களும், சதித்திட்டங்களும், திட்டமிட்ட வன்முறையும், இன அழிப்பும், சிங்கள குடியேற்றங்களும், ஆக்கிரமிப்பு திட்டங்களும், பண்ணாட்டு முகவர்கள், ஏகாதிபத்திய எத்தர்கள், பண்ணாட்டு கம்பனிகள், கலாசார ஆக்கிரமிப்பு, இலத்திரனியல் சாதனங்கள் பரப்பும் பண்பாட்டு விசக்காற்று, தமிழ் ஊடகவியலில் பண்பாட்டு சிதறடிப்பு, பண்டச்சந்தையில் நுகர் பொருளாகக்கப்பட்டுவிட்ட மனித உழைப்பு, மனித உடல், உணர்வுகள், சிந்தனைகள், எண்ணவோட்டங்கள், சந்தைமயமாக்கப்பட்டும், சந்தையால் திணிக்கப்பட்டு வரும் உணர்வுகள், வக்கிரங்கள், வசவுகள், வன்முறை, சூதாட்டம் நிறைந்த பல்தேசிய பண்பாட்டு சூழலிலும் "காமன் கூத்து" கணத்தையும், வளத்தையும், செழுமையையும் இழக்காமல் உலகிலேயே மிக மூர்க்கமாக நசுக்கப்பட்ட மலையக தமிழரிடையே உயிர்த்திருக்கிறதென்றால் அது நிச்சயமாக மலையகத் தமிழரது தேசிய வர்க்கத் தன்மையும் உட்பொருளையும் உட்பொதிந்தமையினாலேயேயாகும். பண்பாட்டு வகைப்பட்ட ஆக்கிரமிப்புக்கு உரித்தானதொரு ஆற்றல்வாய்ந்த எதிர்கலையாக, எதிர்வினையாக மலையக தமிழரிடையே காமன் கூத்து நிலைத்திருக்கின்றது. அது புதிய வீச்சும், புதிய மூச்சுமாக அண்ட புவனமெல்லாம் மேவும் ஒரு பண்பாட்டு பாணமாக திகழும் என்பது திண்ணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1.4.7. (எ) காமன் கூத்து - நிகழ்களம் - வெளி

மலையகத்தில் காமன் கூத்தின் நிகழ்காலமாக ஒரு தோட்ட பிரிவில் காணப்படும் காமன் திடலும் அதன் மையத்தில் அமைக்கப்பட்டுள்ள அடுக்கு மேடையும் அமைக்கின்றன. இக்களம் தோட்ட குடியிருப்புகளுக்கு மத்தியில் அல்லது குடியிருப்புகளுக்கு மிகவும் அருகாமையிலுள்ள தெருச்சந்தி, தெருமுடுக்குகளில் அமைந்திருக்கின்றது. இக்களம் நிரந்தரமாகவும் புனிதமான முறையிலும் பேணப்படுகின்றது. காமன் திண்ணைக்கு அருகில் விளக்குக் கம்பம் ஒன்று நாட்டப்பட்டு விஷேட தினங்களில் விளன்கேற்றப்படுகிறது. திண்ணையின் மையப்பகுதியில் ஆழமான குழியில் சில்லறை நாணயங்களும் பாலும் ஊற்றப்பட்டு அதன் மேல் லிங்கவடிவான ஒரு கல் நாட்டப்பட்டிருக்கும். அதனைச்சுற்றி முளைப்பாரி விதைக்கப்பட்டு அவை வளர்ந்து காணப்படும்.

காமன் நாட்டப்படும் தினத்தில் இருந்து மதன் உயிர் எழுப்பப்படும் தினம் வரை காமன் வெளியும் திண்ணையும் தினசரி கூட்டி, மெழுகி சீராக பராமரிக்கப்படுகின்றது. (வெளி பொட்டல்)

காமன் நாட்டப்படும் பெழுது "திண்ணை"யின் மையப்பகுதி தோண்டப்பட்டு அதில் கொட்டமுத்து (ஆமணக்கு), பேய்க்கரும்பு, செங்கரும்பு, அரலிமலர் கிளைகள், மல்லிகை பூமாலைகள் சேர்த்துக் கட்டப்பட்ட கம்பம் நாட்டப்பட்டு பச்சை இலைகுலைகளாலான சிறு "பந்தல்" போடப்பட்டிருக்கும்.

காமன் நடப்பட்டு மூன்றாம், ஐந்தாம் தினங்களில் ஆட்டம் தொடங்குகின்றது. வெளியில் (திடலில்) ஆடுகின்றபோது திடலில் எப்பக்கத்தையும் ஆட்டத்துக்காகப் பயன்படுத்த முடியும். எனினும் பிரதான காமன் திண்ணைகள் அதிலிருந்து முப்பது நாற்பதடி தூரத்தில் அமைக்கப்பட்டிருக்கும் சிவன் தவமேடைக்கும் இடைப்பட்ட களமே காமன் கூத்தாடுகளமாக மிகப் பிரதானமாகப் பயன்படுத்தப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் காமன் கூத்தாட்டம் தோட்டத்தின் தொழிலாளர் குடியிருப்புகளுக்கு முன்னால் ஆடப்படுவதோடு காமன்இங்கு தெருக்கூத்து வடிவமெடுப்பதை காணலாம். ஒரு சடங்காக, மேடை நாடகமாக, தெரு கூத்தாக அதன் பரிமாணம் விரிந்து செல்கின்றது.

1.4.8. (ஏ) நிகழ்த்தப்படும் காலம்

என்ற பாடல் மன்மதன் விழா தொடங்குவதனையும், மண்ணால் திண்னையிட்டு கம்பம் நாட்டப்படுவதனையும் குறிக்கின்றது.

மலையகத்தில் காமன் கூத்தானது மாசி மூன்றாம் பிறைதனில் அமாவாசை முடிய மூன்றாம் நாள் நாட்டப்படுகின்றது.ஏழாம், பதினோராம், பதின்மூன்றாம், இருபத்தோராம் தினங்களில் "காமன் எரிப்புவிழா" இறுதி நிகழ்ச்சி நடத்தப்படுகின்றது.

தமிழகத்தில் 48 இரவுகள் (ஒரு மண்டலம்) ஆடப்பட்ட காமன் கூத்து, மலையகத்தில் ஆரமபத்தில் அவ்வாறு ஆடப்பட்டுள்ளதெனினும் தற்போது வேலை நாட்கள், மற்றும் பொருளாதார காரணிகளைக் கருதி ஒவ்வொரு தோட்டத்திலும் ஒவ்வொரு காலப்பகுதியில் (ஆடப்படும் நாட்களின் எண்ணிக்கை) வேறுபடுகின்றது.

1.4.9 (ஐ) காமன் கம்பம் கட்டுதல்

காமன் கம்பமானது
"சென்பகம், மத்தாரை, பிச்சி, தன்கமலம், மிருவாஸி,
தாதவில, செவ்விளநீர், வெள்ளை சாதி மல்லிகை, முல்லை
தழைத்த வெட்டிவேர் கதம்பம் செழித்த கதிர் பச்சையின்பம்
தருவீக கொன்றை பூந்தேக்கு அருகு தும்பை வெள்ளெருக்கு
சர்வாங்கமும் பூசி சாமரம் பூசி
சர்க்கரை பொங்கலிட்டு மிக்க மதில் பேணிலிட்டு
மங்களமாய் காமன் நட்டோம் மாணிலத்தோர் எல்லோரும் (20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற பாடல் காமன் கம்பம் எவற்றையெல்லாம் சேர்த்து நடவேண்டும் என்பதை விளக்குவதாய் அமைகின்றது.

2.0. மலையக சமூக பொருளாதாரத்தில் காமன் கூத்து

காமன் கூத்து மலையக பெருந்தோட்ட பொருளாதாரத்தல் உற்பத்தியில் ஒரு செழிப்பான கட்டத்தில் நிகழ்த்தப்படுகின்றது. தொழிலாளர்களின் வருமானம் சற்று உயர்வாக காணப்படக்கூடிய இக்காலதில் (நிச்சயமற்ற நிலைமையிலும் கூட மாரிக்காலம் தொடங்குவதற்கு முன்னர் காமன் கூத்து நடத்தப்படுகின்றது) தினசரி இரவு வெகுநேரம் விழித்திருந்து காமன் ஆடுவோர் விடியற்காலையில் வேலைக்கு செல்வதில் ஏற்படும் தாமதம், சிலவேளை சலுகையாக கிடைக்கும் சம்பளத்துடனான விடுப்பு என்பன தோட்ட உற்பத்தி தொழிற்பாட்டுக்கு குந்தகமாயமைகின்றது. நெடுநேரம் விழித்திருப்பதன் மூலம் பார்வையாளர்கள் (தொழிலாளர்கள்) உரிய நேரத்தில் வேலைத்தளத்திற்கு சமூகமளிக்க முடியாமையும், உற்பத்தி ஆற்றல் குறைவதையும் அவதானித்துள்ள தோட்ட நிர்வாகங்கள் காமன் கூத்தின் நிகழ்காலத்தையும் நிர்ணயிப்பதில் தலையிட முனைகின்ற போக்குகள் காணப்படுகின்றன. சம்பளம் அல்லது சம்பள முற்பணத்தை பல தோட்ட பிரிவுகளுக்கு ஒரே தினத்தில் கொடுப்பதன் மூலமும் தோட்ட தொழிற்சங்க தலைவர்களை விலைக்கு வாங்கியும் இத்தகைய தலையீட்டை நிர்வாகிகள் மேற்கொள்கின்றனர். இதனுடாக பெருந்தோட்ட உற்பத்தி செயற்பாட்டுக்கு தடையற்ற வகையில் மக்கள் பண்பாட்டை தகவமைக்கும் பாத்திரத்தை பெரு முதலாளியம் வகிக்க முனைகின்றது.

இறுதி நாள் கூத்து பெரும்பாலும் வெள்ளிக்கிழமை அல்லது சனிக்கிழமை முழுவதும் நிகழ்த்தப்படுகின்றது. பெரும்பாலும் தோட்டங்களில் ஞாயிறு விடுமுறை தினமாகையால் விடியவிடிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நித்திரை விழித்தும், ஆடியும், பாடியும் களைத்தோர் ஓய்வெடுக்க வசதியாக இத்தகைய அணுகுமுறை பின்பற்றப்படுகின்றது.

ஒரே தினத்தில் பல தோட்ட பிரிவுகளில் காமன் கூத்து நிகழ்த்தப்படுவதனால் தொழிலாளரிடையேயான கூட்டுறவும், ஒன்றுகூடும் வாய்ப்பும், ஒரு தோட்ட மக்கள் இன்னொரு பிரிவில் கூத்தை பார்க்கும், பங்குபற்றும் வாய்ப்பும் குறைவடைகின்றது.

2.1. காமன் கூத்தின் சமூக செலவு

மலையக பெருந்தோட்டங்களில் ஆரம்பத்தில் பெரிய கங்காணிமாரும், தோட்ட நிர்வாகங்களும் காமன் கூத்தை நிகழ்த்துவதில் முன்னிணி வகித்துள்ளனர். மனிதாபிமானமும், கலையின்பமும், கல்வி நாட்டமும் மிக்க கங்காணிமார் ஓய்வு நேரங்களில் பல பாடங்களையும், கூத்துக்களையும், புராண, இதிகாச, வரலாற்று கதைப்பாடல்களையும் பாடியும், நடித்தும், நடிப்பித்தும் கலைவளர்த்தனர். இக்காலப்பகுதியில் காமன் கூத்துக்கான சமூக செலவாக ஓய்வுநேரம், திண்ணைவெளி, சில்லறை மீதிகள், ரேசனில் சேர்க்கப்படும் மீதிகளே பயன்படுத்தப்பட்டன. உழைப்பே பிரதான முதலீடாக அமைந்திருந்தது.

ஆனால் தற்பொழுது காமன் கூத்து நிகழ்த்துவது என்பது ஒருதோட்டத்தில் 20000 - 30000 ரூபா செலவுடையதாக மாறியிருக்கின்றது. தோட்டங்களில் வசூலிக்கப்படும் நிதியுடன், அயல் தோட்டங்கள், நகரங்களில் கூத்தாடி சேர்க்கும் பணம், படியரிசி விற்றபணம் என்பனவற்றோடு கூத்துக்கே என நிதி திரட்டப்படுகின்றது. கொடையாளர்களின் உதவியும் நாடப்படுகின்றது.
பூசகர், வாத்தியார்மார், தப்பிசைப்போர் ஆகியோருக்கு கணிசமான தொகை சம்பளமாக தரப்படுவதோடு கூத்தாடுவோருக்கான செலவுகளும், ஒலிபெருக்கி செலவுகளும் கூட ஏற்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் வாழைமரங்கள், கரும்புகள், பச்சைமரக்கிளைகள் என்பனவும் பயன்படுத்தப்படுகின்றன. மக்களை பொருத்தவரை காமன் கூத்தானது பார்வையிட வரும் விருந்தினர்கள், உறவினர்கள், அயலவர்களை உபசரித்தல், மாவிளக்கு தயாரித்தல், பூசை பொருட்களை வாங்குவதற்கு சொந்த வேலை நாட்களை இழத்தல் என்பன பெரும் சமூக செலவாக காணப்படுகின்றது. என்றபோதிலும் கூட "காமன் கூத்து" வருடாவருடம் தவறாமல் நிகழ்த்தப்படுகின்றது.

கடந்த இருபதாண்டுகளில் கூட பல தோட்டங்களில் புதிதாக காமன் நாட்டப்பட்டுள்ளமை(22) குறிப்பிடத்தக்கதாகும். சில தோட்டங்களில் காமன் கூத்துக்கு நூற்றாண்டு விழாவும், வைரவிழாவும், பவளவிழாவும், பொன்விழாவும்(23) கொண்டாடப்படுகின்ற காலம் நெருங்கியுள்ளது. அல்லது கடந்துள்ளது.

2.2. காமன் வழிபாட்டின் தோற்றம் பற்றிய வரலாற்று இலக்கிய பதிவுகள்

தமிழரின் இந்திய பண்பாட்டின் சகல ஒப்பற்ற இலக்கியங்களும், இதிகாசங்களும், புராணங்களும் மன்மதனின் லீலைகள் பற்றி, அழகு பற்றி, அவனது விற்போர் திறன் பற்றி, மலர்கணைகள் பற்றி, மதன் - இரதி காதலின் வலிமையைப் பற்றி ஏற்றியும் தாழ்த்தியும் பேசுகின்றன.

தமிழரதும், இந்தியரதும் பண்பாட்டின் உட்பட்ட சகல பண்பாட்டு பிரளயங்கிளலும், மோதல்களிலும் காமனுக்கு பங்கிருக்கின்றது. உலகுக்கு இந்திய பண்பாடு தந்த எல்லா அறிவியல், இன்பியல், வாழ்வியல் இலக்கணங்களுக்கும் மன்மதனும், மதன் - இரதி காதலும் உதாரணங்களாக காட்டப்பட்டிருக்கின்றன.

எனவே மன்மதன் வழிபாடு, காமன் வழிபாடு மனித மறுவுற்பத்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறவின் உன்னதங்களை அக்கால வாழ்வின் மையக்கூறாக உணர்ந்த ஆதிப் பொதுவுடமை சமூக அமைப்பிற்கேயுரித்தாதல் வேண்டும்.

ஆதிப் பொதுவுடமை அமைப்பில் கருக்கொண்டு காமத்தலும், கலவியிலும், இல்லறவாழ்விலும் இனிக்க இனிக்க ஓடுபட்டு குதூகலித்த மக்கள் தம் களிப்பை இன்னும் அதிகமாக சுவைக்க மன்மதன் வழிபாட்டை, கூத்தை உருவாக்கியிருத்தல் வேண்டும்.

மனித உயிரியின் மறு உற்பத்தியின் உன்னதங்களை உணர்த்தும் உயிர்கலையான "காமன் கூத்து" நிலபிரபுத்துவ, நிலமான்ய சமூக அமைப்புகளின் ஊடே வளர்ந்து செழித்து, முதலாளியத்தையும், காலணியத்தையும் கடந்து இன்றய உலகமயமாக்கல் சூழலையும் எதிர் கொள்ளத்தயாராகி நிற்கிறது.

ஒரு கூத்துமரபு எப்படி இத்தனை சமூகப் பிரளயங்களையும் கடந்து, மாற்றங்களைக்கடந்து தன் உயிர்பண்பை இழக்காமல் நிலைத்திருக்கின்றது என்பது தான் இதன் வலிமைக்கு சான்றாகும்.

ஊடாட்டங்கள் வரலாம், இடையீடுகள் வரலாம், சமூகம் மாறலாம், இயங்கியலின் மறு உற்பத்தி தொழிற்பாடும் கூட மாற்றமுறலாம். ஆனாலும் மறு உற்பத்தியை, அதன் உயிர் பொருளை போற்றி ஆடப்படும் காமன் கூத்து காலத்துக்கேற்ற மாற்றங்களை அளவோடு உள்வாங்கி நிலைத்து வளரும் பண்பாட்டு படிமமாகும். இப்படிமம் மலையதமிழரின் தேசிய கூத்துவடிவமாக உருபெற்று நிலைபெற்று இருப்பதன் மூலம் மலையக தேசம் மாண்புறுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3.0.0 பண்டைத் தமிழரின் பண்பாட்டில் காமன், மன்மதன் வழிபாடும் கருத்தியல் வளர்ச்சியும்

இலக்கிய சாட்சியங்கள்

1. கம்பராமாயணத்தில் காமனும், மன்மதனும் பற்றிய செய்திகள்
2. சிலப்பதிகாரத்திலே,
   காமவேள் கோட்டம்
   காமதேவன் ஆட்சி சிறப்பும் காமக்கடவுள் விழாவும்
3. மணிமேகலையில்
   காமன் வெறுப்பு கருத்துக்கள்
4. நாச்சியார் திருமொழியில்
   மன்மதன் வழிபாடும் காமன் பண்டிகையும்
5. மகாபாரதத்தில்
   மன்மதன்
6. கந்தப்புராணத்தில்
   காமன், மன்மதன் தகனப்படலம்
7. கலித்தொகையில்
   காமன் கோயில் வழிபாடு
8. வாமன புராணத்தில்
   காம் வழிபாடு
9. ஆண்டாளின்
   காம நோன்பு
10. சீவக சிந்தாமணியில்
    காமன் வழிபாடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3.1.1. கம்பராமாயணம் - சுந்தர காண்டம்

கம்பராமாயணத்தில் மன்மதனைப் பற்றி செய்தியொன்று காணப்படுகின்றது. இராவணனுக்குரிய இயக்க மங்கையரின் நிலைமையை விளக்குவதாயமையும் இப்பாடல் பின்வருமாறு

"பழுது இல்ல மன்மதன் எய் கணை பல்முறை
உழுத கொங்கையர் ஊசல் உயிர்ப்பினர்
அழுது செய்வது ஏன்? ஆணை அரக்கனை
எழுதாமல்கொல் என்று எண்ணுகின்றார் சிலர்"
(பேரா. பூவண்ணன் தெளிவுரை) (பக்.112, பாடல் 266)

"இயக்க மங்கையர் சிலர் மன்மதன் எய்த பழுதற்ற கொங்கைகளைப் பெற்றவர்: ஊசலாடும் உயிர்ப்பினை உடையவர்" என பொருள் தருகிறது இப்பாடல்.

3.2.0. சிலப்பதிகாரம்

2. சிலப்பதிகாரம் - அந்தி மாலை சிறப்பு செய்த காதை

சிலப்பதிகாரத்தில் அந்தி மாலை சிறப்பு செய்த காதையில் காம தேவனின் ஆட்சியைப் பற்றி ஒரு பாடல் வருகிறது.

காமதேவன் ஆட்சியே

'அன்னம் மென்னடை – நன்னீர் பொய்கை
ஆம்பல் நாறும் தேமபொதி நறுவிரைத்
தூமரைச் செவ்வாய் தன் அறல் கூந்தல்
பாண்பாய் வண்டு நோதிறம் பாட
காண்வரு குவளைக் கண்மலர் விழிப்பப்
புள்வாய் முரசொடு பொறிமயிர் வானரத்து
முள்வாய்ச் சுங்கம் முறைமுறை ஆர்ப்ப
உறவுநீர்ப் பரப்பின் ஊர்துயில் எடுப்பி
இரவுதலைப் பெயரும் வைகறை காறும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரை இருள் யாமத்து பகலந் துஞ்சார்
விரைமலர் வாளியொடு கூருப்புவில் ஏந்தி
முகர வெல்கொடி மைந்தன் திரிதிரி
நகரங் காவல் நனீ சிறந் தது என்'

(பாடல் 75-80 பக் 63)

மனமலிர் ஆகிய அம்புகளுடன் கரும்பிலான வில்லும் ஏந்தியவனாக, மகரமாகிய தன் வெற்றிக் கொடியினையுடைய காமதேவன் இரவெல்லாம் ஓய்வின்றித் திரிகின்ற போது எவர்தாம் அவனுக்குத் தோற்று அடிமையாகாமல் துயில்வார். நகரம் முழுவதும் அவனது ஆட்சியே ஓங்கி சிறந்து விளங்கிற்று என்று காமனின் ஆட்சி பற்றிய இப்பாடல்வரிகள் கூறுகின்றன.

3.2.1. சிலப்பதிகாரம் - கடலாடு காதை

சிலப்பதிகாரம் கடலாடுகாதையில் இந்திரவிழா காண் வந்த வித்தியாதர வீரன் ஒருவன் காமக்கடவுளுக்கு விருந்தளித்து மகிழ்வதாக ஒரு பாடல் இடம்பெறுகிறது.

3.2.2. காமக் கடவுள் விழா

"வெள்ளி மால்வரை வியன்பெருஞ்சேடிக்,
கள்அவிழ் பூம்பொழில் காமக் கடவுட்க்குக்
கருங்கயல் நெடுங்கண் காதலி - தன்னோடு
விருந்தாட்டு அயரும் ஒரு விஞ்சை வீரன்"

(பக் 84 பாடல் 1)

"கயல் மீன் போன்ற நெடுங்கண்ணையுடைய தன் காதலியோடும் கூடிக்கலிந்து காமக் கடவுளுக்கு விருந்தாட்டு அயர்ந்து கொண்டிருக்கும் வித்தியாதர வீரன்". என இப்பாடல் விளக்குகிறது. இதன்படி காலமே காமக்கடவுளாக வழிபட்டு வரும மரபை சிலப்பதிகாரத்தின் வாயிலாக நாம் அறிய முடிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3.2.2. ஊர் காண் காதை (நிலை மண்டில ஆரியப்பா)

சிலப்பதிகாரம் ஊர் காண் காதையில் பதின்மூன்றாம் பாடலில் காமனின் வில் செய்விழா பற்றிய செய்தி காணப்படுகின்றது.

பின்பனிக் காலத்தில் - காமனின் வில் செய் விழா

'அங்கு அது அன்றியும், ஒங்கு இரும் பரப்பின்
வங்க ஈட்டத்துத் தொண்டியோர் இட்ட
அகிலும், தயிலும், ஆரமும், வாசமும்,
தொகுகுரூப் பூரமும் சுமந்துடன் வந்த
கொண்டலோடு புகுந்து கோமகன் கூடல்
வெங் கண் நெடுவேள் வில்விழாக் காணும்
பங்குனி முயக்கத்துப் பணி அரசு யாண்டுளன்?–

(பாடல் 110 பக் 215)

3.2.3. சிலப்பதிகாரம் கலைத்திறம் உரைத்த காதை (கலி வெண் பாட்டு)

சிலப்பதிகாரம் கலைத்திறம் உரைத்த காதைகள் ஒன்பதாம் பாடல் தேவந்தி, கோவலனை பிரிந்த கண்ணகி கண்ட கனவுக்கு பயன்களின் கண்ணகியை காமக்கோட்டத்தில் வழிபடவும் அதற்கு முன் சோமகுண்டம், சூரியகுண்டம் ஆகிய பொய்கைகளில் நீராட வேண்டும் எனவும், அங்கு நீராடும் மகளீர் கணவனோடு பிரியாது இன்புருவர். யாமும் ஒரு நாள் அங்கு சென்று நீராடுவோம் என்று கூறுகின்றாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொற்கொடி
கைத்தாயும் அல்லை கணவற்க்கு; ஒரு நோன்பு
பொய்த்தாய் பளம் பிரப்பில்; போய் கொடுக்க; உய்த்துக்
கடலோடு காவிரி சென்று அலைக்கும் மூன்றில்
மடல வில் நெய்தல் அமகாணல்,
தடம் உள,
சோமகுண்டம், சூரிய குண்டம்; துறை மூழ்கிக்,
காமவேள் கோட்டம் தொழுதால், கணவரோடு
தாம் இன்புருவர் உலகத்துத் தயலாள்:
போகம்செய் பூமியினும் போய் பிறப்பர், யாம் ஒரு நாள்
ஆடுதும் என்ற அணி - இழைக்கு
(சிலப்பதிகாரம் - காணந்தீரம் உரைத்த காதை
பாடல் 9 பக் 138)

இதன் படி காவிரி கடலோடு கலக்கும் மூன்றில் "காமவேள் கோட்டம்" அமைந்திருந்ததாக அறிய முடிகின்றது.

3.2.4. மனையறம் படுத்த காதை (நிலைமண்டில் ஆசிரியப்பா)

'தூமப்பணிகள் ஒன்றித் தோய்ந்தால் என ஒருவார்
காமர் மனைவிஎனக் கைக்கலந்து ~ நாம்
தொலையாத இன்பம் எலாம் துன்னினான் மண்மேல்
நிலையாமை கண்டவர்போல் நின்று'

(சிலப்பதிகாரம் மலையறக்கப்படுத்த காதை வெண்பா - பக் 38)

சிலப்பதிகாரம் மனையறம்படுத்த காதையில் காமனும் இரதியும் ஒருவரோடுடொருவர் பிரியாது தழுவிக்கிடப்பது போலவும், இன்பநலம் அனுபவிக்க தீர்த்தலெனறில்லாத படியாக வாழ்க்கை இன்பம் அனைத்தையும் இடையறாது அனுபவித்து அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனம் ஒன்றிக் கடந்தவராக (கோவலனும் கண்ணகியும்) வாழ்ந்து வந்தனர் என்ற பொருள் பட வரும் வெண்பா இது.

3.2.5. சிலப்பதிகாரம் காணர்வரி

"சிலப்பதிகாரம் காணர்வரியில் பதினேழாம் பாடலில் காமன் எய்த புண்கள் பற்றிய செய்தி காணப்படுகின்றது."

'புன்னைப் பொதும்ப மகர த்திண்
கொடியோன் எய்த்த புதுப்புண்கள்
என்னைக் கானா வகைமறைத்தால்
அன்னை காணில் என் செய்கோ' (37)
சிலப்பதிகாரம் காணல்வரி (பாடல் 17 பக் 114)

சிலப்பதிகாரத்தில் நடுகற்காதையில் காமதேவன் மலர்களையும், வெற்றி கொண்டவையாக மருந்தும் இதுவோ என்ற பாடலில் வருகின்றது. பத்தினியான கண்ணகிக்கு இமயத்திலிருந்து கல்லெடுத்து அதனை முறைப்படி விழாக் கோலத்துடன் தெய்வமாக நாற்றி கொண்டாடியதை கூறும் பகுதியில் இப்பாடல் வருகிறது.

3.2.6. நடுகக் காதை (நிலை மண்டில் ஆசிரியப்பா)

மருந்து இதுவோ

"அகில் உண விரித்த; அம்மேன் கூந்தல்
முகில் முழை மதியத்து, முறிகருஞ் - சிலைக்கு,
மகரக்கொடியோன் மலர்கணை துரந்து,
சிதரரி பரந்த செழுங்கடைத்
தூதும்
மருந்தும் ஆயது இம்மாலை என்றேற்ற-"
(சிலப்பதிகாரம் நடுகற்காதை பக் 393 பாடல் 20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பாடலின் மூலம் பாண்டியரின் கூடல் நகரிலே புகுத்து நெடுவேலான கொடிய காமனின் வில் செய்யும் விழாவினை காணும் பின்பனிக்காலம் எங்குள்ளதோ? என்ற ஏக்கம் வெளிப்படுகிறது. "இதன் மூலம் பின்பனிக் காலமும் காமன் வில் செய்விழா காலம்" என்கிற செய்தியை நாம் அறிய முடிகிறது.

3.3.1. மணிமேகலை - மலர்வனம்புக்க காதை (நிலைமன்றில் ஆசிரியப்பா - மலர்வனம்புக்க பாட்டு)

மணிமேகலையில் மளர்வனம்புக்க கதையினால் வரும் மூன்றாம் பாடலின் 15 - 25 அடிகளில் காமவெறுப்புக் கருத்துக்கள் காணப்படுகின்றன. மாதவியின் நிலை கெட்டு சுதமதி தன்னுள்ளத்துயரோடு கூறுவதாக கூறுகிறது இப்பாடல்.

சுமதி வியத்தல்

'மதுமலர் குழலியோடு மாமலர் தொடுக்கும் (15)
சுதமதிக் கெட்டு துயரோடும் கூறும்; (16)
குறவர்க்கு உற்ற கொடுந்துயர் கெட்டு (17)
துனியாத் துன்பம் தலைத்தலை எய்தும் (18)
மணிமேகலை தன் மதிமுகம் தன்னுள் (19)
அணிதிகள் நிலத்து ஆய்மலர் ஒட்டிய (20)
கடைமணி உகுநீர் கண்டனன் ஆயின், (21)
படையிட்டு நடுங்கும் காமன்; பாவையை (22)
ஆடவர் கண்டால் அகரவும் உண்டோ? (23)
பேடியர் அன்றோ பெற்றியின் நின்றிடின்' (24)

(மணிமேகலை மலர்வனம்புக் கதை பக் 40 பாடல் 15-25)

இப்பாடல் மாதவியின் நிலைக்கண்டு "காமனும் தன் படையினை எறிந்து விட்டு உளம் நடுங்கி நின்று விடுவேனே" என காமன் மேல் ஏற்படும் வெறுப்புக்களையும் விளக்கிச் செல்வதையும் கூறுவதாக இப்பாடல் அமைகின்றதனை காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3.3.2. மணிமேகலை தெய்வம் வந்து தோன்றிய காதை

மணிமேகலையில் - மணிமேகலா தெய்வம் வந்து தோன்றிய கதையில் பாடல் 70 - 80 வரையிலான பாடல் வரிகள் காமனை வென்ற புத்தனை போற்றுவதாக அமைந்துள்ளது.

புத்த தருமம் போற்றுதல்

'தாமெனக்கு அருளிய

எங்கோன், இயல்குணண் ஏமில் குணப்பொருள்
உலக நோன்பின் பலகதி உணர்ந்து,
தனக்கென வாழாப் பிறர்குரி யாளன்
இன்பச் செல்வி மன்பதை எய்த
அருளரம் பூண்ட ஒரு பெரும்பூட்கையின்,
அரக் கதிர் ஆழி திறப்பட உருட்டிக்
காமற் கடந்த வாமன் ~ பாதம்
தகைபா ராட்டுதல் அல்லது, யாவதும்
மிகைநா வில்லேன், வேந்தே, வாழ்கென'

மணிமேகலை தெய்வம் வந்து தோன்றிய கதை பக் 23 பாடல்வரிகள் 70 - 80

சுதமதியானவள் "காமனை வென்ற புத்த தேவனின் திருவடிகளின் தகைமையினைப் பாராட்டுதல் அல்லாது வேறு யாதுமே மிறுதிபாத நாவினையுடையவளாக" எனக் கூறும் இப் பாடல் வரிகள் காம வெறுப்பை வெளிக்காட்டுவதாக அமைவதைக் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3.3.3. மணிமேகலா தெய்வம் வந்த புகழ் காதை (நிலைமண்டில் ஆசிரியப்பா)

என் நெஞ்சம் கெடுக!

'புதுவோன் பின்றைப் போனதென் நெஞ்சம்;
இதுவோ அன்னாய்! காமத்து இயற்கை?
இதுவேயாயின்; கெடுகதன் திறம்!'

(மணிமேகலை பாடல் 90 - 95 பக் 74)

பளிங்கு மண்டபத்தினைத் திறந்து கொண்டு வந்த மணிமேகலை சுதமதியை பார்த்து வினவுவதாக இவ்வரிகள் வருகின்றன. இது காமனின் கொடுமையை கூறுவதாக அமைகின்றது.

3.3.4. பீடிகையை தூதித்தனன்

"முற்றவுளர்ந்த முதல்வா எங்கோ!
காமற் கடந்தோய், ஏமம் ஆயோய்
தீநெறிக் கடும்பகை கடிந்தோய் எங்கோ?

(பாடல் 12 பாடல் வரி 100 - 105 பக் 75)

இந்திரவிழா காணவந்த மணிமேகலா தெய்வமானது பளிங்கறையிலேயுள்ள புத்தபிரானது பீடிகையை வலஞ்செய்வதாக கூறுகின்றன இப்பாடல் வரிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3.3.5. மணிமேகலையில் உதயகுமாரனைக் காஞ்சனன் வாளாலெறிந்த காதை

உதயகுமாரனின் வெறி

'ஆங்கவள் உரைத்த அரசிளங் குமரனும்
களையா வேட்டை கையுதிர்க் கொள்ளான்,
'வளைசேர் செங்கை மணிமே கலையே
காயசண் டிகையாய்க் கடிஞை ஏந்தி,
மாய விஞ்சையின் மனமயக் குறுத்தனள்,
அம்பலமருங்கில் அயர்ந்தறி வுரைத்தவில்
வம்பலன் தன்னொடிவ் வைகிருள் ஒழியாள்;
இங்கிவள் செய்தி இடையிருள் யாமத்து
வந்தறி குவன் என, மணங்கொண்டெழுந்து,
வான்தேர்ப் பாகனை, மீன்திகழ் கொடியனைக்,
கருப்பு வில்லியை, அருப்புக்கனை மைந்தனை,
உயாவுத் துணையாக வயாவொடும் போகி'
(பக் 224 பாடல் 8)

மணிமேகலையில் உதயகுமாரனைக் காஞ்சனன் வாளாலெறிந்த கதையில் உதயகுமாரன் வெறிகொண்டவனாக காமனைத் துணையாக தன்னுடனே கொண்டவனாக தன் அரண்மனை நோக்கி சோர்வுடன் சென்றதாக கூறுகின்றது.

காமனை வென்றவனே! இன்ப மயமாக விளங்குபவனே! தீயொழிக்கமாகிய வாழ்வின் கடும்பகைகளைக் கடித்து ஒதுவ்வனே என்றெல்லாம் சுதமதியிடமும் மணிமேகலையிடமும் பேசுகிறது இப்பாடல் வருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3.4.1. நாலாயிரம் திவ்வியப் பிரபந்தம்

பெருமாள் திருமொழி - மூன்றாம் திருமொழி

அழகிய மணவாளன்பால் ஆசை கொண்ட நிலை
மெய்யியல் வாழ்க்கை
கலி விருத்தம்

இப்பகுதியில் வரும் மூன்றாம் பாடலில் மன்மதனுடைய அழகிய கொடிய வில்லுக்கு ஆட்பட்டுத் திரிகிற இப்பூமியிலுள்ளோரோடு யான் கூடுவது இல்லை! என பொருள்தரும் பாடற்பகுதி காணப்படுகின்றது.

670. "மாரனார் வரிவெஞ் சிலைக் காட் செய்யும்
பாரி னாரோடும் கூடுவதில்லை யான்
ஆரமார்வன் அரங்கன் அனந்தன் நல்
நாரணன் நரகாந்தகன் பித்தனே" (3)

(நாலாயிரம் திவ்வியபிரபந்தத்திரட்டு பக் 2 978 பெருமாள் திருமொழிப்பாடல் 3)

பொருள்: "மன்மதனுடைய அழகிய கொடிய வில்லுக்கு ஆட்பட்டுத் திரிகிற இப்பூமியிலுள்ள ரோடு யான் கூடுவது இல்லை; முத்தாரத்தைத் திருமார்பில் அணிந்துள்ளவனாய், அளவிட முடியாத குணங் குறிகளுடையவனாய், எங்கும் வியாபித்திருப்பவனாய், அடியவர்களை நரகத்தில் சேராதபடி காத்தருள்பவனான அரங்கத்தான் மாட்டுப் பித்தேறி நின்றேன்" என்று ஆழ்வார் கிளத்துவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3.4.2. நாச்சியார் திருமொழி - தையொரு திங்கள்

முதற்பாட்டு

'கண்ணனை இணக்கு'. எனக் காமனைத் தொழுதல்

504. தையொரு திங்களும் தரை விளக்கித் தண்மண்டல
மிட்டு மாசி முன்னாள்
ஐயநூன் மணற் கொண்டு தெருவணிந்து அழகினும்
கலங்கரித் தனங்கே தேவா!
உய்யவும் மாங்கொலோ என்று சொல்லி
உன்னையும் உம்பியையும் தொழுதேன்'
வெய்யதோர் தழலுமிழ் சக்கரத்தை வேங்கிட
வற்கென்னை விதிக்கிற்றியே.

(பாகம் 2 பக் 745 பாடல் 504)

பொருள் : தைமாதம் முழுவதும் அவன் வரும் இடத்தை அலங்கரித்து குளிர்ந்த அழகாயுள்ள மண்டல வடிவில் (வட்டம்) கோலத்தை இட்டு மாசிமாதம் முதல் பட்சத்தில் (வளர்பிறை) அழகிய நுண்ணிய மணலைக் கொண்டு அவன் வரும் தெருவை அழகுக்காகவே அலங்காரம் செய்து வைத்தேன். **மன்மதனே!** பிழைக்கமுடியுமோ? என்று சொல்லி உன்னையும் உன் தம்பியான சாமனையும் வணங்கினேன். நெருப்புப் பொறிகளைச் சிந்தும் ஒப்பற்ற சக்கரத்தை திருக்கையிலே உடைய திருமலையில் எழுந்தருளி இருக்கும் பெருமானுக்கு என்னை அந்தரங்கக் கைங்கரியம் செய்யும்படி விதிக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3.4.3. இரண்டாம் பாட்டு

505. வெள்ளை நுண் மணற்கொண்டு தெருவணிந்து
வெள்வரைப் புதன்முன்னம் துறைபடித்து
முள்ளுமில் லாச்சுள்ளி எரிமடுத்து முயன்றுன்னை
நோற்கின்றேன் காமதேவா!
கள்ளிவிழ் பூங்கணை தொடுத்துக் கொண்டு
கடல்வண்ண னென்பதோர் பேரெழுதி
புள்ளினை வாய்பிளந் தாளென்பதோர்
இலக்கினிற் புகவென்னை எய்கிற்றியே.
(பாகம் 2 பாடல் 505 பக் 747)

பொருள் : காமதேவா! வெண்மையான நுண்ணிய மணலைக் கொண்டு நீ வருகிற வழியை அலங்கரித்து கிழக்கு வெளுப்பதற்கு முன்னே நீர்த் துறைகளிலே சென்று முழுகி முள் எறும்பு முதலிய இல்லாத விறகுகளை நெருப்பிலே போட்டு முயற்சி செய்து உன் விஷயமாக நோன்பு நோற்கின்றேன். தேன் சிந்தும் மலர்களாகிற அம்புகளைத் தொடுத்துக் கொண்டு கடல் போன்ற திறத்தையுடையவன் என்னும் நாமத்தை உன் அம்பிலே எழுதிக்கொண்டு கொக்கின் உருவில் வந்த பகாசுரனுடைய வாயைப் பிளந்து பெருமானிடம் என்னைச் சேர்ப்பிக்க வேண்டும் என்கிறாள்.

3.4.4. மூன்றாம் பாட்டு

506 மந்தநன் னறுமலர் முருக்க மலர்
கொணண்டுமுப் போது முன் னடிவணங்கி
தத்துவ மிலியென்று நெஞ்செரிந்து
வாசகரத் தழித்துன்னை வைதிடாமே
கொத்தலர் பூங்கனை தொடுத்துக் கொண்டு
கோவிந்த னென்பதோர் பேரெழுதி
வித்தகன் வேங்கடவாணனென்னும்
விளக்கினில் புகவென்ன விதிக்கிற்றியே. 3
(பாகம் 2 பக் 748 பாடல் 506)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள் : ஊமத்தையினுடைய நல்ல மலர்களையும், முருக்க மலர்களையும் கையில் கொண்டு காலை, மாலை, உச்சிப்போது ஆகிய மூன்று பொழுதுகளிலும் உன்னுடைய அடிகளிலே வணங்கினேன். மன்மதனே! இவன் சத்தியம் தப்பினவன் என்று நெஞ்சு கொதித்து, வாயாலும் அழித்து உன்னை வையாமல் இருக்க வேண்டுமானால் கொத்து கொத்தாக மலரும் பூங் கணைகளை தொடுத்துக் கொண்டு வியக்கத்தக்கவனாய் திருமலையில் விளக்கிலே புகும்படி என்னை நியமிக்க வேண்டும்.

3.4.5. நான்காம் பாட்டு

507 சுவரில் புராண!நின் பேரெழுதிச்
கறவநற் கொடிகளும் துரங்கங்களும்
கவரிப் பீணாக்களும் கருப்பு வில்லும்
காட்டித்தந் தேன்கண்டாய் காமதேவா!
அவரைப் பீராயந் தொடங்கியென்றும்
ஆதரித் தெழுந்தவென் தடமுலைகள்
துவரை பீராவுக்கே சங்கற்பித்துத்
தொழுது வைத்தேன்ஒல்லை விதிக்கிற்றியே. (4)
(பாகம் 2, பக் 751, பாடல் 507)

பொருள்: பழையவனே! (மன்மதனே!) சுவர்களிலே உன்னுடைய பெயர்களை எழுதினேன். அத்துடன் சுறாமீன்கள் எழுதப்பட்ட நல்ல துகில் கொடிகளையும், குதிரைகளையும், சாமரங்களையுடைய பெண்களையும், கரும்பாகிய வில்லையும் உனக்கு உரித்தாகும்படி செய்தேன். இளமைப் பருவம் முதலாக என்றும் ஒருப்படிப் பட விரும்பிக் கிளர்ந்த என்னுடைய பருத்த முலைகளை துவாரக நாதனான கண்ணனுக்கே என்று சங்கல்பித்துக் கொண்டு தொடுத்தேன், சீக்கிரமாக விதிக்க வேண்டும். (சேர்க்க வேண்டும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3.4.6. ஐந்தாம் பாட்டு

508. 'வானிடை வாழமவ் வானவர்க்கு
மறையவர் வேள்வியில் வகுத்த அவி
கானிடைத் திவதோர் நரி புகுந்தது
கடப்பதும் மோப்பதும் செய்வதொப்ப
ஊளிடை ஆழி சங்கு உத்தமற் கென்று
உன்னித் திகைந்தவென் கடமுலைகள்
மானிட வர்கொன்று பேச்சுப்படில்
வாழகில் லேன் கண்டிய மன்மதனே (5)

(பாகம் 2, பக் 752, பாடல் 508)

பொருள் : **மன்மதனே!** தேவருலகில் இருக்கும் சிறந்த பிறப்புடைய தேவர்களுக்காக, இங்குள்ள பிராம்மணர்கள் தம்முடைய யாகங்களிலே உண்டாக்கிய அவி உணவை, காட்டிலே திரியும் நரியானது புகுந்து அதைத் தனதாக்கிக் கொள்வதையும், வாசனை மோப்பதையும் செய்வது போல தம் திருமேனியிலே திருவாழியையும், திருச்சங்கையும் (திருக்கைகளில்) உடைய புருஷோத்தமனுக்காகக் கிளர்ந்து எழுந்த என்னுடைய பெருத்த தனங்களானவை மனிதர்களுக்கென்கிற பேச்சு உண்டானால் உயிர் வாழமாட்டேன்.

3.4.7. ஆறாம் பாட்டு

509. 'உருவுடைய யார்இளை யார்கள் நல்லார்
ஒத்துவல் லார்களைக் கொண்டு வைகல்
தெருவிடை எதிர்கொண்டு பங்குனிநாள்
திருந்தவே நோற்கின்றேன் காமதேவா!
கருவுடைய முகில்வண்ணன் காயவண்ணன்
கருவினை போல்வண்ணன் கமல வண்ணத்
திருவுடை முகத்தினில் திருக்கண்களால்
திருந்தவே நோக்கெனக் கருளுகண்டாய் (6)

(பாகம் 2, பக் 753, பாடல் 509)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள்: **மன்மதனே!** அழகிய வடிவமும், இளமையும், நன்னடத்தையும் உடையவராய் காம சாத்திரத்திலே வல்லவர்களை முன்னிட்டுக் கொண்டு நாளும் அவன் (நீ) வரும் வழியிலே எதிரே சென்று பங்குனி மாதத்தில் பெரிய திருநாளிலே தெளிவாக நோற்கின்றேன். கருக்கொண்காளமேக் போன்ற நிறமுடையவனாய், காயாம் பூப்போன்ற திருநிறமுடையவனாய், காக்கணம பூப்போன்ற பளபளப்புடையவனாய், செந்தாமரை மலரின் நிறம் போன்ற ஒளியையுடைய திருமுகமண்டலத்தில் உண்டான திருக் கண்களாலே என் பொருட்டு அவன் விசேட அருள் செய்யும்படியாக நீ கடைக் கணிக்க வேண்டும்.

3.4.8. ஏழாம் பாட்டு

510. காயுடை நெல்லொடு கூம்பமைத்துக்
கூட்டி யரிசி யவலமைத்து
வாயுடை மறையவர் மந்திரத்தால்
மன்மத னேயுன்னை வணங்குகின்றேன்
தேசமுன் னளந்தவன் திரிவிக்கிரமன்
திருக்கைக ளாலென்னைத் தீண்டும் வண்ணம்
சாயுடை வயிறும் என் தடமுலையும்
தரணியில் தலைப்புகழ் தரக்கிற்றியே. (7)

(பாகம் 2, பக் 755, பாடல் 510)

பொருள்: **மன்மதனே!** பசுங்காய் நெல்லும் பரும்பும் படைத்து (அத்துடன்) கருப்புக் கட்டியும் பச்சரிசியும் அவலும் சமைத்து நல்ல சுவரத்தையுடையவராய் காமசாத்திரத்திலே வல்லவர்களுடைய மந்திரத்தாலே (என் பிள்ளையான்) உன்னை வணங்குகிறேன். (மூவுலகங்களும் மகாபலியால் அபகரிக்க) முற்காலத்திலே, எல்லா உலகங்களையும் திருவடிகளாலே அளந்து கொண்டவனாய் திருவிக்கிரமாவதாரம் செய்தருளியவன் (தான்) திருக்கைகளாலே என்னைத் தொடும் படியும் ஒளியுடைய வயிறும் மெல்லிய பருத்த தனங்களும் உலகில் நிலை நிற்கின்ற புகழைப் பெறும்படியும் செய்ய வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3.4.9. எட்டாம் பாட்டு

511. மாசுடை யுடம்பொடு தலையுலறி
வாய்ப்புறும் வெளுத் தொரு போதுமுண்டு
தேசுடைத் திறலுடைக் காமதேவா!
நோற்கின்ற நோன்பினைக குறிக்கோள் கண்டாய்
பேசுவ தென்றுண்டிங் கெம்பெருமான்
பெண்மையைத் தலையுடைத் தாக்கும் வண்ணம்
கேசவ நம்பியைக் கால் பிடிப்பாள்
என்னும் இப்பேறெனக் கருளுகண்டாய் (8)
(பாகம் 2, பக் 256, பாடல் 511)

பொருள் : பிரிந்தாரைச் சேர்க்கையால் வந்த ஒளியையும் அவர்கள் விரோதியைப் போக்குகைக்குரிய மிடுக்கையுமுடையனாய் எனக்குச் சுவாமியான மன்மதனே, அழுக்குப்படிந்த உடம்போடு கூட தலைமயிரை விரித்துக் கொண்டும் (தாம்பூலம் தரிக்காததால்) உதடுகள் வெளுத்தும் ஒரே வேளை உண்டும் நோற்கிற இந்த நோன்பை நீ எப்போதும் நினையில் வைக்க வேண்டும். இப்போது சொல்லவேண்டுவது ஒன்று உள்ளது. என் பெண்மை தலைமை பெறும்படி கேசி என்னும் அசுரனை அழித்தவனாய் திருக்கலியாண குணங்கள் பூரணனாய் இருக்கிறவனுக்கு கால் பிடிப்பவள் என்கிற இப்பேற்றினை (புருஷார்த்தம்) எனக்கு அருள் வேண்டும்.

3.4.10. முதல் திருமொழி - ஒன்பதாம் பாட்டு

512. தொழுது முப் போது முன் னடிவணங்கித்
தாமலர் தூய்த்தொழு தேத்துகின்றேன்
பழதின்றிப் பார்க்கடல் வண்ணனுக்கே
பணிசெய்து வாழப் பெறாவிடில் நான்
அழுதழு தலமந்தம் மாவழங்க
ஆற்றவு மதுவுனக்கு உறைக்குல் கண்டாய்
உழுவதோ தெருத்தினை நுகங்கொடு பாய்ந்து
ஊட்டமின் றித்துறந் தாலொக்குமே
(பாகம் 2, பக் 757, பாடல் 512)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள்: முக்காலங்களிரும் (மனதாலே) உன்னை தொழுது தலையாலே வணங்கி உன்னுடைய அடிகளிலே பரிசுத்தமான மலர்களை பணிமாறி தொழுது தோத்திரம் செய்கின்றேன். பூமியைச் சூழ்ந்திருக்கும் கடல் போன்ற திருநிறம் உடையவனுக்குப் பழுதில்லாமல் கைங்கரியம் செய்து நான் வாழ முடியாவிட்டால் பலமுறை அழுது தடுமாறி அம்மா என்று கூப்பிட்டுக் கொண்டு சஞ்சரிக்க உனக்கு அது மிகவும் உறைக்கும். ஏர் உழுகிற ஒரே எருதை நுகத்தடியாலே தள்ளி தீனியில்லாமல் நீக்கி விடுவதை ஒக்கும்.

3.4.11. பத்தாம் பாட்டு

513. கூருப்பு வில் மலர்கணைக் காமவேளைக்
கழலிணை பணிந்தங்கோர் கரியலற
மருப்பினை ஒசித்துப் புள் வாய் பிளந்த
மணிவண்ணற் கென்னை வருந்திடென்று,
பொருப்பன்ன மாடம்பொ லிந்துதோன்றும்
புதுவையார் கோன்விட்டு சித்தன் கோதை
விருப்புடை யின்றமிழ் மாலைவல்லார்
விண்ணவர் கோனடி நண்ணுவரே (10)

(பாகம் 2, பக் 758, பாடல் 513)

பொருள்: கரும்பாகிய வில்லையும் மலர்கணைகளையும் உடையவனாய், யாவரையும் காமத்திலே மூட்டுகிற **மன்மதனை** ஒன்றுக்கொன்று ஒப்பான கழசங்கள் அணிந்த அடிகளை வணங்கி கம்சன் சபை வாசலிலே நிறுத்தப்பட்ட ஒப்பற்ற **குவலயாபீடம்** என்ற யானையானது வீறிடும்படியாக, அதன் கொம்பை முறித்து பரகாசூரனுடைய வாயைக் கிழித்துப் போட்ட நீலரத்தினம் போன்ற வடிவழகையுடையவனோடு என்னை சேர்த்து விடவேண்டும் என்று மலை போன்ற மாளிகைகள் நிறைந்து தோன்றும் ஸ்ரீ வில்லிபுரத்தில் ஆண்டாளுடைய விருப்பப்படியாகப் பிறந்த இனிய தமிழ் மாலைகளைப் பாடவல்லவர்கள் அயர்வுறும் அமரர்களின் அதிபதியானுடைய திருவடிகளை அடையப் பெறுவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3.5.0 மகாபாரதத்தில் மன்மதனும் இரதியும் பற்றிய செய்திகள்

மகாபாரதத்தின் ஆதிபருவம் வேந்திரகீயச் சருக்கம்
எண் சீர் ஆசிரிய விருத்தம்

இப்பாடலில் மன்மதன் இராட்சகனாக வர்ணிக்கப்படுகின்றான்.

3.5.1. மன்மதனாகிய இராட்சதன்

440 நீடி இங்குதான் நின்கின் மாரனாம்
நிருதன் நிற்கஅந் நிருதன் வெம்மையோடு
ஓடி வந்தெனைக் கொல்லும் உம்மையும்
ஒரு கணத்திலே உயிர்செ குத்திடும்
நாடி என் கொல் மற்றுஉய்ந்து போகலா
நம்பி என்னை நீநலமுறத் தழீஇக்
கோடி அம்பரத் திடை எழுந்துனைக்
கொண்டு போவல்ஓர் குன்றில் என்னவே
(வில்லிபாரதம் பாகம் 1, பக்175, பாடல் 440)

நான் இங்கு காலதாமதம் செய்தால், **மன்மதனாகிய இராட்சதன்** என்னைக் கொல்வதற்கு அமைந்து நிற்க, அவனுக்கு முந்தி, அந்த இடும்பனாகிய இராட்சசன் கடுயொக ஓடி வந்து என்னை கொன்றுவிடுவான், உன்னையும் கொன்றுவிடுவான். நாம் தப்பிச் செல்வோம் எங்கனமெனில் நீ எனை தழுவிக் கொள்வாய். நான் வானத்தில் எழுந்து உன்னை ஒரு மலையிடத்தே கொண்டு செல்வேன்

3.5.2 திரௌபதையின் செவிலியர் கூற்றாக வரும் ஒரு பாடல்

537 'பெண்மைக்கு இரதி என வந்த
பெண் ஆர் அமுதே பேருலகில்'
(வில்லிப்புத்தூர் பாரதம் பக், 215, பாடல் 517)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என இரதியின் சிறப்பை அமிர்தம் போல் பேருலகில் சிறந்தவள் என உவமித்து கூறப்படுதலைக் காணலாம்.

3.5.3 திரௌபதையின் திருமணம்

544 வில்லாண் மையினால் வெங்கூருப்பு
வில்லோன் தனக்கே நிகரென்னப்
பல்லார் புகழும் பான்மையினால்
பதினெண் புவிக்கும் பதியாய
எல்லா அரசும் நின்பொருட்டால்
ஈண்டே திரண்ட இன்னமுதச்
சொல்லாய் நல்லாய் மென்பூவாய்
தோகாய் பாவாய் திரௌபதியே
(வில்லி பாரதம் பாகம் 1, பக் 218, பாடல் 544)

வில்லெடுத்து போரிடுவதில் மன்மதனே ஒப்பற்றவன் அவனுக்கு ஒப்பான பதினெட்டு தேசத்து அரசர்கள் திரௌபதையின் திருமணத்திற்கு வந்ததாக செவிலியர் கூற்றாக வரும் ஒரு பாடல் கூறுகிறது. இப்பாடலில் மன்மதனின் விற் போர் சிறப்பு பதினெட்டு நாட்டரசருக்கு ஒப்பானதாக சிறப்பித்து கூறப்படுவதை காணலாம்.

மௌத்கல்யர் என்பவன் தன் மனைவியின் வழிபாட்டை பார்த்து அவள் பால் அன்பு கொண்டு விகாரமாக தன் வடிவத்தை மாற்றிக் கொண்டு மன்மதனும் போற்றுதற்கரிய மிக்க அழகிய யானை வடிவமெடுத்தான் என கூறுகிறது ஒரு பாடல்.

3.5.4 மௌத்கல்யர் அன்பு கொள்ளல்

574 தன்பங் கைசன் திறைநல்கமுன்
சாபம் வாங்கும்
வன்பன் தனக்கும் கிடையாத
வடிவு கொண்டான்
(வில்லி பாரதம் பாகம் 1, பக் 232, பாடல் 574)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பாடல் மன்மதனே மிக அழகுடையவன் என்பதை மறைபொருளாக எடுத்து காட்டுகிறது.

3.5.5 தீர்தயாத்திரைச் சருக்கம் - கலிவிருத்தம்
பாண்டியன் மகளை மணத்தல்
அறுசீர் ஆசிரிய விருத்தம்

678 வேதியரொடு அக்காவில் இளைப்பாறி
இருந்தளவின் மின்குழாம் போல்
தாதியரும் சேடியரும் தற்சூழச்
சிலைமதனன் தனிசே விக்கச்
சோதியரிச் சிலம்பரற்றத் துணை நெடுங்கண்
செவியளப்பத் தொடித்தோள் வீசி
ஆதிஅர வீந்தையென நிருபன் மகள்
விளையாடற்கு ஆங்கு வந்தாள்'
(வில்லி பாரதம் பாகம் 1, பக் 296, பாடல் 678)

பாண்டியன் மகளான சித்திராங்கதை தோழியருடன் சோலையில் உலா வரும் போது அவள் மன்மதனை வழிபட திருமகள் போல் வந்தாள் என கூறும் பாடல் ஒன்றும் காணப்படுகின்றது.

இதன் மூலம் மகாபாரதக் காலத்தில் மன்மதன் வழிபாடு நிலவியமைக்கான சான்றாக காணப்படுகின்றது இப்பாடல்.

பாண்டியன் மகளான சித்திராங்கதையை கவரும் எண்ணத்தோடு அருச்சுணன் காதல் மிகுதியால் சாமனையும் அவனது தமயனான **மன்மதனையும்** விட அழகிய வடிவுடையவனாக நின்றான் என்கிறது ஒரு பாடல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3.5.6 அருச்சுனன் மீதான காதல்

681 முன்னுருவம் தனை மாற்றி முகில்வாகன்
திருமதலை மோகி யாகித்
தன்னுருவம் தனைக் கொண்டு சாமனிலும்
காமனிலும் தயங்கு மெய்யோன்
பொன்னுருவம் என மலர்ந்து பொலிந்ததொரு
சண்பகத்தின் பூந்தண் நீழல்
மின்னுருவம் நுண் இடையாள் விழிகளிக்கும்
படி நின்றான் வீரர் ஏறே
(வில்லி பாரதம், பாகம் 1, பக் 277, பாடல் 681)

இப்பாடலில் மன்மதனையும் அவன் சாமனையும் விட மிகுந்த அழகுடையவனாக அருச்சுனன் உருமாறினான் என எடுத்துக் காட்டப்படுகிறது.

3.5.7 மனமொன்றிய காதல்

செந்திருவை அனையாளும் திருமாலை
அனையானும் சிந்தை ஒன்றாய்
வந்திருவர் விலோசனமும் தடையின்றி
உறவாடி மகிழ்ச்சி கூர்ந்து
வெந்துருவம் இழந்தமதன் மீளவும் வந்து
இரதியுடன் மேவு மாபோல்
கந்தருவ முறைமையினால் கடவுளர்க்கும்
கிடையாத காமம் துய்த்தார்
(வில்லி பாரதம், பாகம் 1, பக் 278, பாடல் 683)

சித்திராங்கதையும், அருச்சுணனும் ஒருவர் மீது ஒருவர் காதல் கொண்டு கண்களால் உறவு கொண்டனர். அவ்வுறவு மன்மதன் மீண்டும் வந்து இரதியுடன் காந்தருவ முறையில் இன்பம் அனுபவித்தது போல் இன்பம் அனுபவித்தனர் என கூறுகிறது இப்பாடல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3.5.8. மயிரம்பு பாய்தல்

689 வழுதிதிரு மகள் கொடுத்த மையலினால்
வடிவமும்தன் மனமும் வேறாப்
பொழுதுவிடி வளவும்மதன் பூசலிலே
கூருத்தழிந்து பூவாம் வாளி
உழுதகொடும் புண்வழியே ஊசிநுளைந்
தெனத் தென்றல் ஊர ஊர
விழி துயிலா விசயனும் அவ் விபுதருடன்
துயிலுணர்ந்து விதியும் செய்தான்'
(வில்லி பாரதம், பாகம் 1, பக் 280, பாடல் 689)

சித்திராங்கதை மீது மையல் கொண்டவனான அருச்சுணன் கண் துயிலாதவனாய் மன்மதன் செயலால் மனம் வருந்தி அவனது மயிரம்பை தன் உடம்பில் இடைவிடாது பாய்த்தான். கொடும் துளை இருந்த இடத்தில் ஊசி துளைத்ததை போல் உணர்ந்தான் என வருகிறது இப்பாடல்.

3.5.8. மன்மதன் கணை தொடுத்தல்

690 பஞ்சவரல் நடுப்பிறந்தோன் பஞ்சவன்பேர்
அவைஎய்திப் பஞ்ச பாண
வஞ்சகன்செய் வஞ்சனையால் மதிமயங்கி
இருந்துழிஅம் மதுரை வேந்தன்'
(வில்லிபாரதம் பாகம் 1, பக்கம் 281, பாடல் 690)

மன்மதன் தன் மலர்க்கணைளான தாமரை, அசோரு, மா, முல்லை, நீரோற்பவம் என்ற பஞ்ச பானங்களான கன்னியை மறைந்து நின்று அம்பு எய்தினான் வஞ்சகன் என புலம்புகின்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3.5.9. திருமணச் சடங்கு

695 இந்திரனும் சசியும்என இறையோனும்
உமையுமென எம்பி ரானும்
செந்திருவும் எனக்காம தேவும்இர
தியும்எனவெஞ் சிலைவ லோனும்
சந்தணிபூண் முலையாளும் சதுர்மறையோர்
சடங்கு இயற்றத் தழல்சான் றாகத்
துந்துபியின் குலம் முழங்கச் சுரிசங்கின்
குழாத்தழங்கத் துலங்க வேட்டார்
(வில்லிபாரதம் பாகம் 1, பக் 283, பாடல் 695)

பாண்டியனது விருப்பத்தோடு அருச்சுணனும் சித்திராங்கதையும் திருமண சடங்கில் தோன்றிய கோலத்தை பின்வரும் பாடல் எடுத்து காட்டுகிறது. அக்கோலம் இந்திரனும் இந்திராணியும் போல், திருமாலும் இலக்குமியும் போல், மன்மதனும் இரதியும் போல் தோன்றுவதாக வருகிறது இப்பாடல்.

3.5.10. காமத்தை உண்டுபண்ணுதல்

716 இற்றை மன்மதன்....
என்செய்வோம்'
(வில்லிபாரதம் பாகம் 1, பக் 293, பாடல் 716)

சுபத்திரையை கனவில் வதைத்து காமத்தை உண்டாக்கிய அருச்சுணன், சுபத்திரை மதனை வழிபடும் செய்தி கேட்டுப் போது மன்மதன் காதலை போக்க என்ன செய்வோம் என உடல் ஏங்கி உடல் மெலிந்தான் என வரும் பாடல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3.5.11. காண்டவ தகனச் சருக்கம்
வேனிற் பருவ வருணனை
அறுசீர் ஆசிரிய வீருத்தம்

746 கலக்கமுற இளவேனில் கலக்கம்எழுந்
திடும்பசுந்தண் காவு தோறும்
சிலைக்கணிநாண் முறுக்குவபோல் தென்றலின்பின்
சுழலளிகள் சேர ஓட...
(வில்லி பாரதம், பாகம் 1, பக் 306, பாடல் 746)

மகாபாரதத்தில் காண்டவ தகன சருக்கத்தில் வண்டுகள் மன்மதனுடைய நாணை முருக்கேற்றுவது போல் ஒலிக்கின்றன என ஒரு பாடல் பகுதி வருகின்றது.

3.5.12. செங்கழுநீர் மலரும் செந்தாமரை மலரும்

747 செங்காவி செங்கமலம் சேதாம்பல்
தடந்தொறுமுத் தீக்க ளாகப்
பைங்காவின் நெடுஞ்சினைக்கை மலர்நறுந்தேன்
ஆகுதிகள் பலவும் வீழ்த்த
உங்கார மதுகரங்கள் ஓங்காரச்
சுருதிஎடுத்து ஓத வேள்வி
வெங்காமன் இரதியுடன் புரிந்துதன்
தென்றல்அந்தேர் மேற்கொண் டானே
(மகாபாரதம் பக் 307, பாடல் 747)

இப்பாடலில் செங்கழுநீர் மலரும் செந்தாமரை மலரும், செவ்வாம்பல் மலரும் ஆகிய இவை மூன்றும் நீர் நிலைகள்தோறும் அக்கினி ஆகவும் நீண்ட பசுமையான சோலையின் கைகளாகிய கையின் மலர்களினின்று தேனாகிய ஓமங்கள் பலவற்றையும் வீழமாறு செய்யும் வண்டுகள் சுருதி செய்யவும் யாகத்தை மன்மதன் இரதியுடன் சேர்ந்து செய்து விட்டு தென்றலாகிய தேரில் ஏறிக்கொண்டான் எனக் கூறப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3.5.13. நீர் விளையாட்டு

757 பாண்டுமதலை யுங்காதல் பாவையரும்
துழாயோனும் பாவை மாரும்
ஈண்டுபெருஞ் சனத்துடனே இவ்வண்ணம்
இடந்தோரும் இனிதின் நாடி
ஆண்டுவரி சிலைமதனும் அவன்படையும்
செவிப்ப அழகு கூர
மீண்டுதம மனைதோறும் நிரை நிறைவாள்
விளக்கேத்த மேவினாரே

(மகாபாரதம் பக் 313, பாடல் 757)

நீர் விளையாட்டில் ஈடுபட்ட அருச்சுணனும் அவன் மனைவியும், கண்ணப்பிரானும் அவன் மனைவியும் நகர மாந்தருடன் சோலையில் இருந்த நீர்த் தடாகங்களில் இனிதாக நீராடி அங்கே மன்மதனும் அவனது பரிவார மகளிரும் கண்டுகளிக்க அச்சோலையிலிருந்து புறப்பட்டு பணிப்பெண்கள் விளக்கேந்தி நிற்க தம் வீடுகளுக்குச் சென்றனர்.

3.5.14. இன்பம் நுய்தல்
முதுவேனில் வருணனை

759 திலகநுதல் குருவியர்தம் செவிபூவில்
அளிஇனத்தின் சிறார்க் காற்றால்
புலரமது நுகர்மாதர் புன்முறுவல்
இதழ்ஊறல் புதிதின் மாந்தி
இலகுபரி மளம்புளகம் ஈரமுலைத்
தடமுழ்கி இரதி கேள்வன்
கலகமிடும் பரிதாபம் அகற்றினார்
இனிமையுடன் கவர்ந்த கேள்வர்

(மகாபாரதம் பக் 317, பாடல் 759)

இப்பாடலில் இன்பம் பெற மடவாரைக் கூடின கணவர் திலகந்தீட்டிய நெத்தியில் வேர்வை நீர் சிறு காற்றால் உலராது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிற்க மதுவைப் பருகுகின்ற மாதராரின் இதழில் ஊறும் நீரைப் புதுமை பெற பருகி மார்பில் படிந்த மன்மதனின் மயிரம்பு கொண்டு பொருதலினாலாகிய துன்பத்தை போக்கினார். ஆடவரும் பிரிந்த நிலையில் வருந்திய மடவாரும் ஒன்று கூடி அவ்வருத்தம் நீக்கி இனிது இன்பம் துய்தனர் என கூறப்படுகின்றது.

3.5.15. இளவேனில்

760 மாரவசந் தனைஅகன்று வியங்குருவேங்
கோடையீனான் மருகியாற்றாது
(லில்லி பாரதம், பாகம் 1. பக் 312, பாடல் 760)

மன்மதனின் தோழனான இளவேனிலைப் பற்றி குறிப்பிடும் இப்பாடல் பகுதியில்

3.5.16. தேராகியத் தென்றல்

39 சுருதிப் படியே வரராய
சூயப் பெயர்மா மகந்தொடங்கக்
கருதிக் குணபால் எம்முன்னும்
வடபால் யானும் கால் திசைக்கும்
நிருதித் திசைக்கும் நடுஎம்பீ
இவனும் சிலைவேள் நிரைமணித்தேர்
வருதிக் கினில்இவ் இளையோனும்
மலைவான் எழுக வருகஎனா. (39)
(லில்லி பாரதம், பாகம் 2. பக் 17, பாடல் 39)

வேதவிதிப்படியே சிநந்த ராயசூயமென்னும் யாகத்தை ஆரம்பிப்பதற்கு ஆலோசித்து, கிழக்குத் திக்கில் எமது தமையனான வீமனும், வடக்குத் திக்கல் நானும், தென்மேற்கு, மேற்கு, வடமேற்கு ஆகியவற்றிற்கு நகலனும் தெற்குத் திக்கில் சகாதேவனுமாக, போர் செய்தற் பொருட்டு எழுந்து செல்வோமாக என்று, மன்மதனுடைய தேரான தென்றல் வரும் திசை தெற்கு என்பதாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3.5.17. ஆரண்ய பருவம்

அருச்சுனன் தவநிலைச் சருக்கம்

தேவமாதருக்கு உதவியாக மன்மதனும் உடன் வருதல்

52 காமனை நினைத்தனர் காம ராசனும்
மாமலர் வாளியும் மதுர சாபமும்
தேமரு மலர்க்கையில் சேர்த்திச் சேனையோடு
ஆமுரை புகுந்தனன் அரனும் அஞ்சவே

(வில்லிபாரதம் ஆரணிய பருவம் பக் 213, பாடல் 52)

இப்பாடல் தேவமாதர்க்கு உதவியாக மன்மதன் உடன் வருதலைப் பற்றிக் கூறுகிறது.
தேவமாதர்கள் மன்மதனை வரும்படி எண்ணினார்கள் எண்ணவே மன்மதனும் மலரம்புகளையும் இனிமையான கரும்பு வில்லையும் காவுரை போன்ற தன் கையில் எடுத்துக் கொண்டு சோலையாகிய அம்மகளிர்களுடனே அவன் வருகின்ற மிடுக்கினை பார்த்து சிவனும் அஞ்சும் படியாக உரிய முறைப்படி அருச்சுனன் தவம் செய்யும் இடத்திற்குள் புகுந்தான்.

குமரக்கடவுள் தோன்றவேண்டும் என்பதற்காக தேவர்களின் வேண்டுகோளின் படியே மன்மதன் சிவனது தவநிலையை கலைத்தான். எனவே அரனும் அஞ்சுவான் என கூறுகின்றது இப்பாடல். இதன் மூலம் குமரக்கடவுளது ஆட்சியை மீண்டும் கொண்டுவரவே சிவனது தவத்தை மன்மதன் அழித்தான் என இப்பாடலில் கூறப்பட்டுள்ளதை காணலாம்.

3.6.18 இளவேனில் காலம்

55 சம்பரா சுரனை வென்ற வீ ரனைப்பைந்
தாமமா மணிமுடி சூட்டி
ஏம்பீரான் முனிவுக்கு அஞ்சல்என் பதுபோல்
இயைந்தது வசந்தகா லமுமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளவேனிற் காலம் மன்மதனுக்கு உகந்ததெனக் கூறும் பகுதி இதுவாகும்.

(வில்லி பாரதம், பக். 214, பாடல் 55)

3.6.18 மன்மதன் அருச்சுனன் மீது அம்புகள் பல எய்து இளைத்தல்

மன்மதன் அருச்சுணனது தவப்பலத்தை கலைப்பதற்காக அம்புகளை எய்தான் என பின்வரும் பாடல் கூறுகிறது.

காவும் வன் புறவும் கயங்களும் அரும்பக்
கவர்ந்தவெங் கணைகளாம் ஐந்து
பூவும் வந்து உள்ளம் உற உறப ் பட்டுப்
புதையவும் புலன்வழி யன்றி
மேவுதன் கூருத்தின் வழியிலே நின்ற
விசயனை அங்கிபால் வில்லும்
ஏவுமுன் பெற்ற இறைவனை எய்துஎய்து
இளைத்தனன் இரதிகேள் வலமே..

(வில்லிபாரதம், ஆரணியக் காண்டம், பக்கம் 219, பாடல் 64)

சோலைகளும் வளப்பம் மிக்க காடுகள், நீர் நிலைகள் ஆகியவைகள் அசோக, மல்லிகை, தாமரை, குவளை போன்ற மலர்களை தோற்றுவிக்க அம்மலர்களை மன்மதன் பறித்து அருச்சுணன் மீது தொடுத்தான். அம் மலர்க்கணைகள் தன் உள்ளத்தில் நன்றாக பதியவும் புலன்கள்வழியில் செல்லாமல் சிவபெருமானுடைய திருவருளை பெறவேண்டும் என்ற எண்ணத்தில் அக்கினி வேடனிடத்தில் காண்டீப வில்லும் அம்புகளைப் பெற்ற தலைவனாகிய அருச்சுணன் நிலைத்து நின்றான். அதனால் அவன் மீது பலமுறை மலர்க்கணைகளை தொடுத்தும் மன்மதனால் அருச்சுணன் உள்ளத்தில் சலனத்தை ஏற்படுத்த முடியவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3.5.20 சிவனது தவமழித்தல்

அன்று அரண் இருந்த யோகினை அகற்றி
அறிவிலாது அநங்கனாய் வெந்த
குன்றிது தடங்கண் ஆயிரம் உடையோன்
கூறிய கூற்றினைத் தேறி
இன்றவன் மதலை புரிதவம் குலைத்தால்
என் விளைந் திடும்என அஞ்சி
நின்றிலன் மதனன் நிற்குமோ நெற்றி
நெருப்பினால் நீருபட்டு உள்ளோன்

(வில்லிபாரதம் பாகம் 2, பக 220, பாடல் 66)

சிவனது தவத்தை குலைத்ததனாலான வேகம் வெந்து அனங்கனான மன்மதன் அருச்சுணனின் தவத்தைக் குலைக்க அஞ்சி சென்றான் என வரும் பின்வரும் பாடல் சிவபெருமான் மன்மதனுக்கிடையிலான போர் மகாபாரத காலத்திற்கும் முந்தியது என்பதற்கு சான்று பகர்கின்றது.

பிற்குறிப்பு : மகாபாரத பாடற்பகுதிகளில் உபதலைப்புக்கள் ஆதார நூல்களில் காணப்படாதவிடத்து பொருத்தமான உபதலைப்புக்கள் இந்நூலாசிரியரால் வழங்கப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4.0.0 காமன் கூத்து மலையக தமிழரின் மரபுரீமை அறிவியலும் தொழில்நுட்பமும்

4.1. கிரீடம்

மன்மதனுக்குரிய கிரீடத்தை மரபுரிமையாகவும், பரம்பரையாகவும் பெற்ற அறிவியலையும், தொழில்நுட்ப முறைகளையும் கொண்டு பாரம்பரிய கலைஞர்கள் உருவாக்குகின்றனர். மிகமிக நுணுக்கமானதும், கடினமானதுமான இப்பணியில் நீண்டகால அனுபவ முதிர்ச்சியும், தேர்ச்சியும் மிக்க கைவினைஞர்கள் தமக்கே உரிய தேர்ச்சியுடனும், கைநேர்த்தியுடனும் ஈடுபடுகின்றனர்.

பதமான முள்முருங்கை மரத்தினை காயவைத்து உரிய பதத்தோடு அதனை துளையிட்டு செதுக்கி அரிய நுணுக்கங்களுடன் எழிலுற கிரீகடமொன்றை உருவாக்குகின்றனர்.

அதிகமான பொறுமையோடு சிறுசிறு வேலைகள் ஒவ்வொன்றையும் செய்து நன்கு செப்பமானதொரு கிரீகடம் உருவாக்கப்படல் வேண்டும். முருங்கையை கூம்பக வடிவமாக செதுக்கி துளையிட்டு அதன் கலசங்களை செப்பனிட்டுப் பொறுதி கண்ணாடி, நிறக்கற்கள், மினுக்கும் பொருட்களை நூதனமாக பதித்து, வர்ணம் பூசி அதன் மேல் நிறக்கடதாசிகளை ஒட்டி ஒரு அழகிய கிரீகடத்தை உருவாக்குகின்றனர்.

வெட்டுளி, சிறுகத்தி, ஆணி, கம்பித்துண்டுகள், உடைந்த கண்ணாடி ஓடுகள் என்பன கருவிகளாக பயன்படுத்தப்படுகின்றன.

கைவினை கலைஞரின் அனுபவம், தேர்ச்சி என்பவற்றைப் பொறுத்து கிரீகடத்தை தயாரிப்பதற்கான காலமும் கூட வேறுபடுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4.2. உடை, அணிகலன்கள்

மன்மதனுக்குரிய உடையாக பச்சை நிற பாவாடையும், மேற்சட்டையும் அணிகின்றனர். இலகு பச்சை நிறத்திலமைந்ததாக காணப்படல் வேண்டும்.

மதன், இரதி அணிய வேண்டிய உடைகள் பற்றிய வர்ணனைகள் மதனரதி ஒப்பாரிப் பாடல்களில் விரிவடைகின்றன.

இரதியின் அணிகலன்களையும், அலங்காரத்தையும் குறிக்கும் பாடலொன்று வருகின்றது.

'சரிகை சிமிக்கி தகதக எனவே
சுந்திர ஓலை பளீர்பளீர் எனவே
குந்த மூக்குத்தி மினுமினு எனவே
தையல் ரதி கூந்தல்தனை மைபோலவே சீவி
சந்திரபிறை சூரியமறை மாந்தரை கொன்றைப்பூ
சாந்து சவ்வாது சந்நதனம் புணுகு
அத்தீப்பு, பண்ணீர், வெற்றிவேர், மாங்கொத்து
அத்த முள்ள ரோசாவும் விந்தையுள்ள புஸ்பங்களும்
அழகான ஆரங்கட்டி புகழ் ரதி கூழத்திலிட்டு
அணியணியாக மாட்டி பணிகளெல்லா பூட்டினார்கள்'

மன்மதனின் ஆடை ஆபரணங்கள் பின்வரும் பாடலில் விவரிக்கப்படுகின்றது.

'அற்புதமான கச்சையணிந்து
பச்சை நிற மேலங்கியணிந்து
விசித்திர நவமுத்து பதித்து
மேக வர்ண இடை தாவடமணிந்து
வைர கிரீகட புஜம் கீர்த்தியணிந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வச்சி முடியும் மாலையணிந்து
கச்சிதமாக கங்கணமணிந்து
மங்கள வாத்தியத்துடன் மங்கைபடை புடைசூழ்ந்து வர
மணவாள கோலமுடன் கண தேவரழைத்து வந்து'

எனக்குறிப்பிடப்பட்டுள்ளது. இதன்படி கச்சை, பச்சைநிற மேலங்கி, நவ முத்துமாலை, மேகவர்ண இடைத்தூவரம், வைரம்பதித்த கிரீடம், புஜம், வச்சுமுடி, மாலை, கங்கணம் என்பன மன்மதனுக்குரிய சிறப்பான ஆடை அணிகலன்களாகக் காணப்படுகின்றன.

4.3. மாலை

மதன் இரதி அணியும் மாலைகள் பல்வேறுபட்ட காய்கள், மரக்கோர்வைகள், கண்ணாடி என்பவற்றில் செய்யப்பட்டு சேர்த்துக் கட்டப்படுகின்றன. மலர் மாலைகளும் பயன்படுத்தப்படுகின்றன.

4.4. கைபுயம்

தோழ்பட்டைக்கும், கைக்கும் புயம் அணிவிக்கப்படுகின்றது. இப்புயம் ஆண்மையையும், அழகையும் பராக்கிரமத்தையும் காட்டுவதாக அமையும். இதுவும் முள் முரங்கையினால் செய்யப்படுகின்றது. பெண்களுக்கு இலகுரக புயம் அணிவிக்கப்படுகின்றது.

4.5. இடைப்பட்டி

முள்முருங்கை மரத்தில் சீவப்பட்ட வட்ட வடிவான அல்லது சதுரவடிவான துண்டுகளில் கண்ணாடி மிணுக்கும் பொருட்கள் பொறுதி துளையிட்டு பட்டியாக தயாரிக்கப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4.6. நிகழ்வெளி, களம்

காமன் கூத்தின் நிகழ்கள்ம் ஒரு திறந்த வெளியாகும். நிச்சயிக்கப்பட்ட ஓரிடத்தில் காமன் நாட்டப்பட்டு திண்ணை அமைக்கப்படும். அவ்வாறு திண்ணை அமைந்துள்ள களம் தொடர்ச்சியாக காமன் கூத்து நிகழ்த்துவதற்கான நிரந்தர களமாக காணப்படும்.

மலையக தோட்டப்புறங்களைப் பொறுத்தவரையில் ஒரு தடவை காமன் கூத்து நிகழ்த்தப்பட்ட களம் நூற்றாண்டுகளுக்கு மேலாக எத்தகைய மாற்றமும் இன்றி பராமரிக்கப்படுவதைக் காணலாம். களத்தில் ஏற்படும் மாற்றமெல்லாம் தீப்பந்தங்களுக்கு பதிலாக எரிவாயு விளக்கும், பின் மின்னொளியும் பாய்ச்சப்பட்டு களம் ஒளியூட்டப்படுவது, ஒலிபெருக்கிகள் பாவிக்கபடுவது, மாவிலை, தென்னம் பனையோடு பொலித்தீன் கொடிகளும் அலங்கரிப்பது என்பதோடுதான் காணப்படுகின்றது. காமன் நாட்டப்படும் முன்பும், எரிக்கப்படும் முன்பும் ஆடுகளம் மண்ணிட்டு, புல்வெட்டி செப்பனிடப்படுவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

4.7. பங்குபற்றும் சமூக சக்திகள்

மலையக தோட்டப்புறங்களில் நிகழ்த்தப்படும் காமன் கூத்தில் உழைக்கும் தொழிலாளர்கள், திருமணமாகத இளைஞர்களே பொரும்பாலும் பங்கு கொள்கின்றனர். வாத்தியார்களாக அனுபவமிக்க பெரியவர்கள், ஈடுபாடுள்ள இளம் தொழிலாளர்கள் என்போர் காணப்படுகின்றனர். இரதி, மதன் பாத்திரம் ஏற்போர் 15 - 40 வயதுக்கிடைப்பட்டோராய் காணப்படுகின்றனர். நீண்ட நேரம் களத்தில் ஆடவேண்டியிருப்பதோடு, மிகுந்த உடல்வலுவும், சோர்வின்மையும் காணப்பட்டால் மாத்திரமே 10 - 12 மணித்தியாலங்கள் தொடர்ச்சியாக கூத்தாட முடியும். எனவே இளைஞர்களே பெரும்பாலும் மதன், இரதி பாத்திரமேற்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் மதன், இரதி பாத்திரமேற்போருக்கு காதல் கைகூடுமெனவும், விரைவில் திருமணம் நடக்கும் என்ற நம்பிக்கையும் காணப்படுகின்றது. எனவே தான் காமன் கூத்து முழுமைக்கும் ஆடாத போதும் இடைநாட்களில பதிலாட்களாகவேனும் வேடமிட வேண்டும் என்ற ஆவல் இளைஞர்களிடையே காணப்படுகின்றது.

சில தோட்டங்களில் பாரம்பரியமாகக் கூத்தாடும் பரம்பரைகள், மற்றும் சூழ்நிலைகளை சார்ந்துள்ள பாடசாலை மாணவர்களும் காமன் கூத்தில் முக்கிய பங்கேற்று வருகின்றனர்.

4.8. காமன் கூத்தின் பாலினப் பாகுபாடும் தொழிற்பிரிப்பும்

காமன் கூத்தினை நிகழ்த்துகின்ற இடங்களில் ஆண்கள் மட்டுமே செய்யவேண்டிய அல்லது ஆண்கள் மட்டுமே பங்குபற்ற கூடியதாக பல பாத்திரங்களும் வேலைகளும் அமைக்கப்படுகின்றன. இரதி, மதன், சிவன், தூதன், எரிதூதன், இந்திரன், நந்திதேவன், தேர்வசந்தன், இயமன், வீரபுத்திரன், காளியம்மன், தக்கன் போன்ற பாத்திரங்களில் ஆண்கள் மட்டுமே இன்றளவும் அனுமதிக்கப்படுகின்றனர். அதேபோல வாத்தியார் பின்பாட்டுக்காரர்கள், தப்பிசைப்போர், கோமாளி போன்ற பாத்திரங்களும் ஆண்களுக்கேயுரியன. குறத்தியர், சரஸ்வதி, இலட்சுமி போன்ற தேவர்சபை போன்ற துணைப்பாத்திரங்களில் தற்பொழுது பருவமடையாத சிறுமிகள் ஆங்காங்கே அனுமதிக்கப்படுகின்றனர்.

பெண்கள் திண்ணைக்கூட்டுதல், மெழுகுதல், சாணமிடல், களத்தை சுத்தம் செய்தல் ஆகிய பணிகளில் ஈடுபட அனுமதிக்கப்படுகின்றனர்.

காமன் கூத்து நிகழ்த்தப்படும் தோட்டத்தில் வீட்டு வேலைகளை விரதமிருப்போருக்கு உணவு சமைத்தல், காமன் தாலிகட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைபவத்திற்கு மாவிளக்கு தயாரித்தல் ஆகிய வேலைகளிலும் காமன் கூத்தினைப் பார்க்கவரும் அயலவர், உறவினரை பராமரித்தல் போன்ற வேலைகளிலும் ஈடுபடுகின்றனர். மேலும் விடியவிடிய பிள்ளை குட்டிகளோடு கூத்துப்பார்க்கும் பெரும் பார்வையாளர் குழுமமாக பெண்களே திகல்வதும் இங்கு குறிப்பிடத் தக்கதாகும்.

4.9. பார்வையாளர்கள்

காமன் கூத்து சமூகத்தின் அனைத்துத் தரப்பினரையும் ஒருங்கினைக்கும் ஓர் களமாகும். ஆண்கள், பெண்கள், சிறுவர்கள், பெரியோர்கள், வயோதிபர்கள், தொழிலாளர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள், தோட்டங்களுக்கு வெளியில் வசிப்போர், சுற்றயல் தோட்டங்களிலும், கிராமங்களிலும் வசிப்போர், அயல் நகரத்தார் உள்ளிட்ட ஒரு பெரும் பார்வையாளர் கூட்டம் காமன் கூத்தைப் பார்வையிடுவதற்கு திரள்கின்றனர். (உ-ம் பொகவந்தலாவை பெரிய எலிபடைதோட்டம்)

மேலும் தோட்டத்தில் வசிக்கும் சகலமதப்பிரிவினரும் காமன் கூத்தின் ரசிகர்களாயிருப்பதோடு காமன் பாடல்கள் பாடுபவராக இரப்பதை காணலாம். (உ-ம் பொகவந்தலாவை லெட்சுமி தோட்ட மத்திய பிரிவு)

மலையக தமிழரது பண்பாட்டையும், வாழ்நிலையையும் ஆராயும் பல்கலைகழக மாணவர்கள், ஆய்வாளர்கள், வெளிநாட்டு புலமையாளர்கள், ஆய்வாளர்கள் காமன் கூத்தை பார்வையிடவும், அதனை ஆராயவும் முற்படுவதைக் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4.10. நேர்த்திக்கடன் வைத்தல்/காணிக்கை கட்டுதல்

காமன் நாட்டப்பட்டு கூத்து நிகழத்தப்படும் போது கூத்தில் பங்கு கொள்வதற்கு முன் நிபந்தனையாக திருமணமாகாத இளைஞர்களும் அவர்தம் பெற்றோர்களும், உறவினர்களும் காமனை வேண்டி நேர்த்திக்கடன் வைக்கின்றனர். காமதேவன் மனமிறங்கி திருமண வாய்ப்பை ஏற்படுத்தி தருவான் என நம்பப்படுகின்றது. மலையக தமிழரிடையே திருமணத்திற்காக மட்டுமின்றி நோய்வாய்ப் பட்டோர் குணமடையவும், வீட்டு வைபவங்கள் சிப்படையவும், எதிரிகளை தண்டிக்கவும் வேண்டியும் நேர்த்தி வைக்கின்றனர்.

மேலதிகாரிகளின் கடுமையை குறைக்கவும், அவர்களை தண்டிக்கவும் வேண்டியும் நேர்த்திக்கடன் வைப்பதில் தொழிலாளர்கள் முன்நிற்கின்றனர். சில தோட்டங்களில் நேர்த்திக்கடனை நிறைவேற்றத்தவறிய காமனை நாட்டாமல் விடுவதன் மூலம் கடுமையாக தண்டிக்கும் தொழிலாளர்கள் சில நேரங்களில் காமன் கூத்து நிகழ்வை முற்றிலுமாக புறக்கணிப்போராகவும் காணப்படுகின்றனர்.

பக்திமயமாக கொண்டாடப்படும் காமன் கூத்தில் நேர்த்திகடன் வைத்தலும் அதற்கு பிரதியுபகாரத்தை காமனிடம் எதிர்ப்பார்த்தலும் மக்களின் ஆழமான நம்பிக்கையாகக் காணப்படுகின்றது.

4.11. காணிக்கை கட்டுதல்

மஞ்சள் துணித்துண்டொன்றில் பூவும், சில்லறை நாணயமும் சேர்த்து காமன் நாட்டப்பட்ட கம்பத்தில் கட்டப்படுவதே காணிக்கை கட்டல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4.12. மருள் கொண்டாடுதல்

காமன் கூத்தில் பாத்திரமேற்று ஆடுவோர் திடீரென எத்தகைய பிரக்ஞையுமின்றி சுயக்கட்டுப்பாட்டை இழந்தநிலையில் ஆடத்தொடங்குகின்றனர். சில வேளைகளில் கட்டக்கடங்காதவாறு விழுந்து புரளவும், கையிலுள்ள அம்பு வில், கவசங்களால் எதிரிலிருப்போரை தாக்கவும் விளைகின்றனர். இத்தகைய திடீர் இயக்கத்தில் பல தடவை மருள் கொண்டாடியோர் மட்டுமின்றி புதிதாக பாத்திரமேற்கும் எவருமே இந்நிலைக்கு உள்ளவதை காணமுடியும்.

மேலும் காளியம்மன், மாரியம்மன் வருகையின் போது பார்வையாளர்களின் பக்கத்தில் அமர்ந்திருக்கும் சகல வயது பெண்களும் மருள் மேற்கொண்டு சுய கட்டுப்பாடிழந்து தாம் என்ன செய்கின்றோம் என்பதே தெரியாமல் ஆடுவதை காணமுடியும்.

இறுதியாக பாத்திரமேற்று ஆடிய கிருஸ்தவ யுவதியொருவர் மருள்கொண்டாடியதையும் அவர் வேட்டியால் கட்டி பிடிக்கப்பட்டதையும் இங்கு குறிப்பிட முடியும்.

இந்நிலைமைக்கு என்ன பொருள் என திட்டவட்டமாக விளக்கிட முடியாத போதும் அதீத ஈடுபாடு, பக்திநிலை, மனஒருமை என்பவற்றின் உளவியல், உடலியல் விளைவாக மருள் அமைதல் கூடும்.

இனம் புரியாத நிலையில் தம்மை இயக்குவது யாதென மருள் கொண்டாடும் எவருக்குமே விளங்க முடியாதிருப்பதோடு தாம் வேறு எதையுமே காணமுடியவில்லை என்று கூறுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4.13. மருளடக்குதல்

மருள் கொண்டாடுவோரை கட்டுப்பாட்டில் கொண்டு வருவதற்காக முகத்திற்கு முன் கண்ணாடி காட்டப்பட்டு உருவம் காணுமாறு செய்யப்படுகின்றது. கால் பெருவிரலை அழுத்தி மிதித்தல், பூசகர் திருநீறு பூசுதல், நிலத்துக்கு மேல் ஆளை தூக்குதல் ஆகிய முறைகள் பின்பற்றப்படுகின்றன.

காமன் எரிக்கும் படலத்தினையொட்டி மதனுக்கும், இரதிக்கும் நடக்கும் சூடான வாதத்தால் இருவரும் தொடர்ச்சியாக மருள் கொண்டாடுவதால் அவர்களை கட்டுப்படுத்தவென இடுப்பில் பதினாறு முலம் வேட்டியை முறுக்கிக்கட்டி ஒருவர் இழுத்து பிடித்துக்கொள்ளும் முறையும் மலையகத்தில் பின்பற்றப்படுகின்றது.

4.14. இசைக்கருவீகள்

காமன் கூத்துக்கு பயன்படுத்தப்படும் இசைக்கருவிகளில் தனித்துவமானது "தப்பு" ஆகும். மலையகத்தில் தப்பு என்றழைக்கப்படும் இசைக்கருவியைப் பயன்படுத்தி கரகம் பூசைப்போடுதல், ஊர்வலம் வருதல், திருமணம், மங்கள இசை முழக்கங்கள், தண்டோரப்போடுதல், மரணத்தை அறிவித்தல் அல்லது துக்கத்தை வெளிப்படுத்துதல், காவடியாட்டம், கரகாட்டம், கும்மியாட்டம், கோலாட்டம் உட்பட பல்வேறு சமூக நிகழ்ச்சிகளின் போது தொடர்பாடலுக்கான மிக முக்கிய தொடர்புசாதனமாக பயன்படுத்தப்படுகின்றது. இன்றைய மரணவீடுகளில் தப்பிசைப்பது பெருமளவுக்கு கைவிடப்பட்ட நிலையில் காமன் கூத்தின் இறுதிக்கட்டத்தில் காமன் எரிக்கின்ற போது இரதி ஒப்பாரியிட "சாவுத்தப்பு" அடிக்கப்படுவதோடு வீதிவீதியாக சாவுத்தப்பு அடித்து செல்லும் வழக்கம் காணப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4.15. தப்பு தயாரித்தல்

தமிழரின் மரபுரிமை அறிவியல், தொழில்நுட்பத்தையும் பயன்படுத்தி தப்பு கட்டப்படுகின்றது. முதிர்ந்த ஆட்டின் தோலை முழுமையாக உரித்தெடுத்து காய்ந்த சமதரையில் விரித்து கூரிய குச்சிகள் அடிக்கப்பட்டு மயிர்கள் அகற்றப்படுகின்றன. இவ்வாறு மயிர் அகற்றிய பின்னர் வெயில் படக்கூடியதாக சுவரோடு சேர்த்து ஆணியடிக்கப்படுகின்றது. கோடைகாலமாயின் 20 - 30 நாட்களில் தப்பு கட்டக்கூடிய பதத்தை (உலர்ந்த நிலையை) ஆட்டுத்தோல் அடைந்துவிடும். பின்னர் சணலால் பிண்ணி வலையமாக கட்டப்படுகின்றது. தேர்ச்சிமிக்க கைவினைஞர்கள் தமக்கேயுரிய இலாவகத்துடன் தப்பினை உருவாக்குகின்றனர்.

தப்பிசை எழுப்பப்படும் பொழுது அதன் முழக்கம் பல மைல்களுக்கு அப்பால் மலைமுகடுகளிடையே எதிரொலிப்பதைக் காணலாம்.

காமன் பண்டிகை காலங்களில் பெறும் போர் முரசம் போல மலை முகடுகளிடையே எதிரொலியெழுப்பும் தப்பொலி பெரும் புத்துணர்ச்சியையும், உள்ளக்கிலேசத்தையும் உண்டாக்குவதாக அமைவதனைக் காணலாம்.

சில தோட்டங்களில் "அரிக்கன்சட்டி" ஏனப்படும் இசைக்கருவியும் "உருமி" எனும் இசைக்கருவியும் பயன்படுத்தப்படுகின்றது. தாளம், மேளம் பொதுவாக பயன்படுத்தப்படும் ஒரு இசைக்கருவியாகும். சங்கு, சேகண்டி என்பனவும் பயன்படுத்தப்படுகின்றன.

4.16. மொழிவளம்

காமன் கூத்துப்பாடல்களில் மிக நுண்ணிய மொழிவளம் காணப்படுகின்றது. கிராமிய மணமும், இலக்கண செறிவும், அடுக்கு மொழியும், உவமான உவமேயமும், எதுகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மோனையும், இரட்டைக்கிழவியும், அழகிய சொற்செட்டுக்களும், சரளமான மொழிநடையும், வியக்கத்தக்க சொற்புணர்ச்சிகளும் காணப்படுகின்றன.

மேலும் நாட்டுப் புறப்பாடல்களுக்கேயுரிய கேலியும், கிண்டலும், பாட்டும், பண்ணும இணைந்த மெல்லிசையும், துள்ளிசையும் கலந்த மொழிநடை காணப்படுவது காமன் பாடல்களில் காணப்படும் மொழி வளத்துக்கு சான்றுகளாகின்றன.

4.17. பிடி மண்ணெடுத்தல்

காமன் முதல் முதலாக நாட்டப்படுவதற்கு முன்னர் ஏற்கனவே காமன் நாட்டப்பட்டுள்ள இடத்திலிருந்து ஒரு பிடி மண்ணை யாருக்கும் தெரியாத நள்ளிரவு நேரத்தில் எடுத்து வந்து அந்த மண்ணை வைத்து புதிய இடத்தில் காமன் நாட்டப்பட வேண்டும் என்பது பாரம்பரிய நம்பிக்கையாகும்.

இவ்வாறு பிடி மண் எடுத்து வருதவற்கு முன்னர் சாமி பார்த்தல் மூலம் எங்கிருந்து மண்ணெடுக்க வேண்டும் யார் யார் அதற்கு இறையருள் பெற்றவர் என்பது தீர்மானிக்கப்படுகின்றது.

பிடிமண் எடுக்கும் நிகழ்ச்சி மிக மிக இரகசியமாக நடத்தப்படுகின்றது இவ்வாறு பிடி மண் எடுத்துவரும் போது எவரும் எதிர்படாத வகையில் மிக பய பக்தியோடு கொண்டுவரப்படும் மண் புதிய காமன் கூத்துக்கு கால் கோளிடுகின்றது சக்தியுள்ள ஓரிடத்தில் பிடி மண் எடுப்பதன் மூலம் புதிய கூத்து நடத்துமிடமும் சக்தி பெறுவதாகவும் ஊர் வளம் பெறுவதாகவும் நம்பப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4.18. கதையமைப்பு காமன் பாலித்தல்

மாசிமாதம் மூன்றாம் பிறையில் காமன் கம்பம் கட்டப்பட்டு ஆற்று முகமொன்றில் பாலிக்கப்பட்டு மன்மதன், இரதி, சிவன், வீரப்புத்திரன், தூதுவன், இயமன் முதலிய முக்கிய பாத்திரங்களோடு தப்பிசை முழங்க நீராடி பூசையிட்டு மன்மதனால் ஊர்வலமாக கொண்டுவரப்பட்டுகின்றது. ஊரார் திரண்டு வர ஊர்வலம் காமன் நாட்டப்படும் திடலில் ஊன்றப்படும். ஊன்றப்படும் முன்னர் பால் காணிக்கை என்பன இடப்படுகின்றன.

4.19. பந்தலிடல்

காமன் நாட்டப்பட்டு மூன்றாம், ஐந்தாம் தினங்களில் திண்ணையை சாணத்தால் மெழுகி திடலை சுத்தப்படுத்தி, சாணமிட்டு, பச்சை வாழைக் குலைகளால் சிறு பந்தலிட்டு பூசை செய்ததன் பின் முதலாவது நாள் கூத்தாட்ட நிகழ்வு ஆரம்பமாகின்றது.

4.20. காமன் எரிப்பு விழா

காமன் நாட்டப்பட்டதில் இருந்து ஒன்பதாம், பதினோராம், இருபத்தோராம் தினத்தில் காமன் எரிப்புத் தினத்தில் விரதமிருந்து திடலை வாழை மரங்கள், கொடிகள் என்பவற்றால் அலங்கரித்து, பந்தலிட்டு, மாவிடித்து, மாவிளக்குப் பிடித்து ஊர்வலமாக கொண்டுவரப்படும். மதன் இரதிக்கு திருமண விழா (புரோகிதரால்) பண்டாரம் நடத்தப்படும்.

4.21. தேவர் சபை

காமன் எரிப்பு தினத்தில் திடலின் ஒரு முனையில் பந்தலிட்டு தேவர் சபை அகைக்கப்படும். சிவனோடு பார்வதி உள்ளிட்ட தேவர்கள் அங்கு அமர்த்தப் படுவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4.22. மதன் இரதி தர்க்கம்

மதனுக்கும், இரதிக்கும் இடையிலான தர்க்கமே காமன் கூத்தின் பிரதான களமாடு கருத்தாயமைகின்றது. மதன் சிவனோடு போர்புரிய போகமுனைவதனையும் அதைத்தடுக்க இரதி முனைவதனையும் எடுத்துக்காட்டுவதாக அமையும். மதனரதி ஒப்பாரிப்பாடல்கள் பாடப்பாட அதற்கேற்ப தப்பிசையும் ஆட்டமும் இடம் பெறுகின்றது.

இறுதியாக மதன் சிவனது தவத்தை அழிக்க அரலிமலர் கணைகள் தொடுக்க அதனால் தவம் குலைந்து சீற்றமுறும் சிவன் மன்மதனை எரித்து விடுகின்றான். மன்மதனை இழந்த இரதி தந்தையான சிவனிடம் போய் தன் நிலை கூறி புலம்பலும் அப்புலம்பலால் மனமிறக்கமுற்ற சிவன் மதனை இரதிக்கு மட்டும் உருவமாகவும் மற்றோருக்கு அரூபமாகவும் தெரியும்படி உயிர்ப்பித்ததாக கதை நிகழ்த்தப்படுகின்றது.

4.23. மலையகத்தில் காமன் கூத்தின் நிகழ்வொழுங்கு

மலையகத்தில் நிகழ்த்தப்படும் காமன் கூத்தானது பல்வேறுப்பட்ட நிகழ் வொழுக்கங்களைக் கொண்டுள்ளது. தோட்டத்திற்கு தோட்டம் காமன் கூத்தை நடத்தும் வாத்தியாருக்கு வாத்தியார் இந்நிகழ்வொழுக்கங்களில் பல்வேறுபட்ட தனித்துவமான மாதிரிகளை பின்பற்றுகின்றனர்.

பொதுவாக காமன் பாலித்தல், கம்பத்தை ஊர்வலமாக கொண்டுவரல், காமன் திண்ணையில் சில்லறை காசும், பாலும் ஊறி கம்பத்தை நாட்டுதல், பூசையிடுதல், மூன்றாம், ஐந்தாம் நாளில் கூத்தாட்டத்தை தொடங்குதல், களத்திலும் தெருவிலும் குடியிருப்புகள், அயல் நகர, தோட்டங்களில் தெருக் கூத்தாக நிகழ்த்துதல், ஒன்பதாம், பதினோராம், இருபத்தியோராம் தினத்தில் காமன் எரிப்பு விழா நடத்துதல் என்ற ஒழுங்கு பின்பற்றப்படுகின்றது. காமன் எரிப்பு தினத்தன்று தேவர்சபையுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவிளக்கு ஊர்வலத்தோடு தப்பிசை முழங்க ஊரவர் திரண்டுவரல், இரதி மதனை அழைத்துவரல், சம்மந்தம் பேசுதல், தாளிகட்டுதல், மாவிளக்கு பூசையிடல், கூத்தாட்டம் தொடங்குதல், மதன் இரதி தர்க்கம் புரிதல், படத்தேர் கொண்டுவரல், இந்திரன் வரல், தூதன் ஓலை கொண்டுவரல், மாரியம்மன் வரல், காளி வரல், வீரபுத்திரன் வரல், தேர்வசந்தன்வரல், எரிதூதன் வரல், மதன் சிவன்மேல் மலர்கணை தொடுத்தல், சிவன் மதனை எரித்தல், நந்திதேவன் வரல், இயமன் பாசக்கயிரோடு வரல், இரதி ஒப்பாரி வைத்தல், ஊர் ஊராக ஒப்பாரி பாடிச் செல்லல், மதனை எரித்த சாம்பலை ஆற்றோடு கலத்தல், படத்தேரை கலைத்தல்.

மதன் எரியூட்டப்பட்ட மூன்றாம் நாளில் இரதி சிவனிடம் மன்றாடி மதனை உயிர் எழுப்புமாறு கெஞ்சி மடிப்பிச்சை கேட்டல், சிவன் மனமிறங்கி மதனை உயிர்ப்பித்தல் பின் பூசையிடல், காமன் திண்ணையில் சில்லறை காசும், பாலுமிட்டு கல் நாட்டுதல் என்பன நிகழ்வொழுங்காகக் கொள்ளப்படுகின்றது.

இந்நிகல்வொழுங்கு எல்லா இடத்திலும் ஒரே மாதிரியாக அமைவதில்லை என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். மேலும் நிகழ்வொழுங்கில் ஒரு சம்பிரதாயப்பூர்வமான தர்க்க ரீதியான ஒழுங்கும் பின்பற்றப்பட்டு வருவதைக் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5.0. மலைய கூத்தின் தனித்துவமும் மண்வாசனையும்

மலையக தோட்டங்களில் நிகழ்த்தப்படும் காமன் கூத்துகளின் சிறப்பம்சமாக காணப்படுவது அது மலையக தமிழ் பாட்டாளி வர்க்கத்தின் வாழ்வியலையம், கனவுகளையும், கற்பனைகளையும், துயரங்களையும் பேசுகிற களமாக காணப்படுவதோடு மீண்டும் எழுகின்ற எத்தனத்தையும், உணர்திறனையும், போர்த்திறனையும் வெளிப்படுத்துவதாக காணப்படுகின்றது.

மேலும் சரஸ்வதி வழிபாடு, மாரியம்மன் ஆசிகூறல், காளியம்மன் வருகை என்பன மலையக தமிழ் கூத்துகளில் காணப்படும் இன, வர்க்க, பண்பாட்டு அடையாளங்களை வெளிப்படுத்துகின்ற அதே வேளை மலையக மக்களின் வாழ்வியலில் முக்கிய இடம்பெறும் மாரியம்மன், காளியம்மன் வழிபாட்டோடு இணைந்ததாக மலையத்தில் காமன் கூத்து காணப்படுகின்றது.

மலையகத்தில் சிறப்பாக கோமாளி பாத்திரம் மக்களை மகிழ்விப்பதாக காணப்படுகின்றது. மதன் இரதி இருவரும் மோதிக் கொள்வதை தடுக்கும் இப்பாத்திரம் கூத்தாடும் களத்தை சூழ நிகழும் நிகழ்வுகளை கண்கானிக்கவும், முகமூடியணிந்து விகாரமாக தோன்றும் கோமாளி மலையக கூத்தில் காணப்படும் மக்களை பரவசப்படுத்தும் இன்னொரு படைப்பாக காணப்படுகின்றது. மலையகத்தில் காமன் கூத்து நிகழ்த்துவதற்கான பாடல்களில் பெரும்பாலானவை மலையக பாரம்பரிய கூத்து வாத்தியார்களால் இயற்றப்பட்டதாக காணப்படுவதோடு அவற்றில் மலையக தமிழக மரபுகளும் இணைந்து காணப்படுகின்றன.

எப்படி பண்டைத் தமிழரின் பண்பாட்டியல் வரலாற்றில் பல்வேறு கட்டங்களிலும் நிலைமாற்றங்களை உள்வாங்கி அக்கால கட்டத்தின் அரசியல், பொருண்மிய பரிமாற்றங்களை இக்கூத்து ஏற்றுக் கொண்டதோ அதன் தொடர்ச்சியாக பாத்திரங்களையும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதையோட்டத்தையும், பண்டைத் தமிழ் மரபுகளை உள்வாங்கிக் கொண்டு : பெருந்தோட்ட உற்பத்தி உறவுகளையும், அவ்வுற்பத்தி உறவுகளோடு தொடர்புடைய இனவர்க்க சமூகத்தின் வாழ்வியலையும் வரலாற்றியலையும் பண்பாட்டியலையும் பதிவு செய்யும் தனித்துவமான பண்பாட்டுப் பதிவாக காணப்படுகின்றது.

மனித வாழ்வின் உன்னதமான பதிவுகளை, சிந்தனைகளை, இன்பியலை போற்றியும் தமிழர் தெய்வங்களின் வெற்றியை கொண்டாடுவதாகவும் காமன் கூத்து காணப்படுகின்றது.

மலையகத்தில் நிகழ்த்தப்படும் காமன் கூத்துகளில் இன்னுமொரு சிறப்பம்சமாக காணப்படுவது அதன் பண்பாட்டியல் பன்முகப்பாடாகும். மகாபாரதம், சிலப்பதிகாரம், மணிமேகலை, கந்தபுராணம் ஆகிய தமிழ் பெரும், சிறு காப்பியங்களில் காணப்படும் மதன் இரதி பாத்திர வார்ப்பு செல்வாக்கு மலையக காமன் கூத்தில் விரவிக் கிடக்கிறது.

'கங்காணி மகளேயடி லேலேலங்கடி லேலோ ~ நீ
காரப்போட்ட சின்னத்தங்கம் லேலேலங்கடி லேலோ
ஆளுக்குள்ள நிக்கிறியே லேலேலங்கடி லேலோ
நான் யாரை விட்டுக் கூப்பிடுவேன் லேலேலங்கடி லேலோ'

என்றும்,
'வெங்கல ரோதையில லேலேலங்கடி லேலோ ~ நீ
வேல செய்யும் மன்னவரே லேலேலங்கடி லேலோ
வெத்தல வேணுமினா லேலேலங்கடி லேலோ ~ நீங்க
வெளிய வந்து பேசிக்கிங்க லேலேலங்கடி லேலோ'

என வரும் பாடலும் காமன் கூத்து மலையக தமிழர் பண்பாட்டின் அடியாக மாறியதற்கு சான்றாக காணப்படுகின்றன. மலையக தமிழரின் வாழ்வியலுக்கே உரிய காதல், வீரம், போர்க்குணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பனவற்றை இக்கூத்து வெளிப் படுத்துகின்றது.
தமிழர் பண்பாட்டை ஏனைய சமூக குழுக்களின் பண்பாடுகளிலிலிருந்து வேறுபடுத்திக் காட்டும் தனித்துவமிக்க சடங்குகளையும், நம்பிக்கைகளையும் , மரபுகளையும், தொன்மங்களையும் மலைய தமிழரது வாழ்வியலோடு இரண்டர கலக்கின்ற பாரம்பரிய கூத்தாக காமன் கூத்து காணப்படுகின்றது.

5.1. மலையகத்தில் நிகழ்த்தப்படும் காமன் கூத்து - வீசேட பண்புகள்

- மலையக தமிழரின் வாழ்வியல் பண்பாட்டியல் கூறுகளை உள்வாங்கிக் கொண்டுள்ளமை
- பண்டைத்தமிழர் வாழ்வியலின் முன்னேரிய கூறுகளை உள்ளடக்கி யுள்ளமை.
- தமிழர் நாட்டுப்புறவியலோடு மலையக தமிழரின் நாட்டுப்புறவியல் செல்வாக்கை கொண்டுள்ளமை.
- மலையக தமிழரின் இனவர்க்க உற்பத்தி உறவுகளோடு இரண்டர கலந்துள்ளமை
- இலங்கையில் மலையக பெருந்தோட்டங்களில் மட்டுமே காமன் கூத்து நிகழ்த்தப்படுகின்றமை.
- மலையக உழைக்கும் வர்க்கத்தின் தனித்துவமான கலைக்கூத்தாக காணப்படுகின்றமை.
- பல்வேறு நெருக்கடி மிக்க காலங்களையும் கடந்து எட்டு, ஒன்பது தலைமுறையாக காமன் கூத்தும் சமூகமும் நிலைப் பெற்றிருக்கின்றமை.
- காலணிய பின்காலணிய சூழ்நிலைகளிலும் செழுமையும் முழுமையும் குன்றாது மலையக மக்களை ஒன்றிணைத்து வைத்திருக்கின்றமை.
- மலைய தேசிய கூத்தாக வளர்ச்சி பெற்றுள்ளமை.
- மலையக தமிழர் பண்பாட்டியலின் மணி மகுடமாக வளர்ச்சியுற்று காணப்படுகின்றமை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பன இக்கூத்து மலையக தமிழரின் பண்பாட்டு கருவியாக காணப்படுகின்றது என்பதற்கு சான்று பகிர்கின்றது.

5.2. மாத்து கட்டுதல்/மாற்று கட்டுதல்

காமன் கூத்தில் மாத்துகட்டுதல் (மாற்று கட்டுதல்) என்பது அவ்வப்போது தேவை கருதி இடம்பெறுகின்றது. காமன் காப்புக்கட்டிக் கொண்ட மன்மதனும், இரதி வேடமிடுவோரும் மிதமிஞ்சிய களைப்படைதல், கட்டுக்கடங்காத மருள் கொண்டாடுதல், நோய்வாய்ப்படல் போன்ற காரணங்களால் காப்புகட்டாத எவரேனும் ஒருவர் வேடமிடுதலை மாத்துக்கட்டு என்பர்.

காமன் எரிப்பு தினத்தில் நீண்ட நேரம் ஆடி கலைக்கும் காப்புக்கட்டிய வேடதாரிகள் ஓய்வெடுக்கும் போது ஆடுகளத்தை வெற்றிடமாக விடாதிருப்பதற்காக மாத்து வேசம் கட்டியாடுதல் இடம்பெறுகின்றது. காமன் நாட்டப்பட்ட நாளுக்கும் எரிப்புத் தினத்திற்கும் இடைப்பட்ட நாட்களில் தெருக்கூத்தாக ஆடப்படும் போது மாத்து கட்டுதல் இடம்பெறுகின்றது.

மாத்துக்கட்டுவதன் மூலம் புதியவர்களுக்கு ஆட்டமுறைகளை பழக்கவும் பல இளைஞர்களுக்கு வாய்ப்பளிக்கவும் முடிவதோடு இரதி மதன் வேடமிடுவோரை எப்போதும் மிடுக்குடனும் துடிப்புடனும் வைத்துக்கொள்ள உதவுகின்றது.

மாத்துக் கட்டுவோர் அனுபவமும் பயிற்சி மிக்கவராய் இருக்கும் போது புதியவர்கள் அவர்களை பார்த்து ஆட்ட முறைகளையும் பாடல், தாளம், தப்பிசைசையையும் தெரிந்துக் கொள்ள உதவுகின்றது. காமன் கூத்து நிலைத்து நீடித்திருப்பதற்கு மாத்துக் கட்டுதல் இன்றியமையாததாக இருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5.3. ஒப்பனைக் கலை

பாரம்பரிய கூத்துக்களையின் செழுமையையும் கவர்ச்சியையும் நிர்ணயிப்பதில் ஒப்பனை முக்கிய இடம் வைக்கின்றது.

காமன் கூத்தில் ஒப்பனையானது ஒருவரது உண்மை உருவத்தை மாற்ற வேண்டிய தோற்றத்தை வழங்க உதவுகின்றது.

5.4. ஒப்பனைப் பொருட்கள்

ஒப்பனைக்குப் பயன்படுத்தப்படும் பிரதானமான பொருட்களாக "அரியதரம்", சுத்தமான தேங்காய் எண்ணை, தண்ணீர், முகப்பூச்சுக்கள் என்பன பயன்படுத்தப் படுகின்றன.

அரியதரத்தை பதமாக கரைப்பதற்கு அதனை மெல்லிய துணி, பஞ்சு அல்லது மிருதுவான பொருட்கள் தொட்டு பூசப்படுகின்றன. தேவைப்படும் கடுமைக்கேற்ப ஒருகோடு, இருகோடு என மீண்டும் மீண்டும் பூசப்படுகின்றது.

அரியதரம் பூசினால் அருள் வரும் என்ற நம்பிக்கையும் உண்டு. ஒப்பனை செய்வதற்கென்று அனுபவமும், பயிற்சியும் மிக்கவர்கள் இருக்கின்றனர். இவர்கள் இருவிதமாக ஒப்பனை செய்கின்றனர். ஒரு வேசத்திற்கு முழுமையான ஒப்பனை செய்ய 30 நிமிடம் தொடக்கம் 2 மணித்தியாலங்கள் வரை செல்கின்றது.

மன்மதனுக்கு கடும் பச்சை முகப்பூச்சியும் இலகு பச்சை உடையும் இரதிக்கு பளப்பளப்பான வெண்ணிறமான அரியதரமும் பூசப்படுகின்றது. நவீன அலங்கார நிலையங்கள் செய்யும் அழகு கலையே பாரம்பரிய கூத்தில் ஒப்பனையாக இடம்பெறுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5.5. உயிர்த்தெழுதலின் உட்பொருள்

மலையகத் தமிழரிடையே நிகழ்த்தப்படும் எல்லா கூத்துக்களிலும் ஒரு பகுதியாக உயிர்த்தெழுதல் காணப்படுகின்றது. கொன்றவனே வரமளித்து உயிர்ப்பிக்கும் நிகழ்வுகள் இதன் சிறப்பம்சம் என்றால் மிகை இல்லை.

குற்றத்தின் தன்மை, தண்டனையின் தன்மை, தண்டனை அளிப்பவரின் அதிகார நிலை, தண்டனை பெற்றவரின் அதிகார நிலை உயிர்ப்பிச்சை கேட்பவரின் நிலை என்பவற்றிற்கு ஏற்ப உயிர்ப்பித்தலின் உட்பொருள் வேறுபடுகின்றது.

எமது பண்பாட்டில் கொலை புரிவது அதிகாரத்தினதும் அறத்தினதும் குறியீடாக காணப்படுகின்றது.

காமன் கூத்தில் மன்மதனை கொன்ற சிவனுக்கு அதற்கான நியாயங்கள் இருந்தன. மதன் சிவனின் தவத்தை மலர்க்கணைகளால் அழித்தான். சிவன் தன் அதிகாரத்தை பயன்படுத்தி மன்மதனை எரித்தான். எனினும் மகளான இரதி மன்றாடி மடிப்பிச்சை கேட்டப் போது மனமிறங்கிய சிவன் மன்மதனை மீண்டும் உயிர்ப்பிக்கின்றான். இது மனித தர்மமன்று எனவே இரதிக்கு மட்டுமே உருவம் தெரிபவனாக மன்மதன் உயிர்பெறுகின்றான். இந் நிகழ்வை நிகழ்த்துவதன் மூலம் உழைக்கும் வர்க்கம் தன் கட்டுக்கடங்காத போராற்றலையும் வீழ்ந்தாலும் மீண்டெழும் உறுதியையும் வெளிப்படுத்தும் உளவியலையே வெளிப்படுத்துகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5.6. பெண் வேடங்களை பெண்களுக்கு விட்டுக்கொடுத்தல் சில அபாயங்களும் உபாயங்களும்.

காமன் கூத்தின் வேசங்களில் பெண்னான இரதிக்குரிய பாத்திரத்தை ஆண் ஏற்று நடிக்கும் பாரம்பரியம் நிலவி வருகின்றது. பெண்மையை போற்றி மதித்து வழிபடும் ஒரு மக்கள் பண்பாட்டில் சிறப்புமிக்கதொரு கூத்தில் பெண்ணுக்குரிய வேசத்தை பெண்களே ஏற்று நடிப்பதில் என்ன குறையிருக்க முடியும்? என்ற வினா எழுகின்றது.

பெண் வேசங்களை ஆண்கள் போடுவதை பாரம்பரியம் என்பதால் அதனை மாற்றக்கூடாது எனவும் பெண்பாத்திரம் ஏற்கும் ஆண்கள் வெளிப்படுத்தும் உடல்சார் நடிப்பாங்கு மொழியை (Active Body Language) பெண்கள் வெளிப்படுத்த முடியாது. எனவே பெண் வேடங்களை ஆண்களே ஏற்க வேண்டும் என்ற வாதம் முன்வைக்கப்படுகின்றது.

எமது பாரம்பரியம் பெண்மையை சிறுமைப்படுத்துகின்றது என வாதிடும் பெண்ணியலாளர்கள் பெண்ணுக்குரிய பாத்திரங்களை ஆண் ஏற்பதென்பதை பெண்மையை மறைத்து விடும் பெருங்கதையாடல்களின் எச்சமாக காண்கின்றார்கள்.

எமது பாரம்பரியம் ஆண்வேடமிடும் பெண்களுக்கு இடமளிப்பதில்லை. மாறாக ஆண்தான் பெண் வேடமிடவேண்டும் என வலியுறுத்துகின்றது.

இந்த முரண்பாடுகளுடே ஆங்காங்கே பெண்பாத்திரங்களை பெண்கள் ஏற்கும் நிலையும் வளரத்தொடங்கியுள்ளது. மேலும், எமது பண்பாட்டின் வளர்ச்சி, உயர்ச்சி, தகுதி என்பவற்றை மேம்படுத்திக் கொள்வதற்காக இயங்கியல் ரீதியான மாற்றங்களை நாமும் உள்வாங்குதல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தவகையில் புதிய பண்பாட்டு அமைப்பு பெண் வேடங்கள் அனைத்தும் பெண்களுக்கே வழங்குவதனூடாக பெண்ணிலை சமத்துவத்தை நிலைநாட்டும் முயற்சியில் பல வெற்றிகரமான பரிசோதனைகளை மேற்கொண்டு வருகின்றது. இம்முயற்சியில் இளம் பெண்கள் கூத்து வாத்தியார்களாகவும், நடனக்கலைஞர்களாகவும், இசைக்கலைஞர்களாகவும் வெளிப்படத் தொடங்கியுள்ளனர். இதனால் கூத்தின் அடிப்படையோ, நளினமோ, அழகோ எத்தகைய பாதிப்பும் அடையவில்லை என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. எனினும், ஒரு கலை வடிவம் என்ற வகையில் காமன் கூத்தினை தொடர்ந்து வளர்த்துச் செல்வதில் பெண்கள் நேரடியாக பங்கேற்க முடியாத நிலை தொடர்ந்தும் காணப்படுகின்றது.

எனினும் பண்பாட்டு எதிரிகள் எமது பலவீனங்களையே ஊடுருவும் உபாயமாக கொள்வதை தடுப்பதற்கான உபாயமாக பெண்ணிலை சமத்துவத்தை நிலைநாட்ட எமது கூத்துக்களை பயன்படுத்துவதே சாலப் பொருத்தமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6.0. அரசியல் அதிகாரமற்ற மக்களின் போராயுதமாக பண்பாடு

உலகெங்கனும் மாறிவந்த, வருகின்ற சமூக அமைப்புகளது கால கட்டங்களில் அரசியல், பொருண்மிய அதிகாரம் என்பது ஆளும் குழுமங்கள், அதிகார வர்க்கங்கள், மேல்தட்டுமக்கள், பலசாலிகள், ஆக்கிரமிப்பாளர்கள், அடக்குமுறையாளர்களின் ஏகபோகமாகிவிட்ட பண்பாட்டுச் சூழலில் ஒதுக்கப்பட்ட ஒடுக்கப்பட்ட உரிமையிழந்த மக்களிடம் காணப்படும் ஒரே வலிமையான அடையாளமாக பண்பாடு காணப்படுகின்றது. மக்களினங்களின் பன்முகப் பண்பாட்டினூடே தமது அடையாளங்களை, இருத்தலை, வாழ்வியலின் வலிமையை நிலைநாட்டி வருவதோடு ஒடுக்குமுறைக்கு எதிரான போராயுதமாகவும் தம் பண்பாட்டை பயன்படுத்துகின்றனர். ஒடுக்கப்பட்ட மக்கள் மீது முதலாளியம், ஏகாதிபத்தியம், காலணித்துவத்தையும் பின் காலணிதுவத்தையும் உலகிற்கு தினம் தந்த போதும் அந்த வலிமைமிக்க வல்லரசுகளின் முன்னே ஆசிய, ஆபிரிக்க, இலத்தீன், அமெரிக்க பண்பாட்டுப் போர் அச்சமூகங்களின் நிலைத்திருத்தலுக்கும் வெற்றி கொள்வதற்கும் வழிகாட்டியாக திகழ்கின்றது. தகவல் மையப் புரட்சியின் விளைவாக மக்களின் பண்பாட்டு தனித்துவ அடையாளங்கள் யாவும் மருவி அழிந்துவிடவும், அழிக்கப்படவுமான ஒரு வீரியமிக்க விசச்சூழலை எப்படி எதிர்கொண்டு எமது பண்பாட்டு கரு மூலங்களை எமது வாழ்வியலை வெற்றிகொள்வதற்கான உடனடி வாய்ப்பாக காணப்படுகின்றது.

பண்பாட்டியல் மீதான ஆக்கிரமிப்பும் அழித்தொழிப்பும் கருச்சிதைப்பும் எம்மை ஆக்கிரமிப்பதற்கான திறவுகோளாகி நிற்கின்ற சூழலில் எமது பண்பாட்டுக் கருவூலங்களை போராடி பேண வேண்டிய தேவை எமக்கு இருக்கின்றது.

எமது மக்களின் பாரம்பரிய அறிவுச் செல்வங்கள், வழக்காறுகள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழி, மருத்துவம், ஆய்வறிவியல், நுண்கலைகள், ஆற்றுகைகள், கலைகள், கைவினைகள், கூத்து மரபுகளினூடே மிளிரும் மேன்மைமிக்கதும் முன்னேறியதுமான பண்பாட்டு மூலங்களை கண்டறிந்து கைக்கொள்ளவதன் மூலமே நாசகார உலகமயமாக்கல் திட்டங்களை எதிர்கொள்ளும் வலிமையையும் வாய்ப்பையும் வாழ்வியலையும் எம்மக்களுக்கு பெற்றுக்கொடுக்க முடியும்.

மலையக பாட்டாளி வர்க்கமானது பண்முகப்பாங்கான சமுதாய அமைப்புக்களை எதிர்கொண்டு கடந்து வந்த மிக முன்னேரிய வர்க்கமாகும். எல்லா காலத்தையும், எல்லாக்கட்டத்தையும் கடந்து வலிமை குன்றாத இளமையுடனும், அழகுடனும், ஆற்றலுடனும் தலை நிமிர்ந்து நிற்பது இம்மக்களின் மரபுகள், நம்பிக்கைகள், சடங்குகள், சம்பிரதாயங்கள் தான் இவையனைத்தையும் ஒன்றுதிரட்டி ஒத்த தடத்தில் இட்டது போல "காமன் கூத்து" காணப்படுகின்றது. காமன் கூத்தின் வீச்சினையும், வீரியத்தையும் புரிந்துக் கொண்டோமானால் அதனை பாதுகாத்து பலப்படுத்தி செயற்படுத்தினோமேயானால் பண்பாட்டு வகைப்பட்ட அனைத்து ஆக்கிரமிப்பு களையும ஊடுறுவல்களையும் எம்மக்கள் இழகுவாக வெற்றிக்கொள்வார்கள்.

சாமன்யனின் பண்பாட்டு போர் ஆயுதமாக காணப்படுகின்றது காமன் கூத்து எம்மக்கள் அதனோடு சேர்ந்து களமாடுவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7.0. பாரம்பரிய கூத்துக்களின் நிகழ்வெளியை பெயர்த்தல் பண்பாட்டுக் கருவறுப்பின் தொடக்கம்

எமது மக்கள் பாரம்பரியமாகவும் தலைமுறை தலைமுறையாகவும் நிகழ்த்திவரும் சடங்குகளினதும் சம்பிரதாயங்களினதும் ஆழமான அரசியல் பொருண்மிய உள்ளடக்கத்தை தன்னகத்தே கொண்டுள்ளவை எமது பாரம்பரிய கூத்துக்களாகும்.

இக்கூத்துக்களின் நிகழ்களம்/வெளி என்பது எமது மக்களோடும் மண்ணோடும் இரண்டறக் கலந்தவை. உண்டு கொழுத்து சப்பாணி கொட்டிக் கொண்டு கனவான்கள் கண்டுகளிப்பதற்காக தோன்றியவை அல்ல எமது கூத்துக்கள். வேட்டையாடியும், மந்தை மேய்த்தும், பயிர் செய்தும் வாழ்ந்தவனுக்கும் வயல்வெளிகளில் வரப்புக்கட்டி விளக்கேற்றி விடிய விடிய நடமாடித்திரிந்து காவல் காத்தவனின் உழைத்து கலைத்து ஓய்வெடுக்க கிடைத்த காலத்தையும் கலைநுட்பத்தோடு களித்தாடிய உழைக்கும் மக்களின் உணர்வுகளில், உதிரத்தில் முகில்ந்திருப்பவை கூத்துக்கள். அவை வரலாறு சொல்பவை, வீரியமுள்ளவை, வீச்சுடையவை.

காமன் கூத்தும் அதன் பாரம்பரியத்தில், பண்பாட்டியல் வரலாற்றில் அத்தகைய சிறப்பு மிக்கதேயாகும். பண்பாட்டை காக்கவும் உயர்தவும், அதர்மத்தை அழிக்கவும் மக்களின் மாட்சியை மீட்கவும் முகில்விட்ட காமன் கூத்து காதலும், வீரத்தினதும் மானிட இலட்சியங்களினதும், வேட்கைகளினதும் முயற்சிகளினதும் விளைநலமாய் திகழ்கின்றது. அது வீரத்தின், விடுதலையின், விவேகத்தின் உரைவிடமாய் உயிர்த்திருக்கின்றது.

காமன் கூத்தின் நிகழ்வெளியில் அது ஆழ்கடலில் ஊடுருவும் மின்னல் போல, பாய்ந்தோடும் நதியிடை மீன் போல வலவுடனிருக்கின்றது; வாழ்ந்து வருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது உழைக்கும் ஆடவரும், பெண்டிரும், அவர்தம் புத்திரரும் புதழ்வியரும் புலங்காகிதமுற்று கூத்தோடு கூடிப்புணர்ந்து காமன் விழாவை நிகழ்த்தும் வெளி எமது மக்களின் தனித்தன்மை வாய்ந்ததாகும்.

இந்த நிகழ்வெளிக்கு வெளியே பரிசோதனைக்கென்றும் கனவான்களின் கண்களுக்கு களிப்பூட்டவென்றும் கல்லூரி மேடைக்கென்றும் போட்டிகளுக்கு என்றும் பெயர்ந்து செல்வது என்பது இக்கூத்தின் வலிமையை, தனித்தன்மையை, ஆக்கப்பண்பாடு ஊடாட முடியாத இக்கூத்தை தளர்ந்து விடுவதாகவே அமைகின்றது.

நிகழ்வெளியில் மக்களின் கூட்டுமொத்த பங்கேற்போடு வெகுசன கூத்தரங்காக அதற்குறிய மதிப்பும், மரியாதையும் வழங்கப்பட்ட நிலையில் உணர்வுப்பூர்வமாக நிகழ்த்தப்படுவதனை உறுதி செய்தல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8.0. திறந்தவெளி சமூக பாடசாலையாக காமன்கூத்து

மலையக தோட்டப்புறங்களில் அனைத்து பாலின வர்க்கக் கூறுகளையும் ஒருங்கிணைக்கும் ஒரு சமூக பாடசாலையாக காமன் கூத்து காணப்படுகின்றது. ஆண்கள், பெண்கள், சிறுவர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் என்ற அனைத்து சமூக இயங்கு சக்திகளுக்கும் கலைப் பண்பாட்டு பாரம்பரியங்களையும் வாழ்வியல் கோலங்களையும் விழுமியங்களையும் கற்றுத்தரும் ஒரு முறைசாரா திறந்தவெளி பாடசாலை இதுவாகும்.

ஆடல், பாடல், அழகியல், அவையியல், ஆற்றுகை, நுட்பங்கள், மொழியாட்சி, சொல்லாட்சி, கூட்டு வாழ்வு, சமூக சமத்துவம், பொதுமைப் பண்புகள், மரபுரிமைத் தொழில்நுட்பம், ஆடை ஆபரண வடிவமைப்பு, அறிவியல் நம்பிக்கைகள் மரபுக் கூறுகள் மீதான மதிப்பையும் மரியாதையையும் மேம்படுத்தல், உளவியல் சிக்கல்களை தீர்தல், உளவியக்க, உடலியக்க செயற்பாடுகளை மேம்படுத்தல், தன்மதிப்பையும், தன்னம்பிக்கையையும் ஏற்படுத்தல், தன்மயவாக்கலை ஊக்குவித்தல், பாலின சமத்துவத்தைப் பேணல், சிக்கன வாழ்வு, பண்முக ஆளுமை விருத்தி, மொழியியலின் வளமான ஓசை ஒலி நயங்களை எதிர்காலத் தலைமுறைக்கு கற்றுத்தருவதற்கான தடைகளற்ற சுதந்திரமான சமூகப் பாடசாலையாக காமன் கூத்து திகழ்கிறது.

இங்கு கற்றல் இடமாற்றமானது இலகுவாகவும் வலிமையாகவும் நம்பகத் தன்மையுடனும் சுய விருப்புடனும் இடம்பெறுவதை ஆழ்ந்து நோக்கின் அவதானிக்க முடியும். மேலும் சமுதாய ஒழுக்க விழுமியங்களை கற்றுத் தருவதில் காமன் கூத்து வெற்றிகரமான பாடசாலையாக திகழ்வதைக் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னிணைப்பு 1

காமன் கூத்து பாடல்கள்

காமன்கூத்து நாட்டும் முறை

அண்ட சரங்கள் எல்லாம் பீண்டலமெல்லாம் துலங்க
ஆவணி புவனமதில் மாரிவரும் மாசிதனில்
அந்த சந்தர் உரகமெல்லாம் பாரிவரும் மாசிதனில்
அம்மாவாசை பிறையும் நவமுள்ள முன்றாம் நாள்
ஆருள் நிறைந்த வேல் மதனே நிறைவாக கொண்டாட
அழகு மதன் தகன லீலா வடிவு மகன் திருளாம்
அங்குச்ச செகனம் எல்லாம் எங்கும் எங்கும் அலங்கரித்தது

அன்புற கொட்டை தண்டும் இன்புர வேக்கரும்பும்
அந்த ஊர் செங்கரும்பும் இலந்த ஒரு முங்கி துளி
அடல் போல் வைக்கோலும் கொண்ட தெடல் பிரிய சுற்றி
அத்தனையும் ஒன்று கூட்டி கரும்பாய் சேர்த்து கட்டி
அருவி கரை தேடிப்பார்த்து கருவிகளை கொண்டு ெ சன்று
அரும்பிய கங்கையிலே வைத்து திரும்பி எடுத்து வைத்து
அருவி மலர் பூக்களை மலர்களாய் தான் சுட்டி
அலங்காரம் மாகத்தான் துலங்கவே கம்பமாக
அழவே குழி பரித்து மிக தனியாக மேடை இட்டு
அருந்தவே பால் ஊட்டி திகந்த காணிகையிடம்
அகில தாளம் முழங்க மணயோசை மணி துலங்க

அரிஹரி சிவா என்று மன்மதனை நாம் என்று
அழகு திரு கம்பத்தை புகழ்லாக நாங்கள் நாட்டி
அகமகிழ படமிட்டோம் பண்புடன் அபீசேகமுடன்
ஆதரிக்க வேண்டுமையா ஆயன் மதன் மன்மதரே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. காமன் நாட்டுதல்

விநாயகர் துதியுடனான நவரத்தின ஒப்பாரி

முந்தி முந்தி விநாயகனே முக்கண்ணார் தம் மகனே
கந்தனுக்கு முன்பிறந்த கணபதியைக் கைத்தொழுவோம்
வேலனுக்கு முன் பிறந்த விநாயகனைக் கைத்தொழுவோம்
பக்த கஜமுகனாம் விந்தையருள் வேதகானாம்
பிண்டலகிமெல்லாம் துதிக்க அன்பர்கள் உபசரிக்க
வருடா வருடம் வரும் மாசி மாசம் தனிலே
அம்மாவாசைக் கழித்து அடுத்து வரும் மூன்றாம் நாள்
மன்மதனை உண்டுபண்ண மனமகிழ்ந்து ஒன்றுகூடி

மாங்காய் இலை கொத்துக்களும் முங்கியருளித் தோகைகளும்
வட்டரக பேய் கரும்பும் கொட்டைத் தண்டு செங்கரும்பும்
போய்கடலைத் தோகையிட்டு பூக்கடலை செப்பனிட்டு
ஓடிவரும் தண்ணியிலே ஒரு செம்பு நீர் எடுத்து
மண்ணிலே குழி தோண்டி நன்னியமாய் பலூற்றி
மங்களமாய் காம் நட்டோம் மாநிலத்தார் எல்லோரும்
இதில் குற்றம் குறை இருந்தாலும் எல்லாம் மனம் பொறுத்து
கூத்தருள வேண்டுமையா ஐயன் மகனாரே

2. மதன் ரதி திருமணம்

அரி ஓம் ராமாவென்று அந்தணர்கள் நான் துதிக்க
அரிஹரியான தொரு கரிமுக விஷ்ணுவுக்கு
அங்கஜர்க்கு மங்களமும் சிங்காரமாய் முடிக்க
ஆதியானந்த தொரு பாதி மதியணிந்த
ஆதி சிவனிடத்தில் நீதியுடன் பெண் கேட்க
ஆத்தா அலமேலும் பார்திபன் மைத்துனரும்
ஆயிரம் பொன் பரிசம் நேயமுடனே எடுத்து
அழியாத மஞ்சலும் சரியா இருபத்தியொன்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரங்கி வெற்றிலையும் மோரங்கி பாக்குகளும்
அழகான கூரை சீலை புகழாகவே எடுத்து
அடைத்தல்லோ பேழையிலே இவர்கள் திடத்துடனே

ஆதி சிவனுமையும் நீதியுடனிருக்க
அன்னவர்களை கண்டு தன்னந்தனியாக வேதான்
ஆகையாள் கேள்மைதனரே மேவியப் பொண் தருமென
அங்கனமே யாக மென்று சிவன் சிங்காரம மாயுரைக்க
அப்பவே நாளதனை ஒப்பவுடன் நிச்சயித்து
அன்றல்லோ மாசி மாதன் நன்றாம் வளர்ப்பிறையில்
சரியான பந்தலதனை தரணிதனிலே போட்டு
சரஞ்சரமாக கால்களை நாட்டி தங்கமயமாகவே பந்தலை போட்டு

விந்தையாகவே குலோப்புகளை மாட்டி
ஏந்திழையான் ரதியை சாந்தமுடனேயழைத்து
இருபுறமும் முகூரு பல பல எனவே
கரிகை சிமிக்கி தக தக எனவே
சந்திர ஓலை பளீர் பளீர் எனவே
காந்த மூக்குத்தி மிஞ்மிஞ் எனவே
தையல் ரதி கூந்தல்தனை மைபோலவே சீவி
சந்திர பறை சூரிய பிறை மாந்தரை கொன்றைப்பூ

சாந்து சவ்வாது சந்தனம் புனுகு
அத்தீர்ப் பன்னீர் வெற்றி வேர் மாக் கொழுந்து
அந்த முள்ள ரோசாவும் விந்தையுள்ள புஸ்பங்களும்
அழகான ஆரங்ட்டி புகழ் ரதி கூழத்திலிட்டு
அணி அணியாக மாட்டி பணிகளெல்லாம் பூட்டினார்கள்

ஆணிப் பொன் பந்தலின் கீழ் மாணிக்காப்பாய் விரித்து
அங்கனமே கொண்டு வந்து வங்கனமாயர்த்த
அரிராமர் ஈன்றெடுத்த பரிபால அங்கஜர்க்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(சுரு)
அற்புதமான கட்சையணிந்து
பச்சை நிற மே(ல)ங்கி அயிந்து
விசித்திர நவமுத்து பதித்து
மேக வர்ண இடை தாவட மணிந்து
வைர கிரீட புஜம் கீத்தியணிந்து
வச்சி முடியும் மாலையுமணிந்து
கச்சிதமாக கங்கண மணிநது
மங்கள வாத்தியத்துடன் மங்கை படை சூழ்ந்து வர
மணவாள கோலமுடன் கண தேவரழைத்து வந்து

அண்டர் முனிவரெல்லாம் நன்றாய் மண மகிழ்ந்து
ஆலாத்தி பெண்களுமே சூலவே சூழ்ந்துவர
ஆயிரம் திருவிளக்கு நேயமுடன் ஜொலிக்க
ஆம்மி வலமாக அரசாணை முன்பாக
மும் மூர்த்தி தேவர்களும் முணிவர்களும் வந்துநிற்க
வேத மந்திரம் ஓதி ஆதவர்களும்
அழகு திரு தாளிதனை புகழாகவே கொடுத்தார்
அக்கினியை சாட்சி வைத்துதிக்கென்று தன் குருவே
அரோகரா வென்று சொல்லிஅணிந்தார் ரதி கழுத்தில்

அதிபரவே சேலை கட்டி ரதி மதனும் தானெழுந்து
அன்னத்தில் மீது ரதி கன்னியரை ஏந்திவைத்து
அச்சுதனார் மகனே பச்சை கிளி மீது வைத்து
அதிகவை போகமுடன் பதிதனிலே கோல வேர
ஆராம் சுலட்ட விட கோபாலன் வந்த பிறகு
ஆணிப் பொன் பந்தலின் கீழ் மாணிக்கப்பாய் விரித்து
அண்டர் முனி டீதேவர்க்கும் பெய்களுக்கும் அமுது
ஆதி மகிழ்ச்சியுடனே பதிலளித்திடவே

ஆதி சிவனப் போது சீதனமான பெண் ரதிக்கு
ஆரோக்கிய மாபுரத்தை சீராகவே கொடுத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்கஜர்க்கு முடி சூடி இங்கீர்தமுடன் நாடி
அன்பாரதி மதவும் இன்பமாய் வாழ்ந்திருந்தார்

மதன் சொல்வுவது
கங்கை சடையோன் மகளே எங்கும் புகழ் ரதியே
கல்விக் கடலமுதே செல்வி என் ரத்தினமே
கூருத்திசைந்த கண்ணே காமன் கிளிமொழியே
கன்னி விலங்கனியே மெல்லிடை எனது கண்ணே
கூழகு முல்லை மாந்தளிரே செம்பந்தி செந்துளிரே
கூருங் கொண்ட கூந்தழகி வான்மீன் கணிணழகி
கயிலை வினி நாதன் தவம் நீதிக் குவையிதென்று
கண்ணாயிரம் இந்திரனார் விரைந்தோடி வாருமென்று
கூருதி அழைத்ததனால் விரும்பி கனையெடுத்து
கனத்த கவம் அருகில் தினத்துடன் நானேகி
கரும்பு மலர் தொடுத்து அரும்பு சுரந்தொடுத்து
கன தென்றல் தேரேரி கூருமுகில் வானம் தொட்டு
கரியுரியோன் தவசை சிறு துளியாய் நானொழித்து
காரினையே வாரேனடி தேரிலேயே வீட்டிரூடி
கலங்காம்மல் நீயிரூடி துலங்குமடி பஞ்சனையில்
கண்ணாலன் தேர் திருப்பி விண்ணம்மில்லாமலர்
வாரேன் கூருதி மொழியுரைத்தான் பஞசரகவேள்மதனார்

3. மதன் ரதி தர்க்கம்

மதன் ரதியிடம் விடை கேட்டல்

கட்டழகா மேனியரே ரதி கரம் தொட்ட மன்மதரே
கயிலான பதி யோகம் மனதிலே உறுதிக் கொண்டு
கங்கையிலே தலை முழ்கி மங்களாமாய் ஸ்நானம் செய்து
கடவுளை நமஸ்கரித்து திடமாகவே துதித்து
கூருங்கச்சை ஆபரணம் இலகு பச்சை தாவுடுத்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவசபுய மார்பணிந்து கிரிகட குண்டலமணிந்து
கச்சிதமாய் கணை உச்சிதமாய் கட்டி
கன்னி ரதியால் எதிரில் நின்று விடை கேட்டேனம்மா

இரதி மதனுக்கு மறுமொழி கூறல்

கட்டழகு மங்கை ரதி கொண்டவனார் தன்னுருவம்
கண்கள் இருண்டது போல் எண்ணிய பெண் மயிலே
கட்டி புரண்டழுது காலிலே தான் விழுந்து
கண்ணாலா என்துரையே என்னையா கோலமிது
கண்ணன் மன்னவரே தென்ற ரதமீதேறி
கரும்பு வில் கணையெடுத்து திரும்பிவருவீரே மன்னா
காதல் ரதியை பார்த்து வேல் மதனார் சொல்லையிலே
கண்ணாடி போல மதன் போர்க கோலம் தான் தரித்து
கன்னியே நீத மல்ல கால்பிடித்து நீ தடுக்க
கன்னாத்தையே எதிர்க்கும் மஞ்சல் கணையெடுத்து
கரும்பு சரங்களை தான் விரும்பியே தானெடுத்தார்

மதன் ரதிக்கு கூறல் (லாவணி)

கரும்பு கணை கையிலெடுத்து கன்னி ரதி நானிப்போ
கயிலங்கர போய் வாறேன் கன்னிரதி நானிப்போ
கைலேந்து கணையும் கொண்டேன் கன்னி ரதி நானிப்போ
தென்றல் இரதம் தேரேறி நான் பறந்தேன் கன்னிரதியே
தேதேரிறி பயணமுற்றார் காமன் துறையே நீ
தேம்பி ரதி நான் புலம்ப காமதுறையே நீயே
மாலையிட்ட மறுதினமே மன்னவனை நான் பிரிய
மலர் பானம் நீர் தொடுத்து மானிடம் போர் புரிய
கங்கணம் தவசினிலே ரதி தானிப்போ
கடும் போர் தொடுப்பதில்லை தேவி ரதியே இப்போ
கண்முடி திறப்பதற்குள் கண்களை நான் திருப்பி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காமன் கணை நான் எழுப்பி நாளைய தினம் திரும்பிடுவேன்

இரதி மதனுக்கு கூறல்

திரிபுர தகனமுற்றார் காமதுறையே நீ
ஈசனிடம் கணை தொடுத்தல் மோசம் வரும் என்றுகூறி
படிவிலகங்கன் படைத்த பிரமனிடம் எதிர்காதீர்
பால ஒரு ஞண்டவனே

மதன் இரதிக்கு கூறல் (லாவணி)

போதுமடி மாதரசி பொன்மொழிகள் ஏதுக்கடி
போர் கோலமலர் எடுத்து வைத்ததேன் பயணமென்று
போக விடையளிப்பீர் பொழுதோடி மறையுதடி
பொங்கி மனம் கலங்க மங்கை ரதி நீ இப்போ

அண்ணாவிப்பாடல்

கனவில் மறவேன் காம துறையே நீ
கன்னி ரதி பார்த்து உன்னிதமாய் கொல்லிவிட்டார்
கல்வி கடலோசை மெல்லியே நன்னோசை
கருத்தாக கேளும் பெண்ணே மனதேவன் நானுங் கண்ணே
கவனமுடன் வாரேனடி குணமுடனே நீயிருந்தால்
கலங்காமல் தாதியுடன் மனம் பதைக்காமல் பைங்கிளியே
கலங்காமல் நீயிருந்தால் மலர்ந்த முகம் செழித்திருக்கும்
கலங்காமல் தாதியுடன் மனம் பதைக்காமல் பைங்கிளியே
கலங்காமல் நீயிருந்தால் மலர்ந்த முகம் செழித்திடும்
கருமாரி மலர் தூவி திருமால் மகன் திரும்பி வருவேனடி
கண்ணன் மகள் ரதியே என்ன பவ்வதமாய் சொல்லி
கருத்தாக பயணமுற்றார் வருத்தக தேவர் சபை

மதன் தீய சகுணஙடகள் காணல்
அண்ணாவிப்பாடல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னை ரதியாலை விட்டு மதன் நாணயமாய் தேர்தொட்டு
அண்ட புவனமதில் அலை கடலும் தான் கலங்க
அன்பாய் ரதம் செழுத்தி இன்ப மதனாரு மங்கே
அதிவிரைவாய் போகயிலே சகுனங்கள் தோணுதுங்க
அலரிடவே காட்டுயானை மொட்டை பறக்துபார்
அலருதே ஆந்தைகளும் பதருதே புலிகளெல்லாம்
அரவமது சீறிடவே சிறகடித்து கழுகு பறக்க
அங்கிருந்து கங்கையோரம் மார்படிச்சி புலம்பையிலே
அண்ணாவிப்பாடல் (லாவணி)

அம்மாடி என்று சொல்லி கம்பாலன் எதிர் வரவே
அகிலமான் காமது கணபுரண்டோடிடவே
அலரியே நாய் நரிகள் குலரியே ஓலமிட
அருகிலே குட முட்டைகள் கருவிலே கூச்சலிட
அருங்கொக்கு நாணகளும் குருடன் மிதித்திடவே
அரண்மனையதில் மயில்கலெல்லாம் பதரியே ஓடிடவே
அரங்கொண்ட கூந்தழகி தலைவிரித்து தடுமாரி
அந்த வனத்திலே உன்னிடம் திட்டத்திலே
அண்டம் மிரண்டு வர முண்டகல் சிதறிவிடிக
அதியமாக தான் பார்த்து ஆனது ஆகட்டுமென்று
அன்று சகுணமெல்லாம் கண்டு மதன் கலங்கி
அஞ்சாமல் பதராமல் விரைவாய் ரதம் செழுத்தி
அமராபதி போகவுற்றால் மகாராசன் வேல் துறையே

4. தூதன் மன்மதனுக்கு ஓலை கொண்டுவரல்

அண்ணாவி பாடல்
தூதுவர் ஓலைக் கொண்டேருதல்

சகல மணி ஆபரணம் கலகலனவே யுடுத்து
சட்டென்று தானெழுந்து திருவோலைக் கைப்பிடித்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பையிலே தான் வணங்கி திசை பார்த்துததுமே கிளம்பி
சண்டப்பிரசண்டனாக சமர்த்துடனே தூதுவனார்
சர்வலோகமும் மதிர கர்வமாய் ஒலி துலங்க
சரீரங்கள் மின்னிவர சுடறொளி வீசிவர சாம்ராணி நொடி பறக்க
கண்டாடே தூதுவனார்
சடுதியில் தான் விரைந்தார் அரம்பான மனை வாசல்

அண்ணாவி பாடல்
காவலர் தடுத்தல்
தரவணி பதைக்க மின்ன சிரமணிகள் கொலிக்க
தனலாக அங்கமெல்லாம் அனல் கொண்டே துலங்க
தலைவாசல் காவலர்கள் நலமாக ஓடிவந்து தக தக மேனியாக
அங்கமெல்லாம் சுடராக
தன்னந்தனியாக இன்நேர வேலையிலே
தனஞ் செயனார் வாசலுக்கு விரைந்து வர காரமேன்
தப்பாமல் விபரமாக செப்புவாய் விரைவாக
கருத்துரைக்கு காவலர்கள் தூதுவனார் ஏதுரைப்பார்

தூதுவர் பதில்

கடுங்காவல் தான் மறிக்க கடுத்தூதர் ஏதுரைப்பார்
கண்கள் பொறி பறக்க காந்தானன் சூபமாக
கனவு தனலாக நின்ற கருதுவார் வார்த்தை ஒன்று
கண்ணாயிரம் படைத்த மண்டலத்தும் பொன்னதனார்
கனமுடன் அனுப்பி வைக்க குணமுள்ள தூதரென்று
கடுக உரையுமையா கட்டழகு மாறனாட்டம்

தூதன் மதனை சந்திப்பது

காவலர்கள் விடைபெற்று நேயமுடன் தூதுவனார்
கரந்தப்பனை ஓலையுடன் கொழு முனைக்குப் போகலுற்றார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கன்னிப் படையிருக்க மணிவட்டக் குடையிருக்க
கனமான கொழுவினிலே தெண்டிரை முரசிருக்க
கண்ணன் மகன் வீட்டிருக்க தாதிமார் சூழ்நதிருக்க
கண்டாரே தூதுவனார் சிந்தை மிகத் தளர்ந்து
கடகவே தான் கடந்துகட்டழகு வேல் துறையை
கரங் குவித்து அடிப்பணிந்து சிரங்குனிந்து முடி வணங்கி
கண்ணன் மகனாரே மண்வத்து ராஜனவர்
கன தேவர் அனுப்பி வைத்தார் சினத் தூது கொண்டு வந்தேன்
கருத்தான ஓலையதை மாமகன் கரந்தனிலே கொடுத்து
கருதி விடை பெற்று தேவர் பதி போகவுற்றார்

மாரியம்மன் பாடல்

மாயம்மன் தன் கதையை மனமகிழ்ந்து நான்பாட
கண்ணூறு மாரிமுத்தே கைதொழுது நான்பாட
நாவலமூல ஓமகுன்றம் நடுவது கனகசபை

லாவணி

உலகமெல்லாம் உன்கையில் உத்தமியே ஈஸ்வரியே
அட அக்காவும் தங்கையுமா ஐந்து இரண்டு ஏழுபேரும்
அந்த அக்காளும் தங்கையுமா ஆயன் மகன் வாசலிலே
மன்மதனார்க்கு வாய் திறந்து மகிழ்வான வார்த்தை சொல்லி
அட ஆகாது மன்மதரே இயாகாதீர் ஈசனிடம்
ஈசனிடம் நீ போனால் அமர்வதி மங்களியம்
தூன் அருந்து விடும் அந்த மகாராச வேல்துரையே யோகதீர்
வேலுமண்ணா
(என்றதுமே வாக்கு சொல்லி மாரியம்மா பயணமானார்)

இந்திரன் வருகை ~ லாவணி
ஆயிரங்கண் இந்திரனார் அனுப்பினாரு தூது அரிந்து வாரேன் மார்பு
எனை அனுப்பும் போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரட்ட செய்து நானிருந்தால் ஆகாதுநான் தூது
தானானானே தானனானே...
மாதுரதி சுவுக்கெடுக்க மன்னா என் திருனடய கண்ணா
